# பாவாணர்

# தமிழ்க்களஞ்சியம்–21



## சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்

தமிழ்மண் அறக்கட்டளை

# பாவாணர்
## தமிழ்க் களஞ்சியம்

21

# சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்

ஆசிரியர்
மொழிஞாயிறு **ஞா. தேவநேயப் பாவாணர்**

**தமிழ்மண் அறக்கட்டளை**
*சென்னை - 600 017*

*நூற் குறிப்பு*

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **பாவாணர் தமிழ்க் களஞ்சியம் - 21** |
| ஆசிரியர் | : | மொழி ஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : | 1967 |
| மறுபதிப்பு | : | 2009 |
| தாள் | : | 16 கி வெள்ளைத்தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 8 + 112 = 120 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. **110/-** |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | வ. மலர் |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ வெங்கடேசுவரா<br>ஆப்செட் பிரிண்டர்சு<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |

வெளியீடு

**தமிழ்மண் அறக்கட்டளை**

**"பெரியார் குடில்"**

பி.11 குல்மொகர் குடியிருப்பு,
35 செவாலிய சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர்,
சென்னை - 600 017. தொ.பே. 2433 9030

மின்னஞ்சல் : tm_pathippagam@yahoo.co.in
இணையதளம் : www.tamilmann.in

# பதிப்புரை

*தமிழுக்கும் தமிழருக்கும் வளமும் வலிமையும் சேர்க்கக் கூடிய பழந்தமிழ் நூல்களையெல்லாம் தேடியெடுத்துத் தமிழ் கூறும் உலகிற்கு வழங்கும் தொலைநோக்குப் பார்வையுடன்* **தமிழ்மண் பதிப்பகம்** *தொடங்கப்பட்டது. அதன் வாயிலாக மொழிஞாயிறு பாவாணரின் நூற்றாண்டு நினைவாக அவர் எழுதிய நூல்கள் அனைத்தையும் சேர்த்து அவருடைய மறைவுக்குப் பிறகு 2000-த்திலும், பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் வெளிவந்து, நூல் வடிவம் பெறாத பாவாணரின் அரிய கட்டுரைகளை எல்லாம் தொகுத்து 2001- லும் ஒருசேர வெளியிட்டு உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கு வழங்கினோம். பாவாணர் வழி நிலை அறிஞர்களான முதுமுனைவர்* **இரா. இளங்குமரனார்** *அவர்களும், மருத்துவர்* **கு.பூங்காவனம்** *அவர்களும் இவ்வரிய கட்டுரைப் புதையல்கள் நூல் வடிவம் பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர். இப்பெருமக்களை நன்றியுணர்வுடன் நினைவுகூர்கிறேன்.*

*“சொல்லாராய்ச்சித் துறையில் தேவநேயர் ஒப்பற்ற தனித் திறமையுடைவர் என்று* **மறைமலையடிகளும்,** *நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று* **பாவேந்தரும்,** *தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் நற்றொண்டு ஆற்றியவர் பாவாணர் என்று* **பேரறிஞர் அண்ணா** *அவர்களும், வெட்ட வெட்டக் கிடைக்கும் தங்கச் சுரங்கம் போன்றவர் என்று தமிழறிஞர்* **இராசமாணிக்கனாரும்,** *தமிழகம் மொழித்துறையிலே பாவாணர் போன்ற ஒரு அறிஞரை இன்னும் பெற்றுத் தரவில்லை என்று* **பன்மொழிப் புலவர் அப்பாத்துரையரும்,** *குறைமதியர் தேக்கிவைத்த கரையிருளை நீக்க வந்த மறைமலையார் வழிவந்த நிறைமலையார் பாவாணர் என்று மேனாள் பேரவைத்தலைவர்* **தமிழ்குடிமகன்** *அவர்களும், தமிழர் யார்? எதிரிகள் யார்? என்று ஆய்ந்து அறிந்து காட்டியவர் பாவாணர் என்று பேராசிரியர்* **இளவரசு** *அவர்களும், ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்தபின் வாராது போல வந்த மாமணி” பாவாணர் என்று முதுமுனைவர்* **இளங்குமரனார்** *அவர்களும் குறிப்பிட்டுள்ள பெருமைகளுக்குரிய பேரறிஞரின் நூல்களை மீள்பதிப்பக வெளியிடுவதில் பெருமை கொள்கிறேன்.*

“பாவாணர் நூல்கள் அத்தனையும் தமிழ்மொழிக்கு ஏற்றம் உரைப்பன. தமிழை ஆரிய இருளினின்று மீட்டுக் காப்பன. வீழ்ந்து பட்ட தமிழனுக்கு விழிப்பூட்ட வல்லன. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக்கிடக்கும் தமிழ்மொழியை மீட்கவல்லது” என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் கூற்றை இக் களஞ்சிய வெளியீட்டில் பதிவு செய்வது எமது கடமையாகும்.

பாவாணரைத் தூக்கிப் பிடித்தால்தான் தமிழினம் உருப் படமுடியும் - உயரமுடியும். பாவாணர் கொள்கைகள் தமிழர் உள்ளமெல்லாம் நிலைத்து நிற்பதற்கும், பாவாணர் நூல்கள் தமிழர் இல்லமெலாம் இடம் பெறுவதற்கும் முன் குறிப்பிட்ட 2000 - 2001 காலக்கட்டத்தில் வெளியிடப்பட்ட பாவாணரின் அறிவுக் கருவூலங்களையெல்லாம் ஒட்டு மொத்தமாக சேர்த்து ஒரே வீச்சில் **பாவாணர் தமிழ்க் களஞ்சியம்** எனும் தலைப்பில் எம் அறக்கட்டளை வெளியிடுகிறது.

மறைக்கப்பெற்ற மாபெரும் வரலாற்றையும், சிதைக்கப் பெற்ற ஒப்புயர்வுயற்ற மொழியையும் கொண்ட தமிழினத்தின் முன்னேற்றம் கருதி இவ்வருந்தமிழ் புதையல்களை தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்க முன் வந்துள்ளோம். தமிழ் மொழியை மூச்சாகவும், பேச்சாகவும், செயலாகவும் கொண்டு ஒருநாளின் முழுப்பொழுதும் தமிழாகவே வாழ்ந்த செம்புலச்செம்மல், தனித்தமிழ்க் கதிரவன் மொழிஞாயிறு பாவாணர் நூல்களை வாங்கிப் பயன் கொள்வீர்.

இளமையிலேயே பொதுத்தொண்டிலும், தனித்தமிழ் இயக்கத் தொண்டிலும் நான் ஈடுபாடு கொள்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் **பெரும்புலவர் நக்கீரன்** அவர்களும், அவர்தம் இளவல் **புலவர் சித்திரவேலன்** அவர்களும் ஆவர். இவர்களை இவ்வெளியிட்டின் வாயிலாக நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறேன். தந்தை பெரியாரின் தன்மதிப்பு இயக்கக் கொள்கை களாலும், மொழிஞாயிறு பாவாணரின் தனித்தமிழ் இயக்கக் கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டவன். அத்தகு பின்புலத்தோடு பதிப்புப்பணியில் என் காலடிச் சுவடுகளைப் பதித்து வருகிறேன்.

**கோ. இளவழகன்,**
**பதிப்பாளர்.**

# வான்மழை வளச்சுரப்பு

ஆழத்துள் ஆழமாய் அகழ்ந்து **தங்கம்** ஏன் எடுக்கப்படுகிறது? ஆழ்கடலுள் சென்று, உயிரைப் பணயம் வைத்து **முத்துக்** குளிக்கப் படுவது ஏன்? **பவழப்** பாளங்களை எடுப்பது ஏன்? **வயிரம்** முதலாம் மணிக்குலங்களை இடையறாமல் தேடித் தேடி எடுப்பது ஏன்?

அணிகலப் பொருள்கள் என்பதற்கு மட்டுமா? வீட்டிற்கு மட்டுமன்றி நாட்டுக்கும் ஈட்டுதற்கு அரிய **வைப்பு வளமாக** இருந்து, நாட்டின் பொருளியல் மேம்பாட்டுக்கு **அடிமணை யாகவும்** இவை இருப்பதால் தானே!

இவற்றினும் மேலாம் வைப்பு வளமும் உண்டோ? உண்டு! உண்டு! அவை **சான்றோர் நூல்கள்**

காலம் காலமாக அள்ளிக் கொண்டாலும் வற்றா வளமாய்த் திகழும் **அறிவுக் கருவூலமாம் நூல்கள்!**

ஒன்றைக் கற்றால் ஒரு நூறாய் ஓராயிரமாய்ப் பல்கிப் பெருகத் தக்க பெறற்கரிய **தாய் நூல்களாம்** பேறமைந்த நூல்கள்! **சேய்நூல்களை ஈனவல்ல செழு நூல்கள்!**

நுண் மாண் நுழைபுலத் **தாய் நூல்களாய் இருப்பினும்!** அவற்றைத் தாங்கிய **தாள்கள்,** எத்தகைய பேணுதல் உடையவை எனினும் கால வெள்ளத்தில் அழியக் கூடியவை தாமே!

**கல்லெழுத்தே,** கதிர் வெப்பாலும் கடலுப்பாலும் காத்துப் பேணும் கடப்பாடில்லார் கைப்படலாலும் அழிந்து பட்டமை கண்கூடு தானே!

**ஏட்டு வரைவுகள்,** நீரே நெருப்பே நீடித்த காலமே புற்றே போற்றா மடமையே என்பவற்றால் அழிந்து பட்டமைக்கு அளவு தானும் உண்டோ? மக்களுக்கு மாணப் பெரிய பயனாம் நூல்கள், கற்கும் மக்கள் பெருக்கத்திற்கும், பிறந்து பெருகிவரும் மக்கள் பெருக்கத்திற்கும் தக்க வகையில் அவர்களுக்குப் பாட்டன்

*பாட்டியர் வைத்த* ***பழந்தேட்டென்ன*** *அந்நூல்கள், மீளமீளத் தட்டில்லாமல் கிடைக்கச் செய்ய வேண்டுவது* ***நூற்பதிப்பர்*** *தவிராக் கடமையல்லவோ!*

*அக்கடமையை அவர்கள் காலந்தோறும் கடப்பாடாகக் கொண்டு செய்ய, ஆளும் அரசும் வாழும் அறிவரும் அருந்நுணையாதல் தானே கட்டாயத் தேவை! இவ்வாறு பதிப்பரும் அறிவரும் ஆன்நரும் தத்தம் மூச்சுக் கடனாக,* ***நூற்கொடை புரிதலுக்கு மேற்கொடை இல்லையாம்!***

***மொழிஞாயிறு பாவாணர் நூல்கள்*** *ஒன்றா இரண்டா? நமக்கு எட்டாதவை போக எட்டிய நூல்கள் 32. கட்டுரை பொழிவு முதலாம் வகையால் கிட்டிய திரட்டு நூல்கள் 12. இன்னும்* ***எட்டாத தொகுப்பும்*** *அங்கொன்றும் இங்கொன்றும் வர வாய்ப்புண்டு!*

***கடித வரைவு பா வரைவு*** *என மேலும் பெருகவும் வாய்ப்புண்டு!*

*இவற்றை எல்லாம் ஆயிரம் அச்சிட்டு அவ்வளவில் நின்று விட்டால், தேடுவார்க்குத் தேடும் பொழுதில் வாய்க்கும் திருவாகத் திகழக் கூடுமோ?*

*ஆதலால்,* ***சேய் நூல்களுக்கு மூலமாம் தாய்நூல்கள், காலம் தோறும் வான்மழை வளச் சுரப்பாக வெளிப்பட வேண்டும் கட்டாயம் உணர்ந்து கடமை புரியும் வீறுடையார் வேண்டும்! மிக வேண்டும்!***

*இத்தகைய விழுமிய வீறுடையர் - இனமானச் செம்மல் - தமிழ்ப் போராளி - திருத்தரு* ***கோ. இளவழகனார்,*** *தாம் முந்து முழுதுறக் கொணர்ந்த பாவாணர் படைப்புகளை மீளமீளத் தமிழுலாக் கொள்ள வைக்கும் முன் முயற்சியாய், இம்* ***மீள்பதிப்பை வழங்குகிறார்!*** *தமிழுலகம் பயன் கொள்வதாக! பயன் செய்வதாக!*

*வாழிய நலனே! வாழிய நிலனே!*

***இன்ப அன்புடன்***

***இரா. இளங்குமரன்.***

# முகவுரை

*ஒரு மொழிக்குட்பட்ட சொற்களை ஆராயும் சொல்லாராய்ச்சி யும், பல மொழிகளை ஒப்புநோக்கும் மொழியாராய்ச்சியும், மேனாட்டாரிட மிருந்து அண்மையில் நாம் அறிந்தவை.*

*''இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்*
*றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே''*

*என்று தொல்காப்பியர்காலத்திலேயே சொல்லாய்ச்சியும் மொழி யாராய்ச்சி யும் ஓரளவு தமிழ்நாட்டிலிருந்ததேனும், விரிவான முறையிலும் நெறிப்பட்ட வகையிலும்* ***சொன்னூலும்***(Etymology), ***மொழிநூலும்*** *(தஹீதிதூளுதூளுப்பீ) நாம் பெற்றது மேலையரிடமிருந்தே.*

*சொன்னாலும் அதை யடிப்படையாகக் கொண்ட மொழிநூலும்,* ***மாந்தனூல்***(Anthropology), ***உளநூல்***(Psychology), ***வரலாற்று நூல்***(History) *ஆகிய மூன்றிற்கும் உறுதுணை செய்தலின், பண்பட்ட மக்கள் யாவரும் அவற்றைக் கற்றல் வேண்டும்.*

*எல்லா மொழிகளும் இயற்கையாய் எழுந்தவை யென்றும், கடவுளைப் போல் தொடக்க மற்றவையென்றும், ஒன்றோடொன்று தொடர்பற்றவை யென்றும், சில மொழிகள் தேவ மொழியென்றும், தேவ மொழியில் வழிபாட்டை நடத்துவது கடவுட் குகந்ததென்றும், தமிழ் வடமொழியினின்று வந்தது அல்லது அதனால் வளம் பெற்றது என்றும், பல பேதைமைக் கருத்துக்கள் பல தமிழர் உள்ளத்தில் வேரூன்றியிருப்பதால், அவற்றைப் பெயர்த்து அவர்களை மொழிநூற் கல்விக்குப் பண்படுத்தும் வண்ணம், இச்சொல்லாராய்ச்சி நூல் வெளிவருகின்றது.*

*இந்நூலிலுள்ள கட்டுரைகள், ஆங்கிலத்தில்* ***திரெஞ்சுக்*** *கண்காணியார்* (Trench) *எழுதியுள்ள* **சொற்படிப்பு** (On the study of Words) *என்னும் கட்டுரைத் தொகுதியின் போக்கைத் தழுவி எழுதப் பெற்றவை.*

*என்னைப் பல்லாற்றானும் ஊக்கி, இந்நூல் விரைந்து இயல்வதற்குக் காரணமாயிருந்த சேலம் நகராண்மைக் கல்லூரித் தலைவர் திரு. அ.இராமசாமிக் கவுண்டர்,* M.A., L.T., *அவர்கட்கு யான் என்றும் கடப்பாடையேன்.*

*''குணநாடிக் குற்றமும் நாடி யவற்றுள்*
*மிகைநாடி மிக்க கொளல்''*

- ***ஞா.தேவநேயன்***
*சேலம். 29.12.'48*

# உள்ளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | பதிப்புரை | ... | iii |
| | வான்மழை வளச்சுரப்பு | ... | v |
| 1. | அணியியற் சொற்கள் | ... | 3 |
| 2. | வரலாற்றுச் சொற்கள் | ... | 16 |
| 3. | மெய்ப்பொருட் சொற்கள் | ... | 29 |
| 4. | ஒருபொருட் பல சொற்கள் | ... | 36 |
| 5. | தமிழ்ச்சொல் வளம் | ... | 58 |
| 6. | பலபொரு ளொருசொற்கள் | ... | 69 |
| 7. | வழக்கற்ற சொற்கள் | ... | 72 |
| 8. | பொருள்திரி சொற்கள் | ... | 83 |
| 9. | ஒழுக்கவியற் சொற்கள் | ... | 94 |
| 10. | சொற்குடும்பமும் குலமும் | ... | 104 |

# சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்

# 1

# அணியியற் சொற்கள்

> ''பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
> சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
> வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்'' **(நன். 268)**

என்று **பவணந்தி முனிவர்** கூறினாரேனும், அணி செய்யுட்கே சிறப்பாக வுரியது என்பது அவர் கருத்தன்று. சில உடம்புகளில் இயற்கையாய் அழகு அமைந்து கிடப்பதுபோல, வல்லோர் செய்யுள்களிலும் இயல்பாக அணி அமைந்திருக்கும் என்பதே அவர் கருத்தாகும். அஃதாயின், அல்லோர் செய்யுளில் அணி இயல்பாய் அமைந்திராது என்பதும் பெறப்படும். இனி, வல்லோர் செய்யுளில் மட்டுமன்றி, அவர் உரைநடையிலும் அணி அமைந்திருப்பது இயல்பே, ஆகவே, அணியானது செய்யுள், உரைநடை ஆகிய இரண்டற்கும் பொதுவாம்.

பொருளை விளக்குவதும் அழகுபடுத்துவதுமே அணியின் நோக்கமாதலானும், செய்யுளிற் போன்றே உரைநடையிலும் அழகிய கருத்துகள் அமையுமாதலானும், கருத்தின் அழகே அணியாதலானும், உரைநடைக்கும் அணி உரித்தென்னும் கூற்றில் யாதொரு வியப்புமின்று. இதனாலேயே, தொல்காப்பியத்தில் செய்யுளிற்கு முன்னர், அணியியற்பாற்பட்ட உவமவியல் கூறப்பட்டதென்க.

ஒரு கருத்தைத் தெரிவிக்க ஒரு சொற்றொடரே வேண்டுமென்னும் யாப்புறவில்லை. ஒரு சொல்லாலும் ஒரு கருத்தைத் தெரிவிக்கலாம். ஆகவே, தனிச்சொற்களிலும் அணி அமைதற் கிடனுண்டு.

அணிகட்கெல்லாம் தாயானதும் தலைமையானதும் உவமையே யாதலானும், தொல்காப்பியத்துள்ளும் அஃதொன்றே கூறப்படுதலானும், இக் கட்டுரையில் பெரும்பாலும் உவமையணிச்

சொற்களே, அவற்றுள்ளும் கவனிக்கத்தக்க ஒரு சிலவே, கூறப்படும்.

### 1. உயர்திணைப் பொருளுக்கு அஃறிணையுவமம் பெண்ணியல்

ஆடவன் பெண்டு ஆகிய இருபாலருள், பெண்டு மிக மெல்லிய ளாதலின், **கொடி** எனப்படுவாள். இதனாலேயே, குறிஞ்சி நிலப் பெண்டிற்குக் **கொடிச்சி** என்று பெயர்.

> ''சுற்றார் வல்லிற் சூடுறு செம்பொற் கழலாற்குக்
> குற்றேல் செய்தும் காளையும் யானும் கொடியாளை
> மற்சேர் தோளான் தன்மரு மானுக் கருள்செய்யப்
> பெற்றேன் என்னப் பேசினன் வாசங் கமழ்தாரான்'' **(சீவக. 1057)**

என்னுஞ் செய்யுளிற் குணமாலை யென்பவளைக் **கொடியாள்** என்றார் **திருத்தக்கதேவரும்**.

இனி, பெண்ணைக் கொடியென உவமையாகுபெயராற் குறிப்பது மட்டுமன்றி, பெண்கொடி என உருவக வாய்பாட்டாற் கூறுவதுமுண்டு.

புல் பூண்டு செடி கொடி மரம் என்னும் ஐவகை நிலைத்திணை (தாவர) உயிர்களுள், பெரும்பாலும் மெல்லியதும் விரைந்து வளர்வதும் ஒரு கொள்கொம்பைப் பற்றிப் படர்வதும் கொடியே. பெண்ணைக் கொடியென்று சொன்னவளவிலேயே, அவள் ஆடவனிலும் மெல்லியள் என்றும், அவனிலும் விரைந்து வளர்பவளென்றும், ஒரு கொழுநனைத் துணைக்கொண்டே வாழ்பவளென்றும், மூன்று பெண்பாற் குணங்கள் குறிப்பா யறியக்கிடக்கின்றன.

கொள்கொம்பு, கொள்நன் என்ற இரு பெயர்களும், கொள் என்னும் சொல்லையே முதனிலையாகக் கொண்டிருப்பதும், முறையே கொழுகொம்பு, கொழுநன் என மருவித் திரிவதும், கவனிக்கத்தக்கன. கொள்கொம்பு என்பதில் கொள்ளுதல் தொழில் கொடியினதாகவும், கொள்நன் என்பதில் அத் தொழில் கணவனதாக வும் கொள்ளப்படும்.

### 2. மக்கள் உறவும் தொடர்ச்சியும்

மக்கள் தங்களைப் பயிருக்கு அல்லது மரத்திற்கு ஒப்பாகக் கருதிக்கொள்வது வழக்கம். கடவுட் காப்பைக் கருதி, ''மரத்தை

நட்டவன் தண்ணீர் விடமாட்டானா?'' என்று கூறுவதும், மணமக்களை, 'ஆயிரங்காலத்துப் பயிர்' என்றழைப்பதும் **உலக வழக்கு**.

மகனைக் **கொம்பன்** என்றும், மகளைக் **கொம்பு** என்றும், இருவரையும் பொதுப்படக் **குலக்கொழுந்து** என்றும் கூறுவது வழக்கம். பெற்றோர் மரம்போல்வராயின், பிள்ளைகள் கிளைகளும் கொழுந்தும் போல்வர். ஒரு மரத்தின் அடியில் முளைக்கும் முளையைப்போன்று மகனிருத்தலின், அவனுக்குக் **கான்முளை** என்றும் பெயர்.

பல குடும்பங்கள் சேர்ந்த ஒரு குடியை ஒரு மரமாகக் கொள்ளின், அக் குடும்பங்கள் அதன் கிளைகளைப் போன் றிருத்தலால், இனத்திற்குக் **கிளை**யென்றும், இனத்தார்க்குக் **கிளைஞர்** என்றும் பெயர்.

பல தலைமுறையாகத் தொடர்ந்துவரும் குலத்தொடர்ச்சி கொடியும் மரமும்போல நீண்டும் தொடர்ந்துமிருத்தலின், அதனைக் **கொடி** என்றும், **கொடிவழி** என்றும், **மரபு** என்றும் கூறுவது வழக்கம். வித்தும் வேரும் அடியும் கிளையும் குச்சுங் கொழுந்துமாகத் தொடர்ந்தோங்கும் மரம்போல மேன்மேல் தொடர்ந்து செல்லும் குலத்தொடர்ச்சி மரபு[1] எனப்பட்டது. தந்தைமகன் வழிமுறையாக அல்லது ஆசிரிய மாணவ வழிமுறையாகத் தொடர்ந்துவரும் வரன்முறையை **வாழையடி வாழை** முறை யென்பர்.

''வாழையடி வாழையென வந்த திருக்கூட்டம்''

என்றார் இராமலிங்க அடிகளும்.

இனி, தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்துவரும் திருமணவுறவைக் கால் என்பதும் தொடர்ச்சிபற்றியே. கால் என்பது வாய்க்கால். ''பழங்காலைத் தூர்க்காதே, புதுக்காலை வெட்டாதே'' என்பது **பழமொழி**.

### 3. அரசனும் குடிகளும்

ஆயன் ஆக்களைக் காப்பதுபோல அரசன் மக்களைக் காத்தலால், அரசனுக்குக் கோவன் என்று பெயர். **கோவன்** என்பது

1. தொடர்ந்துவரும் பழக்கவழக்கங்களையும் சொல்வழக்காற்றையும் மரபு என்பதுமுண்டு. தொல்காப்பியத்திலுள்ள மரபியல் என்னும் இயற்பெயர் இப் பொருள்பற்றியதே.

முறையே **கோன் - கோ** எனத் திரியும்; கோ பசு. கோக்களை மேய்ப்பதுபற்றி ஆயனுக்குக் 'கோன்', 'கோனார்' என்னும் ஒருமைப் பெயரும் உயர்வுப் பன்மைப் பெயரும் வழங்குதல் காண்க. ஆயனைக் குறிக்கும் 'கோன்' என்னும் சொல்லும், அரசனைக் குறிக்கும் **'கோன்'** என்னும் சொல்லும் ஒன்றே. அரசனுக்கும் குடிகட்கும் உள்ள தொடர்பு ஆயனுக்கும் ஆநிரைக்கும் உள்ள தொடர்பு போன்றது என்பதே, கோன் என்னும் சொல்லால் குறிக்கப் படும் கருத்தாம்.[2] அரசன் கையிலுள்ள கோலும் ஆயன் கைக்கோல் போன்றதே. கோல் என்னும் சொல் ஆகுபெயர்ப் பொருளில் அரசாட்சியைக் குறிக்கும். நேர்மையான ஆட்சி செங்கோல் என்றும், கொடுமையான ஆட்சி கொடுங்கோல் என்றும் சொல்லப்படும்.

இனி, சிவபெருமானும் உயிர்களையெல்லாம் காப்பதில் ஆயனை அல்லது அரசனை ஒப்பவராதலின், 'கோவன்' எனப்படுவர். உயிர்களை அல்லது ஆன்மாக்களைப் பொதுப்படப் 'பசு' வென்பதும், சிவபெருமானைப் 'பசுபதி' என்பதும் வடமொழி வழக்கு.

### 4. வாழ்க்கையியல்பு

இவ் வுலக வாழ்க்கை ஓர் ஆற்றை அல்லது கடலைப் போன்றது. இவ் வுலக இன்பமாகிய சிற்றின்பத்திற் பற்றுவைத்து வாழ்வது, அந் நீர்நிலையில் மூழ்கியிறப்பதையும், பற்றற்று வாழ்வது அதை நீந்திக் கரையேறி யுய்வதையும் நிகர்க்கும். இதனால், உலகப் பற்றொழித்துப் பேரின்ப வீட்டையடைதற்குக் **கரையேறுதல்** என்றும், வீட்டுலக வாசிகளுக்கு **அக்கரையர்** என்றும் பெயர்.

''நீற்றைப் புனைந்தென்ன? நீராடப் போயென்ன? நீமனமே
மாற்றிப் பிறக்க வகையறிந் தாயில்லை மாமறைநூல்
ஏற்றித் தொழூஉம்[3] எழுகோடி மந்திரம் என்னகண்டாய்?[4]
ஆற்றைக் கடக்கத்[5] துறைதெரி யாமல் அலைகின்றையே!''

**(பொது. 40)**

என்றார் **பட்டினத்தாரும்.**

இனி, இப் பிறவியை மட்டுமன்றி ஓர் உயிரின் பிறவி யனைத்தையும் கடலாக உருவகிப்பதே பெருவழக்காம்.

2) கிறித்தவக் குருமாரை இக் கருத்துப்பற்றியே ஆங்கிலத்தில் shepherd என்றும், மீநிவுலுளூகி என்றும் அழைப்பர். கிறித்தவ சபையார் ஆடுகளும் அச் சபைக் குருமார் மேய்ப்பரும் போல்வர். ''நானே நல்ல மேய்ப்பன்'' என்றார் ஏசுபெருமானும்.

பாடவேறுபாடு : 3. ஏற்றிக் கிடக்கும், 4. ஏதுக்கடா, 5. ஆற்றிற் கிடந்தும்.

*''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவன் அடிசேரா தார்''* ***(குறள். 10)***

*என்றார் திருவள்ளுவர்.*

*பிறவிக் கடலினின்று ஆன்மாக்களைக் கரையேற்றுபவர் என்னும் கருத்தை யுட்கொண்டே, சமயகுரவரைத் தீர்த்தங்கரர் என்பர் சமணர். தீர்த்தம் என்பது நீர்நிலையைக் குறிக்கும் வடசொல்.*

## 5. சில குணமும் செயலும்

*பாம்புகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து தழுவுந் தொழிலிற் சிறந்தவை. இதனால், முதலாவது ஒருவரையொருவர் உடலால் கட்டித் தழுவுவதையும், பின்னர் உள்ளத்தால் ஒன்றித் தழுவு வதையும் அன்பாகப் பேணிக் காத்தலையும், குறிக்க* ***அரவணைத்தல்*** *என்னும் வழக்கெழுந்தது. அரவு, பாம்பு; அணைத்தல், தழுவுதல். ''மாசுண மகிழ்ச்சி'' என்றார்* ***திருத்தக்கதேவரும்****. (சீவக. நா. 189)*

*நிறைகோலின் நாவு இருபுறமும் சமனாய் நிற்குமாறு நடு நிற்றல்போல, பகை நட்பு அயல் என்னும்முத்திறத்தும் ஒத்தநிலை* ***நடுநிலை*** *அல்லது* ***நடுவுநிலை*** *எனப்பட்டது.*

*தீயைப்போல் தீங்கு செய்யும் தன்மை* ***தீமை*** *என்றும், நீரைப் போல் நன்மை செய்யும் தன்மை* ***நீர்மை*** *என்றும், புல்லைப்போல் இழிந்த நிலை* ***புன்மை*** *என்றும் சொல்லப்படும். முதலாவது இனிய தன்மையைக் குறிக்க எழுந்த நீர்மை என்னும் சொல், இன்று தன்மையென்னும் பொதுப்பொருளையே குறிக்கின்றது.*

*''ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்''* ***(கொ.வே.)***

*என்னும் ஒளவையார் கூற்றில்* ***ஈயார்*** *என்பது ஈயாதவர் என்றும், தேனீக்கள் அல்லது தேனீயைப் போன்றவர் என்றும்;* ***தீயார்*** *என்பது கொடியவர் என்றும், தீப்பந்தம் பிடித்தவர் என்றும், உவமை யணியோடு இரட்டுறலணியும் கொண்டிருத்தல் காண்க.*

*''உடாஅதும் உண்ணாதுந் தம்முடம்பு செற்றும்*
*கெடாஅத நல்லறமுஞ் செய்யார் – கொடாஅது*
*வைத்தீட்டி னாரிழப்பர், வான்தோய் மலைநாட*
*உய்த்தீட்டுந் தேனீக் கரி''* ***(நாலடி. 10)***

*என்பது நாலடியார்.*

### 6. நூலும் செய்யுளும்

நெயவு நூலுக்கும் அறிவு நூலுக்கும் பல பெயர்கள் பொதுவாக வுள்ளன. இரண்டும் நூற்பெயர் பெற்றமைக்குக் காரணத்தை,

> "பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
> செஞ்சொற் புலவனே செயிழையா – எஞ்சாத
> கையேவா யாகக் கதிரே மதியாக
> மையிலா நூல்முடியு மாறு" **(நன். 24)**

எனவும்,

> "உரத்தின் வளம்பெருக்கி உள்ளிய தீமைப்
> புரத்தின் வளமுருக்கிப் பொல்லா – மரத்தின்
> கனக்கோட்டந் தீர்க்குநூல் அஃதேபோல் மாந்தர்
> மனக்கோட்டம் தீர்க்குநூல் மாண்பு" **(நன். 25)**

எனவும், உன்னித்துக் கூறினார் **பவணந்தியார்.**

பருத்தி நூலுக்கும் அறிவு நூலுக்கும் பனுவல் என்பதும் பொதுப் பெயர்.

இழைபு என்றொரு நூல்வகையின் இலக்கணம் **தொல்காப் பியத்தில்,**

> "ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடக்காது
> குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்து
> ஓங்கிய மொழியான் ஆங்கனம் ஒழுகின்
> இழைபின் இலக்கணம் இயைந்த தாகும்" **(தொல். பொருள். 554)**

எனக் கூறப்பட்டுள்ளது. இழைபு என்னும் பெயர் நூலை அல்லது இழைத்தலைக் குறிக்கும் இழை என்னும் சொல்லடியாய்ப் பிறந்ததாகும்.

பா என்பது, நெயவுப்பாவிற்கும் செய்யுட்பாவிற்கும் பொதுப் பெயர்.[6]

இங்ஙனம் நூலும் நெயவும்பற்றிய சொற்கள் அறிவுநூலையும் செய்யுட்பாவையும் குறிக்க வருதலால், நெயவுத் தொழிலுக்கும் செய்யுள் தொழிலுக்கும் யாதேனும் ஒப்புமையுண்மை பெறப்படும்.

---

6. ஆங்கிலத்திலும் நூற்பொருளைக் குறித்தற்கு நெசவுத் தொழிலினின்று விஷ்ஜலு, பீநியூற் என்னும் இருசொற்கள் எடுத்தாளப் பெறுகின்றன. (E. Text from L. Texre, weave.) நூல் மடியைக் குறிக்கும் Yawn என்னும் சொல், ஓசுநர் (Sailors) கூறும் கதைக்குப் பொதுப்பெயராகும். அதை Sailor's yawn என்பர்.

முதலாவது இருவகை நூலையும் நோக்கின், அவற்றுக்குப் பொதுவான **நுண்மை, நீட்சி, நேர்மை** என்னும் மூவியல்புகள் புலனாகும். பஞ்சினால் நெயவு நூலிழைப்பதுபோலச் சொல்லால் அறிவு நூலிழைத்தல், அல்லது சிலந்தி பட்டுப்பூச்சி முதலியவற்றின் உடம்பினின்று வெளிவரும் நெயவு நூலைப்போலப் புலவனின் உள்ளத்தினின்று அறிவுநூல் வெளிப்படுதல், மற்றுமொரு பொதுத் தன்மையாகும்.

இரண்டாவது இருவகைப் பாவையும் நோக்கின், அவற்றிற்குப் பொதுவான நீட்சி, பரப்பு, இசைப்பு ஆகிய மூவியல்புகள் புலனாகும்.

7. கருமநிலை

ஒரு வினைத்தொடக்கத்தை அரும்புநிலைக்கும்அதன் விரிவை அலர்நிலைக்கும் ஒப்பிட்டுக் கூறுவது வழக்கம். இரு காதலரின் களவொழுக்கத்தை ஓரிருவர் அறிந்து மறைவாய்ப் பேசுவதை **அம்பல்** என்றும், பலர் அறிந்து வெளிப்படையாய்ப் பேசுவதை **அலர்** என்றும் அகப்பொரு ளிலக்கணம் கூறும். அம்பல் - அரும்பு. அலர் - விரிந்த மலர்.

8. வறுமை

வறுமையால் வருந்தும் மாந்தர் நொய்ய வுடம்புடன் வள்ளலாரை நாடி அங்குமிங்கும் அலைந்து திரிதல், ஆலிலையும் இலவம்பஞ்சும் ஆடிக்காற்றில் அங்குமிங்கும் பறந்து திரிவதை யொக்கும். இதனால், **ஆலாய்ப் பறத்தல், பஞ்சாய்ப் பறத்தல்** என்னும் வழக்குகள் எழுந்தன. எளிமையைக் குறிக்கும் பஞ்சை என்னும் சொல்லும், வற்கடத்தைக் குறிக்கும் பஞ்சம் என்னும் சொல்லும், **பஞ்சாய்ப் பறத்தல்** என்னும் வழக்கினின் றெழுந்தவை யாகும்.

“ மூவேந்தரும் அற்றுச் சங்கமும் போய்ப்பதின் மூன்றோடெட்டுக்
கோவேந்த ரும்அற்று மற்றொரு வேந்தன் கொடையும்அற்றுப்
பாவேந்தர் காற்றில் இலவம் பஞ்சாகப் பறக்கையிலே
தேவேந்த்ர தாருஒத் தாய்ரகு நாத சயதுங்கனே!”

என்ற **படிக்காசுப்புலவர்** பாட்டை நோக்குக.

### 9. நோய்

உடம்பில் தலைக்குக்கீழ் எங்கேனும் புறப்படும் கொப்புளம், சிலந்திப் பூச்சியின் உடல்போல் திரண்டிருந்தலால், சிலந்தியெனப் பெயர்பெற்றது.[7]

அம்மைக் கொப்புளம் முத்துப்போன் றிருத்தலால், அதை முத்தென்றே அழைப்பர். அதனால், மாரிக்கு முத்துமாரியம்மன் என்றொரு பெயர் வழக்குமுண்டு.

### 10. இறப்பு

மக்கள் பிறப்புக் கண்விழிப்பும், அவரது இறப்புக் கண்ணடைப்பும் போன்றது. வாழ்க்கை முழுதும் ஒரு பகல் நடபடிக்கை போன்றதே. பெற்றோர் தம் பிள்ளைகளைத் தம் கண்ணுள்ளபோதே கரையேற்ற வேண்டுமென்று சொல்வது வழக்கம். பகல் முடிந்து இரவு வந்தபின் கண்மூடித் தூங்குவதுபோல, வாழ்க்கை முடிந்த போதும் மக்கள் தம் கண்மூடி விழியாத் துயில்கொள்வர்.

''உறங்கு வதுபோலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு'' **(குறள். 339)**

''துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்'' **(குறள். 926)**

என்றார் **திருவள்ளுவர்.**

### 11. அஃறிணைப் பொருளுக்கு உயர்திணை யுவமம்

மக்களுள், மிகக் குள்ளமானவனுக்குக் குறளன் என்றும், சிறிது குள்ளமானவனுக்குச் சிந்தன் என்றும், அளவாக வளர்ந்தவனுக்கு அளவன் என்றும், நெட்டையானவனுக்கு நெடியன் என்றும், மிக நெட்டையானவனுக்குக் கழிநெடியன் என்றும் பெயர். இம் முறையையொட்டிச் செய்யுளடிகளுள் இருசீரடிக்குக் **குறள்** என்றும், முச்சீரடிக்குச் **சிந்து** என்றும், நாற்சீரடிக்கு **அளவு** அல்லது **நேர்** என்றும், ஐஞ்சீரடிக்கு **நெடில்** என்றும், அறுசீரும் மேலும் கொண்ட அடிக்குக் **கழிநெடில்** என்றும் பெயரிடப்பட்டுள்ளன.

இசைத்தமிழ்ப் பாட்டுவகைகளுள் ஒன்று அடிக்குறுமைபற்றிச் சிந்து எனப் பெயர்பெறும். அச் சிந்து வகைகளுள் ஒன்று, நெடியதுங்

---

7. ஒருவகைக் கட்டியை ஆங்கிலத்தில் cancer என்றும் canker என்றும் அழைப்பர். அது நண்டுபோலிருத்தலின், இப் பெயர் பெற்றது.
L. *cancer*, crab, cancer. tumour named from swollen veins, like crab's limbs – C. O. D.

குறியதுமாக ஈரடி கொண்டுள்ளமையாலும், நொண்டி நொண்டிச் செல்வதுபோன்ற ஓசையுடைமையாலும், ***நொண்டிச்சிந்து*** எனப்படும்.

*12. உயர்திணை வினைக்கு உயர்திணை யுவமம்*

வாழ்க்கை, ஓரூரிலிருந்து மற்றோரூருக்குச் செல்லும் வழிப்போக்குப் போன்றது. நிலத்தின்மேற் காலால் நடந்து செல்வதுபோல, வாழ்க்கையில் ஒருவன் நினைவு, சொல், செயல் ஆகிய முக்கரணத்தொழிலால் நடக்கின்றான். இதனால் முக்கரண வொழுக்கத்திற்கு **நடத்தை** அல்லது **நடக்கை**[8] என்று பெயர். ஒழுக்கம் என்ற சொல்லும் இக் காரணம் பற்றியதே. ஒழுகுதல், நடத்தல். இப் பொருள் இன்று வழக்கற்றது.

***சீர்தூக்கல்*** என்பது, முதலாவது, துலைக்கோலில் ஒன்றை நிறுத்தலுக்குப் பெயர். சீர், துலைத்தட்டு; தூக்கல், நிறுத்தல். இன்று, மனத்தில் ஒன்றை நிறுத்தல் போல ஆராய்ந்து பார்த்தலுக்குச் சீர்தூக்கல் என்று பெயர். மனமாகிய துலைக்கோலில், மதிநுட்ப மாகிய வரை அல்லது படியிட்டு, நடுநிலையாகிய நாவினால் நிறுப்பதுபோல ஆராய்தல் சீர்தூக்கல். ***கொண்டாடுதல்*** என்பது ஒருபொருளைக் கையிற்பற்றி அல்லது தலைமேற்கொண்டு கூத்தாடுதல். தந்தை தன் குழந்தையையும் பத்தன் தான் வழிபடும் கடவுளுருவையும், கையில் ஏந்தி அல்லது தலைமேற்கொண்டு மகிழ்ச்சியாற் கூத்தாடுதலே கொண்டாடுதல். திருவிழாக் காலத்தில் தெய்வவுருவை அல்லது அதனொடு தொடர்புள்ள ஒரு பொருளைக் கையிலேந்தி அல்லது தலைமேற்கொண்டு கூத்தாடுதல் இன்றும் வழக்கமாயிருப்பதால், விழாச் செய்தலுக்குக் கொண்டாடுதல் என்று பெயர். விழாவிற்கு மறுபெயர் 'கொண்டாட்டம்.' சில விடங்களில் மருளாளியை அல்லது தேவராளனைச் 'சாமிகொண்டாடி' என்பர்.

தெய்வத்தையும் குழந்தையையும் கொண்டாடிச் சிறப்புச் செய்தலும் விரும்பியன கொடுத்தலும்போல, ஒருவரைப் பாராட்டிச் சிறப்பிப்பதும் கொண்டாடுதல் எனப்படும். ''குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே'' என்னும் பழமொழியில், 'கொண்டாடும்' என்னும் சொல், சொற்பொருளும் அணிப் பொருளும் ஆகிய இரண்டையும் தாங்கிநிற்றல் காண்க.

சிற்றூர்களிலும் பேரூர்களிலும் உள்ள சந்தி சதுக்கங்களிலும் அம்பலங்களிலும் திண்டுகளிருப்பதுண்டு. திண்டு, சிறுதிண்ணை.

*8. ஆங்கிலத்திலுள்ள* conduct *என்ற சொல்லும் இக் காரணம்பற்றியதே.* L. *con*, together *duco*, to lead.

*அத் திண்டுகளிற் குறச்சிறுமியர் சோற்றுக்குக் கூத்தாடுவது வழக்கம். அவரைப்போல ஒருவன் சோறில்லாது இடர்ப்படும்போது ''அவன் சோற்றுக்குத் திண்டாடுகிறான்''[9] என்பர்.*

*இலைவிழுந்து மேவிக்கிடக்கும் சிறு குழிகளையெல்லாம் கிண்டிக்கிளைத்து ஒரு பொருளைத் தேடிப்பார்த்தலுக்கு,* ***இலைப்புரை கிளைத்தல்*** *என்று பெயர். இவ் வழக்கு, ஒருவனை எல்லாவிடமும் துருவித் தேடிப் பார்த்தலையுங் குறிக்கும்.*

*மிக நுட்பமான அவிநயங்களுடன் நடனஞ்செய்தல்* ***நொறு நாட்டியம்*** *எனப்படும். வேண்டாத நுண்ணிய வினைகளைச் செய்யும் ஒருவனை 'நொறுநாட்டியம் பிடித்தவன்' என்பர்.*

*ஒரு கடைகாரன் பேரூதியங் கருதி அளவுக்கு மிஞ்சிய பண்டங்களைக் கடையிற் கொண்டுவந்து நிறைத்தலுக்கு, அங்காடி பாரித்தல் என்று பெயர். அவனைப் போலப் பேராசையினால் ஒருவன் ஆகாத காரியத்தை நம்பி ஆகாயக்கோட்டை கட்டுவதும்,* ***'அங்காடி பாரித்தல்'*** *எனப்படும்.*

*ஒருவனது முதுகில் அல்லது தலையில், தேள் போன்றதோர் உருவையிட்டு, 'தேள்! தேள்!' என்று கத்தி அவனை அச்சுறுத்தி மகிழ்வது, குறும்பர் வழக்கம். இதற்கு 'இடுதேளிடுதல்' என்று பெயர். இங்ஙனம் பொய்க்காரணங் காட்டி வேறு வகைகளில் ஒருவனைக் கலங்கப் பண்ணுவதெல்லாம்,* ***இடுதேளிடுதல்*** *எனவேபடும்.*

*ஆற்றின் நடுவிலிருந்துகொண்டு அதன் இருகரைகளில் எதனை யடைவதென்று துணியாது இடர்ப்படுபவனைப்போல, ஒரு காரியத்தைச் செய்வதா தவிர்வதா என இருமனமா யிருப்பவனுக்கு* ***இருகரையன்*** *என்று பெயர்.*

*பாம்பு வகைகளுள் மங்குணி மழுங்குணி என்பதொன்று. அதற்குத் தலையும் வாலும் வேறுபாடில்லாமல் இருகடையும் ஒத்திருப்பதாலும், தலைப்பக்கமும் வாற்பக்கமும் அது செல்ல முடியுமாதலாலும், அதற்கு* ***இருதலைமணியன்*** *என்று பெயர். பகை நட்பு ஆகிய ஈரிடத்தும் சென்று இருசாரார்க்கும் நல்லவனாக நடிப்பவன், இருதலைமணியனை ஒத்திருத்தலால், அவனையும் அப் பெயரால் அழைப்பர்.*

---

*9. தாளம் போடுதல், சிங்கியடித்தல் எனும் இழிவழக்குகளும் இத்தகையவே. சிங்கி - தாளம்.*

## 13. அஃறிணைப் பொருளுக்கு அஃறிணை யுவமம்

சங்கினாற் குழந்தைகட்குப் பால் ஊட்டுவதால் அதற்கு ஊட்டி என்று பெயர். மக்களின் கழுத்தில் முன்புறத்துள்ள சங்குபோன்ற புடைப்பும் ஊட்டி எனப்படும்; சங்கு எனவும் படும்.

**குருகு** என்பது நாரை, கொக்கு முதலிய நீர்ப்பறவைப் பொதுப்பெயர். கொல்லன் உலைத்துருத்தி, கொக்கும் நாரையும் போன்ற வடிவாயிருப்பதால், அதனையும் குருகு என்பது செய்யுள் வழக்கு.

''ஊதுலைக் குருகின் உயிர்த்தனள் உயிர்த்து'' **(சிலப். 22:152)**

என்றார் **இளங்கோவடிகள்.**

ஆற்றிடைக்குறை, கொல்லன் துருத்திபோல முன்குவிந்தும் பின் விரிந்துமிருப்பதால், அதையும் **துருத்தி** என்பர் புலவர்.

தவளையினத்தில் ஒருவகை, கருங்கல்லுக்குள்ளும் ஆழ்ந்த மணலுக்குள்ளும் நுண்ணிதாய் நுழைந்து கிடக்கும்.அதனால், அதற்கு நுணல் என்று பெயர்.

'' மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயாற் கெடும்'' **(பழ. 114)**

என்றார் **முன்றுறையரையர்.**

மஞ்சள்நாறி அல்லது மஞ்சள்நத்தி மரத்தின் காய், நுணல்போன்ற தோற்றமுடைமையால், நுணா எனப்பட்டது. பின்னர் அது சினையாகுபெயராய் மரத்திற்காயிற்று.[10]

நரம்புச் சிலந்தியைக் குறிக்கும் **நரவலி** என்னும் பெயர், அச் சிலந்திபோன்ற கல்விருசம்பழத்திற்கு அல்லது மூக்குச்சளிப் பழத்திற்கு வடார்க்காட்டுப் பாங்கரில் வழங்கிவருகின்றது.

முந்திய ஆசிரியர்க்குத் தோன்றாது பிந்தின ஆசிரியர்க்குத் தோன்றும் மொழியியல்புகளை இலைமறைகாய் என்பதும், ஆசிரியர் தாமாகச் சொல்ல விரும்பாததும் மாணவர் வேறொன்றைப் பற்றி வினவி வலக்காரமாக அவர் வாயினின்று வருவிப்பதுமான பொருளைக் குரங்கெறி விளங்காய் என்பதும், இலக்கண ஆசிரியர் வழக்கம்.

10. நுணல் என்பது நுணலை என்றும், நுணா என்பது நுணவு நுணவம் நுணவை என்றும் திரியும். பொருள் வேறுபாடுணர்த்தற்கு, நுணல் நுணா என்பன ஈறு வேறுபட்டன.

*இலைக்குள் மறைந்து கிடந்து, சிலர் கண்ணுக்குத் தோன்றாது சிலர் கண்ணுக்குமட்டும் தோன்றும் காய், **இலைமறைகாய்**.*

*ஒருவன் விளாமரத்திலுள்ள குரங்கைக் கல்லாலெறிந்தால், அது அவனைத் திருப்பியெறிதற்கு வேறொன்று மில்லாமையால் விளங்காயாலேயே எறியும். இது, ஏற முடியாத விளாமரத்திலுள்ள காயை வலக்காரமாய்ப் பெறும் வழியாம். இங்ஙனம் குரங்கு எறியும் விளங்காயே குரங்கெறி விளங்காய். குரங்கு தானாக விளங்காயெறியா விட்டாலும், கல்லெறிந்தவனிடம் பழி வாங்குவதற்கு எறிவதுபோல ஆசிரியன் தானாக ஒன்றைச் சொல்லாவிட்டாலும் மாணவர் வலக்காரமாய் வினவும் வினாவிற்கு விடையிறுக்கும்போது தன்னையறியாமலே அதைச் சொல்ல நேர்ந்துவிடுவது இயல்பு. இதை யறிந்த மாணவர் இம் முறையைக் கையாளுவர்.*

## *14. இருதிணைப் பொதுப்பொருளும் உவமமும்*

*ஒரு கால்வாயினின்று கிளைக்கால்வாய் வெட்டுதலுக்குக் **குறங்கறுத்தல்** என்று பெயர். குறங்கு, தொடை. ஓர் ஆறும் அதனின்று பிரியும் கால்வாயும் இருதொடை போன்றன.*

***பற்றுக்கோடு** என்பது, முதலாவது கொடிகள் பற்றிப் படரும் கொள்கொம்பிற்கும், இரண்டாவது கொள்கொம்பு போன்ற தாங்கலுக்கும் பெயர். பற்று - பிடிப்பு. கோடு - கொம்பு.*

*ஒன்றைக் கண்டிப்பாய்ச் செய்து தீரவேண்டுவதைக் **கட்டாயம்** என்பர். கட்டவேண்டிய ஆயம் கட்டாயம். கட்டுதல், செலுத்துதல்; ஆயம், வரி. வரிகட்டுவது பொதுவாக மக்கள் விரும்பாததும் தவறாது செய்ய வேண்டுவதுமான காரியம். வரிகட்டுவதுபோன்ற கண்கடிப்பு; கட்டாயம்.*

*பண்டைக்காலத்தில் தமிழை வளர்த்தற்குப் பாண்டியர் நிறுவிய கழகங்கள் மூன்று; அவை **தலை இடை கடை** என்னும் அடைமொழி கொடுத்துக் கூறப்படுவன. அவற்றுள், தலைக்கழகத் திலக்கணமாயிருந்தது **அகத்தியம்**. அது முத்தமிழ் முழுவிலக்கணமா யிருந்ததினால், தமிழுக்கு இன்றியமையாததாகக் கருதப்பட்டது. அதனால் அகத்தியம் என்ற சொல்லுக்கே இன்றியமையாமைப் பொருள் தோன்றிற்று. ஒருவர் ஒரு கூட்டத்திற்கு இன்றியமையாது வரவேண்டுமாயின், அவரைத் ‘‘தாங்கள் அகத்தியமாய் வர வேண்டும்’’ என்றழைப்பது இன்றும் தென்னாட்டு வழக்கு.*

பல பொருட்பெயர்கள், உவமையடிப்படையாக, அப் பொருள்களின் பண்பு குறித்துப் பெயரெச்சமாக வழங்கி வருகின்றன.

எ - டு :

**சிறுமை** - அரிசிப்பல், குருவித்தலை, கிளிவாதில், நரிக்கெளிறு, எரியாமணக்கு.

**நுண்சிறுமை** - ஊசிமிளகாய், ஊசிவெடி.

**கூர்மை** - ஊசிக்காது.

**பருமை** - ஆனைநெருஞ்சில், கடாநாரத்தை.

**இடைமை** (சிறுபருமை) - குதிரைவெடி.

**நெடுமை** - ஒட்டகச் சிவிங்கி.

**நீண்மை** - பாம்புக்கெண்டை, நாகப்பூச்சி.

**தாழ்வு** - நாய்க்கடுகு, நாய்வேம்பு.

**இழிவு** - கழுதைப் பொன்வண்டு, கழுதைக்கூத்து.

**தீமை** - பேய்க்கரும்பு, பேய்வெள்ளரி.

**வன்மை** - கல்விருசு, கல்வாழை.

**கருமை** - காக்கைப்பிசின், காக்கைப்பொன்.

**நீன்மை** - மயில்துத்தம்.

**மஞ்சண்மை** - தங்கமேனி, பொன்வண்டு.

இனி, சில முதற்சினைப் பெயர்கள், உவமையாகு பெயராக வும், ஈறு பெற்றும் பெறாதுவரும் ஒப்புமைப் பெயராகவும், வழங்கி வருகின்றன.

எ - டு :

உவமையாகு பெயர் : ஆட்டுக்கொம்பு (அவரை), காக்கைக்கால் (கொண்டி), கிளிமூக்கு (மாங்காய்), குருவித்தலை (மதிலுறுப்பு).

**ஒப்புமைப் பெயர் :**

(1). ஈறுபெற்றன - காடைக்கண்ணி, குதிரைவாலி.

(2). ஈறுபெறாதன - ஆனைக்கால், மாட்டுப்பல்.

# 2

# வரலாற்றுச் சொற்கள்

*ஒரு நாட்டின் பண்டை வரலாற்றையறியப் புத்தகமுஞ் செய்யுளுந்தான் வேண்டுமென்பதில்லை. அந் நாட்டு மொழி அல்லது சொற்கள்கூட வரலாறுரைப்பனவாகும்.*

*''பழங்கால மக்களின் கூட்டுறவுநிலை, அரசியல்நிலை இவற்றின் நினைவுச் சின்னங்களை இற்றைச் சொற்களிற் கண்டு, அவற்றைப்பற்றித் தம் கருத்தை யறிவிக்குமாறு ஆசிரியர் அவற்றைக் குறித்துவைத்தல் வேண்டும். ஒவ்வொரு நாட்டாரின் உள்ளூறு வாழ்க்கையும் அவரது மொழியிற் பெயராவெழுத்திற் பொறிக்கப் பட்டு, வருங்கால மக்களின் அறிவிற்காகப் போற்றப்படுகிறது; நாட்டு வரலாறு பழக்கவழக்கம், ஒழுக்க விதிகள் ஆகியவற்றைப் பொருள் வழக்கற்ற சொற்களினின்றும் வெளிப்படுத்தாத ஆசிரியர் மிகத் தவறியவராவர்''* என்று **கிரகம்** என்னும் *ஆங்கிலேய ஆசிரியர் கூறுகின்றார்.*[1]

*ஆதலால், பண்டைத் தமிழர் வாழ்க்கைநிலையைப்பற்றி இற்றைத் தமிழ்ச் சொற்களினின்று நாம் அறியக் கூடியதென்ன வென்று பார்ப்போம்.*

## 1. பண்டை நிலநிலை

*மாந்தன் தோன்று முன்பும் மக்கள் பெருகு முன்பும் ஞாலத்திலுள்ள நிலமெல்லாம் மரஞ் செடி கொடி படர்ந்து ஒரே*

---

*1.* ''The teacher ought to note for remark the living memorials, in the words of to day, of the social and political condition of the people in the ages gone by. The inner life of every people is stereotyped in their language, and retained there for the instruction of future generations and the teacher will signally fail if he does not evoke from the fossil elements of words much of national history, customs and morals,'' - English Word-Book by John Graham.

*சோலையாய்த் தோன்றிற்று. பெருநிலப் பகுதிகளும் சிறுநிலப் பகுதிகளும் தனித்தனி பெருஞ்சோலையும் சிறு சோலையுமாக விருந்தன. இதனால், மண்ணுலகமும் அதன் கண்டங்களும் நாடுகளும்* ***பொழில்*** *என்னும் பொதுப்பெயர் பெற்றன. பொழில் என்பது சோலை; பொழிதல் திரளுதல்; பொழித்தல் திரட்டுதல். மரங்களின் பொழிப்பு அல்லது தொகுப்புப் பொழில். ஒரு பாட்டின் சொற்பொருளைத் தொகுத்துக் கூறும் உரையைப் பொழிப்புரை யென்றல் காண்க.*[2]

*''தொழில்காவல் மலிந்தியலும்*
*பொழில்காவலன் புகழ்விளம்பின்று''* ***(6 : 6)***

*என்னும்* ***புறப்பொருள் வெண்பாமாலை****க் கொளுவில் 'பொழில்' என்பது ஞாலத்தை (பூமியை)க் குறித்தது.*

*''ஏழுடையான் பொழில்'' என்னும்* ***திருக்கோவை****த் தொடரில் (7) 'பொழில்' என்பது ஞாலம் போன்ற உலகத்தைக் குறித்தது.*

*''நாவலந் தண்பொழில் நண்ணார் நடுக்குற''* ***(22:26)***

*என்னும்* ***மணிமேகலை*** *யடியில் 'பொழில்' என்பது (இந்து) தேயத்தைக் குறித்தது.*

*''வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்''* ***(செய்யுளியல், 79)***

*என்னும் தொல்காப்பிய அடியில் அச் சொல் (தமிழ்) நாட்டைக் குறித்தது.*

*பரதகண்டமெனப்படும் இந்து தேயம், பழங்காலத்தில் நாவல் மரத்தாற் சிறப்புற்றிருந்தமையால்,* ***நாவலம்*** *பொழில் எனப்பட்டது. ஒரு காலத்தில் குமரிமலை முதல் பனிமலை (இமயம்) வரையும் முத்தமிழ் வேந்தர் ஆட்சி செலுத்தியமையால், நாவலந் தண்பொழிற்கு மூவர் தண்பொழில் என்றும் பெயர். பிற்காலத்தில் தமிழ் வழக்கும் தமிழாட்சியும் தெற்கே ஒடுங்கிவர,* ***'மூவர் தண்பொழில்'*** *என்பது தென்னாட்டை அல்லது தமிழ்நாட்டை மட்டும் குறித்தது.*

*நிலமெங்கும் ஒரே சோலையாயிருந்த காலத்தில், இடையிடையோடும் ஆறுகளே, ஊடுநீந்தியும் ஓரமாக நடந்தும் செல்லும் வழிகளாயிருந்தமையின், வழி* ***ஆறு*** *எனப்பட்டது.*

---

*2. தோப்பு, தோட்டம் என்னும் ஒத்த பொருட் சொற்களும் இக்காரணம் பற்றியவையே. தொகுப்பு – தோப்பு, தோடு – தோட்டம். தோடு – திரட்சி.*

*ஒருகாலத்தில் பனிமலை கடலுக்குள் முழுகியும், தென் பெருங்கடல் குமரிமலையைக் கொண்ட உயர்நிலமாயு மிருந்ததினால், நாவலந்தேயத்தில் வடபால் தாழ்ந்தும், தென்பால் உயர்ந்துமிருந்தது. பனிமலை யெழுந்து குமரிமலை முழுகியபின், வடபால் உயர்ந்தும் தென்பால் தாழ்ந்தும் இருக்கின்றது. இதனால், வடதிசைக்கு* ***உத்தரம்*** *என்றும், தென்திசைக்குத்* ***தக்கணம்*** *என்றும் பெயர்.*[3] *உ = உயர்வு; தக்கு = தாழ்வு; தரம், அணம் என்பன ஈறுகள். உகப்பு, உச்சி, உம்பர், உயரம், உன்னு, உன்னதம் முதலிய சொற்களில் உகரவடி உயர்வு குறித்தலையும், தக்குத் தொண்டை என்னும் உலக வழக்கில், தக்கு என்பது தாழ்வு குறித்தலையுங் காண்க. தரம் என்பது நிலை எனினும் ஒக்கும்.*

## 2. குறிஞ்சிநிலை

***தழைகொண்டு சேறல், சந்தனத்தழை தகாதென்று மறுத்தல், தழையெதிர்தல், தழையேற்பித்தல், தழைவிருப்புரைத்தல்*** *முதலிய அகப்பொருட்டுறைகள் மக்கள் குறிஞ்சிநிலையில் தழையுடை யணிந் திருந்ததைக் காட்டும்.*

*தழையுடையின்பின் மரவுரியாடை யணியப்பட்டது. மரவுரிக்குச்* ***சீரை*** *என்று பெயர். அப் பெயரே சீலை சேலை எனத் திரிந்து, இன்று பருத்தியாடையைக் குறிக்கின்றது.*

*புலால் உண்பவர், ஆடு கோழி முதலிய உயிர் (பிராணி)களைக் கொல்வதை, ஆடு கொல்லுதல், கோழி கொல்லுதல் என்னாது* ***ஆடடித்தல், கோழியடித்தல்*** *எனக் கூறும் வழக்கு, மக்கள் குறிஞ்சி நிலையில் விலங்குகளையும் பறவைகளையும் கல்லாலும் வணரி (வளைதடி)யாலும் அடித்துக் கொன்றதை நினைப்பூட்டும்.*

*பண்டைத் தமிழரசர் ஒவ்வொரு மரத்தைக்* ***கடிமரம்*** *அல்லது காவல் மரமாகக்கொண்டு அதைப் பகைவர் அண்டாதபடி கருத்தாய்க் காத்துவந்ததினாலும், கா என்னும் சோலைப் பெயர்க்குக் காத்தற் பொருளு மிருப்பதாலும், ஒவ்வொரு திருப்பதியிலும் கடவு ளுருவிற்கு நிழல் தந்து நிற்கும் மரம் தலமரம் எனப் போற்றப் படுதலினாலும், முற்காலத்தில், மக்கள் அடிமுதல் முடிவரை*

---

*3. தமிழ்நாட்டின் மேல்கீழ்ப் பால்கள் முறையே உயர்ந்தும் தாழ்ந்துமிருப்பதால், அவற்றின் திசைகளும் மேற்கு கிழக்கு எனப்படுதல் காண்க. மேல் - மேற்கு; கீழ் - கிழக்கு.*

கிழங்கும் பாலும் கீரையும் பூவும் காயும் கனியும் நிழலும் உறையுளுமாகப் பலவகைப் பயனுதவிக் காத்த மரங்களையும் சோலைகளையும், தெய்வங்களாக வழிபட்டு வந்தனர் என ஊகிக்க இடமுண்டு.[4]

சிலர், பயன்படா மரஞ் செடி கொடிகளையும் ஒவ்வொரு காரணம்பற்றித் தெய்வத் தன்மையுடையனவாகக் கருதி, அவற்றை அணிந்தும் வழிபட்டும் வந்திருக்கின்றனர். கடம்பர் என்னும் வகுப்பார் கடப்பமரத்தைக் கடிமரமாகக் கொண்டிருந்தனர். ஆப்பிரிக்க அமெரிக்கப் பழங்குடி மக்கட்கும் இத்தகைய கொள்கை யுண்டு.

சைவர் உருத்திராக்கத்தையும், வைணவர் துளசியையும், பௌத்தர் அரசையும், சமணர் அசோகையும் தெய்வத் தன்மையுடையதாகக் கருதுவதும் இத்தகையதே.

நிரைகவர்தல், நிரைமீட்டல், படையெடுத்தல், முற்றுகையிடல், மதில்காத்தல், பொருதல், ஊன்றிப் பொருதல், வெற்றிகொண்டாடல் முதலிய போர்வினைகட்கு ஆக்கந்தருவதாகக் கருதியே, முறையே, வெட்சி கரந்தை வஞ்சி உழிஞை நொச்சி தும்பை காஞ்சி வாகை மலர்களை முன்னைத் தமிழர் சூடியிருத்தல் வேண்டும். சில தழைகளும் பூக்களும் அவற்றின் மருத்துவ ஆற்றல் பற்றியும் அணியப்பட்டிருக்கலாம்.

திணை பால் வேறுபாடு தமிழிலக்கணத்தில் ஏற்பட்ட பின்பும், ஆண் பெண் என்னும் பாற்பெயர்களும், தந்தை தாய் என்னும் முறைப்பெயர்களும், மகவு, பிள்ளை, பார்ப்பு, குட்டி முதலிய இளமைப் பெயர்களும், சாத்தன், சாத்தி முதலிய விரவுப் பெயர்களும், மாக்கள் என்னும் பன்மைப் பெயரும், கடைக்குட்டி, பிள்ளைகுட்டி, கன்றுகயந்தலை என்னும் வழக்குகளும், உள்ளான் கத்தரிப்பான் முதலிய 'ஆன்' ஈற்றுப் பெயர்களும், மண்வெட்டி, காடைக்கண்ணி முதலிய இகரவீற்றுப் பெயர்களும் இருதிணைப் பொதுவாய் இருவகை வழக்கிலும் வழங்கி வருதலான், முதற்காலத்தில் எல்லாச் சொற்களும் திணை வேறுபாடின்றி எண்

*4.* The Imperial Dictionary *என்னும் ஆங்கில அகராதியில்* Druid *என்னும் மரவழிபாட்டுக் குருவைப்பற்றி,* 'A priest or minister of religion among the ancient Celtic nations in Gaul, Britain, and Germany..... They (the Druids), venerated the mistletoe when growing on the oak, a tree which they likewise esteemed sacred..." *என எழுதப்பட்டுள்ளது.* W. *derw*, Gr. *drus*, an oak; Skt. *drus* a tree; E. druid.

*வேறுபாட்டோடு மட்டும் வழங்கி வந்தன என்பதும், மக்கட்கும் விலங்குகட்கும் பெரிதும் வேறுபாடில்லை யென்பதும் அறியப் படும்.*

### 3. முல்லைநிலை

*முல்லைநிலத்தில் மாடே மக்களின் பெருஞ் செல்வமாயிருந்த தினால், **மாடு** என்பது செல்வப் பெயராயிற்று.*

### 4. திசைபற்றிய வழக்கு

*சமற்கிருதத்தை வடமொழியென்றும், தமிழைத் தென்மொழி யென்றும், தொன்றுதொட்டு வழங்கி வருவதால், முன்னது வடக்கினின்று வந்த அயன்மொழியென்றும், பின்னது முதலி லிருந்தே தெற்கின்கண் வழங்கி வந்த நாட்டுமொழியென்றும், தெள்ளத் தெளிவாக அறியலாம். மொழிக்குச் சொன்னது மொழி யாளர்க்கும் ஒக்கும். சிலர் வரலாற்றுண்மைக்கு மாறாக வடமொழி யும் முற்காலத்தி லிருந்தே தென்னாட்டில் வழங்கி வந்ததென்பர். அவர்க்கு வடமொழி யென்னும் பெயரே வாயடைத்தல் காண்க.*

### 5. உரிமைவழி

*மக்களுக்குத் தலைமுறை தலைமுறையாய் உரிமை தொடர்ந்து வரும்வழி, தந்தைவழி தாய்வழி அல்லது மகன்வழி மகள்வழி என இரண்டாம். இவற்றுள் தாய்வழியே பழந்தமிழ் நாட்டில் வழங்கி வந்ததென்பதற்கு, **தாயம்** என்னும் பெயரே சான்றாம். தாய்வழிப் பெறுவது தாயம். தந்தைவழி அல்லது மகன்வழி ஆண்வழியும், தாய்வழி அல்லது மகள்வழி பெண்வழியும் ஆகும். ஆத்திரேலியா என்னுந் தென்கண்டத்தில் பெண்வழி யுரிமையே இருந்துவருவதாகச் சொல்லப்படுகின்றது.*

*மகள் பெறுவது மருமகனுக்கே உரியதாதலால், மகள் வழித் தாயம் **மருமக்கள்தாயம்** எனப்படும். ஒருவனது சொத்தை அவனுடைய உடன்பிறந்தாளின் ஆண்மக்கள் அடைவதெனச் சொல்லப்படும் மருமக்கள் தாயம் மலையாள நாட்டில் இன்றும் வழங்கிவருகின்றது. சோழ பாண்டிய நாடுகளில் மக்கள்தாயம் வழங்கிவர, சேரநாடாகிய மலையாளத்தில் மட்டும் மருமக்கள் தாயம் வழங்கிவரக் காரணம், அந் நாடு குடமலையால் பிரிக்கப்பட்டிருப்பதும், நெடுங்காலமாக ஏனையிரு தமிழ்நாடு களுடனும் தொடர்பு கொள்ளாமையுமே.*

*மருமக்கள் தாயமே பண்டைத் தமிழ்நாட்டில் வழங்கி வந்த மையால், வழித்தோன்றல் **மருகன்** எனப்பட்டான். இப் பெயர் மருமகன் என்பதன் மரூஉ.*

### *6. சம்பளம்*

*பழங்காலத்தில் **சம்பளம்** கூலமும் உப்புமாகக் கொடுக்கப் பட்டது. கூலம் தானியம்.[5] கூலத்திற் சிறந்தது நெல்லாதலின், நெல்வகையிற் சிறந்த சம்பாவின் பெயராலும், உப்பின் பெயராலும், **சம்பளம்** என்னும் பெயர் உண்டாயிற்று. சம்பும் அளமும் சேர்ந்தது சம்பளம். சம்பு என்பது சிறந்த நெல்வகைக்கும் சிறந்த கோரை வகைக்கும் பொதுப்பெயர்.*

*ஓங்கிவளர்ந்த சம்பாநெற்பயிரும் சம்பங்கோரையும் ஒத்த தோற்றமுடையனவா யிருத்தல் காண்க. நெல்லைக் குறிக்கும் சம்பு என்னும் பெயர் இன்று சம்பா என வழங்குகின்றது. உகரவீற்றுச் சொற்கள் ஆகார வீறு பெறுவது இயல்பே. எ - டு ஃ கும்பு – கும்பா, தூம்பு – தூம்பா, குண்டு – குண்டா. கும்புதல் = திரளுதல்.*

*அளம் என்பது உப்பு. உப்பு விளைப்போர் அளவர் எனப்படுதல் காண்க.*

*அளம் என்னும் சொல் தன் பொருளிழந்து ஈறாக மாறியபின், உப்பைக் குறிக்க உம்பளம் என்றொரு சொல் வேண்டியதாயிற்று. உப்பைச்[6] சம்பளப் பகுதியாகக் கொடுக்கும் வழக்கம் நின்றுவிடவே, உம்பளம் என்னும் சொல்லும் அப் பொருளில் வழக்கு வீழ்ந்து, மானியமாகக் கொடுக்கும் நிலத்திற்குப் பெயராக ஆளப்பட்டது. உம்பு, உப்பு.*

*'உப்புக்கு உழைத்தல்', 'உப்பைத் தின்னுதல்' என்னும் வழக்குகளையும், ''உப்பிட்டவரை உள்ளளவும் நினை'' என்னும் பழமொழியையும் நோக்குக.*

### *7. எழுத்து*

*ஆதிமக்கள் மெல்ல மெல்ல நாகரிகமடைந்து ஒரு மொழியை வளர்த்துக்கொண்ட பின்பு, அது இடமும் காலமும் பற்றிய இருவகைச் செய்மைக்கும் பயன்படுமாறு, அதற்கு எழுத்தையும்*

---

*5. கூலமாகக் கொடுக்கப்படுவது கூலி.*

6. ''Salary (Soldier's pay, which was given partly in salt, - wages'' English Word - book, p. 90).

அமைத்துக்கொண்டனர். முதன் முதலாக மக்கள் அமைத்தது படவெழுத்தே.

எழுத்து என்னும் சொல் முதன்முதலாக ஓவியத்தையே குறித்தது. இன்றும் 'படமெழுதுதல்' என்னும் வழக்கைக் காண்க.

''இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்'' என்னும் **பரிபாடல்** அடியில் (19 : 53), எழுத்து என்பது ஓவியத்தை உணர்த்திற்று.

''உருவே யுணர்வே யொலியே தன்மையென
இருவகை யெழுத்தும் ஈரிரண் டாகும்''

''காணப் பட்ட வுருவ மெல்லாம்
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவில் ஓவியன் கைவினை போல
எழுதப் படுவ துருவெழுத் தாகும்''

என்பன, **யாப்பருங்கலவிருத்தி** மேற்கோள்.

இந் நூற்பாக்களினின்று முதற்காலத்திருந்த தமிழெழுத்துப் படவெழுத்தே (Hieroglyph) என்று துணியலாம்.

தமிழ் நெடுங்கணக்கிற்கு அரிவரி என்று பெயரிருப்பது, அது இடைக்காலத்தில் 'அரிஓம்' என்று சொல்லித் தொடங்கப்பெற்றதை அறிவிக்கும்.

### 8. அரசன்

சிறுகுழந்தைகட்கு எங்ஙனம் தாயுந் தந்தையும் தெய்வமோ, அங்ஙனமே பழங்கால மக்கட்கு அரசன் தெய்வம். உணவளித்தும் பகையழித்தும் மக்களைக் காத்த காவலன் தெய்வமாக அல்லது கண்கண்ட தெய்வமாகக் கருதப்பட்டும் வணங்கப்பட்டும் வந்தான்.

மணவறையில் 'அரசாணிக்கொம்பு' நட்டும் அல்லது கட்டும் வழக்கம், பண்டைக் காலத்தில் அரசவணக்கம்பற்றித் தோன்றிய தாகத் தெரிகின்றது.

''நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்''

என்பது புறம்.

கோவில் அல்லது கோயில் என்பது முதலாவது அரசனது அரண்மனையையே குறித்தது. கோ - அரசன்; இல் - வீடு. அரச

வணக்கத்தின்பின் தெய்வ வணக்கம் தோன்றியதினால் அரச மனைப் பெயர் தெய்வமனைப் பெயராயிற்று.

இறை அல்லது இறைவன் என்பது, அரசனுக்கும் கடவுட்கும் பொதுப்பெயர். கடவுள் எங்கும் தங்கியிருப்பதுபோல, அரசனுடைய ஆணை, அவனுடைய நாடெங்கும் தங்கியிருக்கிறது என்பது கருத்து. இறுத்தல் - தங்குதல்.

கடவுள் பெயர்க்கும் அவரொடு தொடர்புள்ள பொருட் பெயர்க்கும் திரு என்னும் முன்னொட்டுச் சேர்க்கப்படுவது போன்றே அரசனுடைய பெயர்க்கும் அவனொடு தொடர்புள்ள பொருட் பெயர்க்கும் சேர்க்கப்படும். எ - டு : திருவாய்க்கேள்வி, திருமந்திர வோலை.

## 8. தண்டனைவகை

'அட்டைக்குழி', 'இருளுலகம்', 'அளறு' என நரகிற்குப் பெயரிருப்பதால், அட்டையிட்ட குழியிலும் இருட்டறையிலும் உளையிலும் பண்டைக்காலத்தில் குற்றவாளிகள் தள்ளப்பட்டனர் என்பது வெளியாகும்.

'அலமரல்', 'தெருமரல்', 'உழலுதல்' என்னுஞ் சொற்கள், குற்றவாளிகளைச் சக்கரத்திலிட்டுச் சுழற்றிக் கொன்றமையைத் தெரிவிக்கும்.

''அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி'' **(உரியியல், 14)**

என்பது தொல்காப்பியம்.

'புள்ளிக்காரன்', 'முகத்தில் கரியைப் பூசுதல்', 'கரிக்கோ டிடுதல்' முதலிய வழக்குகள், ஊர்க்கு மாறான குற்றவாளிகளை ஊரார் செம்புள்ளி கரும்புள்ளி குத்தியும், முகத்தில் கரியைப் பூசியும், கரிக்கோடிட்டும் அவமானப்படுத்தியதை நினைவுறுத்தும்.

'புல்லார்தல்', 'குதிரையேறுதல்' என்னும் வழக்குகளால், மற்போரில் தோற்றுப்போனவன் சிறிது புல்லைத் தின்னவேண்டு மென்றும், அதோடு வென்றவனைக் குறிப்பிட்ட இடம் அல்லது கால எல்லைவரையும் சுமக்கவேண்டுமென்றும் இருந்ததாகத் தெரிய வருகின்றது.

''கண்ணைத் தோண்டிவிடுவேன்'', ''மூளையை உறிஞ்சி விடுவேன்'', ''தோலை உரித்துவிடுவேன்'', ''ஈரலைத் தின்று

விடுவேன்'', ''குடலை மாலையாகப் போட்டுவிடுவேன்'' என்பன போன்ற அச்சுறுத்துகள், அநாகரிகக் காலப் போர்க்களங்களில் செயலளவாய் நிகழ்ந்தவையே.

### 10. கருத்து

வைசூரிக்கு **அம்மை** யென்னும் பெயரிருப்பதால், காளி யம்மையினால் அந் நோய் வருவதாக நம் முன்னோர் கருதினர் என்றறியலாம். இன்னும் அக் கருத்து; பலர்க்கு நீங்கவில்லை. 'அம்மை வந்திருக்கிறாள்', 'அம்மை விளையாடுகிறாள்' முதலிய வழக்குகளும், வைசூரி வந்தவுடன் காளிக்குச் செய்யப்படும் சிறப்புகளும் அதை விளக்கும்.

முதுவேனிலில் தோன்றும் பாலைநிலத்திற்குத் தெய்வம் காளியாதலாலும், அவ் வம்மையை ஓர் அழிப்புத் தெய்வமாக மக்கள் கொண்டதினாலும், வெப்பமிகுதியால் தோன்றிப் பலவுயிரைக் கொள்ளைகொள்ளும் வைசூரி நோயைக் காளியால் வருவதென்று கருதி, அதை அத் தெய்வத்தின் பெயரால் அம்மை என்றே அழைத்தனர் முன்னோர்.

நல்லவர் பொருட்டு மழைபொழிந்து நாடு செழிக்கிற தென்றும், தீயவரையிட்டு மழை பொய்த்துப் பஞ்ச முண்டாகிற தென்றும் பண்டையோர் கருதினர்.

''..................தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை'' **(மூதுரை, 10)**

''நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே'' **(புறம். 187)**

என்னும் **ஒளவையார்** கூற்றுகள் இதைப் புலப்படுத்தும்.

மழை பொய்த்த காலத்தில், அதற்குக் காரணம் ஒரு கொடும் பாவியென்று கருதி, ஊருக்குள் மிகத் தீயவன் என்று பேர்பெற்ற ஒருவனைக் கட்டி ஊருக்கு வெளியே இழுத்துக்கொண்டு போய் உயிரோ டெரித்துவிடுவது முதுபண்டை வழக்கம். இதற்குக் **கொடும்பாவி கட்டியிழுத்தல்** என்று பெயர்.

நாகரிகம் மிக்க இக்காலத்தில், கொடும்பாவி கட்டி யிழுத்தற்குப் பதிலாகச் சூந்து கட்டித் தெருத்தெருவாக இழுத்து ஊருக்கு வெளியே கொண்டுபோய்க் கொளுத்திவிடுகின்றனர்.

### 11. வழக்கம்

ஒருவர் தம் சொந்த முயற்சியால் பெரும் பொருளீட்டியதைப் பாராட்டும்போது, ''கோடியும் தேடிக் கொடிமரமும் நட்டி'' என்று கூறுவது தென்னாட்டு வழக்கு. இதனால், பழந்தமிழ் நாட்டில் கோடி தொகுத்தவரெல்லாம் கொடிகட்டிப் பறக்கவிட்டனர் என்பது தெரிய வருகின்றது.

### 12. செந்தமிழ் எல்லை

தென்னாட்டில் யாரேனு மொருவர் இலக்கண வழுப்படப் பேசியதை வேறொருவர் திருத்தினால், திருத்தப்பட்டவர் திருத்தியவரை ''இவர் **திருத்தக் கல்**லிற்குத் தெற்கிட்டுப் பிறந்தவர்'' என்று நகையாடுவது வழக்கம். இதனால், பண்டைத் தமிழகத்தில் செந்தமிழ் வழங்கும் எல்லை குறிக்கக் கல் நட்டப்பட்டிருந்த தென்பதும், தெற்கே செல்லச் செல்லத் தமிழ் சிறந்திருந்ததென்பதும் வெளியாகும்.

### 13. குலப்பெயர்

மக்கள் பற்பல சமயங்களில் தமிழ்நாட்டினின்று ஈழத்திற்குக் குடியேறியது போன்றே, ஈழத்தினின்றும் தமிழ்நாட்டிற்குக் குடியேறி வந்திருக்கின்றனர். கரிகால் வளவன் ஈழத்தின்மேற் படையெடுத்துப் பன்னீராயிரம் குடிகளைச்சிறைபிடித்துக் கொண்டு வந்து, காவிரிக்குக்கரை கட்டுவித்ததாக அவன் **மெய்க்கீர்த்தி** கூறும். இங்ஙனம் கொண்டுவரப்பட்டவரும் குடியேறியவருமே ஈழவர் எனப்பட்டனர். மலையாள நாட்டில் இவரைத் **தீவார்** அல்லது **தீயார்** என்பர்.

**கம்பளர்** காம்பிலிச் சீமையினின்றும், **இரட்டியார்** இரட்ட பாடியினின்றும், ஒட்டர் ஒட்டர அல்லது ஒரிசாச் சீமையினின்றும் வந்தவராவர்.

**செங்குந்தர் பாணர்** என்பவர் தமிழ்நாட்டுத் தமிழரே யாயினும், தொழில் மாறியிருக்கின்றனர். செங்குந்தம் பிடித்துச் சோழருக்குப் படைமறவரா யிருந்தவர் செங்குந்தர். பாண் அல்லது இசைத்தொழிலைக் கொண்டிருந்தவர் பாணர். இவ்விரு வகுப் பாரும், இன்று முறையே நெசவையும் தையலையும் மேற் கொண்டுள்ளனர்.

"பாணர்க்குச் சொல்லுவதும் பைம்புனலை மூடுவதும்
தாணு வுரித்ததுவும் சக்கரத்தோன் – ஊணதுவும்
எம்மானை யேத்துவதும் ஈசனிடத் துஞ்சிரத்தும்
தைம்மாசி பங்குனிமா தம்"

என்று காளமேகர் பாடியிருத்தல் காண்க. மலையாள நாட்டுப் பாணர் கூடையும் தாழங்குடையும் முடைவதைத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

## 14. ஆட்பெயர்

ஒருவனுக்கு மகனின் மகன் பேரன் எனப்படுவான். பெயரன் என்பது பேரன் என மருவிற்று. பாட்டன் பெயரைப் பேரனுக்கிடுவது பண்டை வழக்கமாதலால், பேரனுக்கு அப் பெயராயிற்று. சிலர் பாட்டனையும் பேரன் அல்லது பேரனார் என்பர். அரசகேசரி பரகேசரி என்ற பட்டங்கள், பிற்காலச் சோழர்க்கு ஒன்றுவிட்டு வழங்கியதும் இம் முறைபற்றியே.

## 15. ஊர்ப்பெயர்

மக்கள் மலை (குறிஞ்சி), காடு (முல்லை), நாடு (மருதம்), பாலை, கடற்கரை (நெய்தல்) என்னும் ஐந்திடங்களில் வேறு வேறு வாழ்ந்து வந்த பண்டைக்காலத்தில், குறிஞ்சிநிலத் தூர்கள் **குறிச்சி, சிறுகுடி** என்றும், முல்லைநிலத்தூர்கள் **பாடி, சேரி** என்றும், மருதநிலத்தூர்கள் ஊர் என்றும், பாலை நிலத்தூர்கள் **பறந்தலை** என்றும், நெய்தல் நிலத்தூர்கள் **பாக்கம், பட்டினம்** என்றும் ஈறுகொடுத்துக் கூறப்பட்டன. மக்கள் பல்கித் திணைமயக்கம் உண்டானபின், இவ் வழக்கம் பெரும்பாலும் நின்றுவிட்டது.

இடைக்காலத்தில் வழங்கிய சில ஊர்ப்பெயர்களும் ஊர்ப் பெயரீறுகளும் வெவ்வேறு காரணம் பற்றியவைஃ **ஆறை** என்பது ஆற்றூர்.

**புத்தூர்** என்பது புதியவூர்; **மூதூர்** என்பது பழையவூர்; **பேரூர்** என்பது மாநகர்; **பட்டி** என்பது கால்நடைத் தொழுவமுள்ள சிற்றூர்; **பற்று** என்பது தனிப்பட்டவர்க்கு அல்லது ஒரு சாரார்க்கு உரிய சிற்றூர் அல்லது சிற்றூர்த்தொகுதி; அடங்காப்பற்று என்பது அரசனாணைக் கடங்காதவர் வசிக்கும் ஊர்; **பள்ளி** என்பது பௌத்த சமண மடமுள்ள ஊர்; **பாளையம்** என்பது படையிருக்கும் ஊர்; **பட்டு** என்பது பாளையத்தலைவரான சிற்றரசர்க்கு விடப்பட்ட சிற்றூர் அல்லது சிற்றூர்த்தொகுதி; **மங்கலம்** என்பது பார்ப்பனிருக்கும் ஊர்; **வாடை** என்பது வேட்டுவர், அல்லது இடையர் இருக்கும் ஊர்; **பண்டார**

**வாடை** என்பது குடிகளுக்குரிய ஊர்; **நத்தம்** என்பது பார்ப்பன ரல்லாதார் வாழும் ஊர்; **குடி** என்பது ஒரு குடும்பத்தாரே அல்லது குலத்தாரே வசிக்கும் ஊர்; **குடிக்காடு** என்பது குடிகள் வசிக்கும் காட்டூர்; **குடியேற்றம்**[7] என்பது மக்கள் குடியேறிய ஊர்; **கல்லாங்குத்து** என்பது கடின நிலத்தூர்; **முரம்பு** என்பது கற்பாங்கான மேட்டு நிலத்தூர்; **பேட்டை** என்பது சந்தை கூடும் ஊர்.

**எயில்** என்பது மதில்சூழ்ந்தவூர்; **புரம் புரி** என்பன அரசர் தலைநகர். **விண்ணகரம்**[8] என்பது திருமால்கோயில் உள்ள ஊர்.

ஏரி, குளம், கோட்டை, கோயில் முதலிய ஈறுகளில் முடியும் பேர்களைக்கொண்ட ஊர்கள், அவ்வவ் வீறுகளாற் குறிக்கப்படும் இடத்தைக் கொண்டவை என்பதை, எவரும் சொல்லாமலே அறிந்துகொள்ளலாம். ஏரி என்று முடியும் பேரைக்கொண்ட ஓரூரில் ஏரியில்லாவிடின், அது ஒரு காலத்திலிருந்து பின்னர்த் தூர்ந்து போனதென் றறிதல் வேண்டும். இங்ஙனமே பிறவும்.

புறம் பட்டு முதலிய சில பெயர்களும், இக்காலத்தில் சிறப்புப் பொருளிழந்து பொதுப் பெயராக வழங்கிவருகின்றன. ஆதலால், இக்காலப் புத்தூர்ப் பெயர்கள் வரலாற்றுச் செய்தியொன்றும் உணர்த்தா.

### 16. கதை

யாரேனுமொருவர் பேதைத் தன்மையாய்ப் பேசினால், அவரைப் பிறர் **'கொங்கணவன்'**[9] என்பது வழக்கம்.

கொங்கணவன் என்னும் பெயரையுடைய முனிவர், தம் தவவலிமையால் ஒரு கொக்கைக் கொன்று வீழ்த்தியபின், மக்களை யும் அங்ஙனமே சாவிக்கலாம் என்று கருதி, தமக்கு ஐயமிடக் காலந் தாழ்த்துவந்த வாசுகியம்மையாரை உறுத்து நோக்க, அவ்வம்மையார் ''கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா?'' என்று கடிந்தார். அதன்பின், அம் முனிவர் கற்புடை மங்கையரின் பெருமையை யுணர்ந்து, அவ் வம்மையாரிடம் மன்னிப்புக் கேட்டுச் சென்றார் என்பது வரலாறு.

---

7. 'குடியேற்றம்' என்பது இன்று 'குடியாத்தம்' என மருவி வழங்கும்.

8. விண்டு + நகரம் = விண்ணகரம்; விண்டு – விஷ்ணு நகர், நகரம் – மனை, கோயில்.

9. 'கொங்கணவன்' என்பது உலக வழக்கில் 'கொங்கணையன்' என வழங்குகிறது.

இதுகாறுங் கூறியவற்றால், சொற்களும் ஒவ்வொரு வரலாற்றுண்மையை உணர்த்தக்கூடுமென்றும், விரிவான அகராதி ஒரு வரலாற்றுக் களஞ்சியம் என்றும், வரலாற்றுச் சொற்களையும் வரலாற்று நூல்களைப் போலப் போற்ற வேண்டுமென்றும், அவற்றுள்ளும் வழக்கற்ற சொற்களை மிகக் கருத்தாய்ப் போற்ற வேண்டுமென்றும் அறிக.

# 3

# மெய்ப்பொருட் சொற்கள்

*உலக மக்கட்குள் தமிழர் தலைசிறந்த நாகரிகமுடையவர் என்பதை அவருடைய மொழியமைதியுங் கருத்துமே காட்டும்.*

## *1.* சொல்வழக்கு

*பண்டைத் தமிழகத்தில், புலமக்கள் மட்டுமன்றிப் பொது மக்களும் சிறந்த அறிவுடையவரா யிருந்தனர். ஆதலால், பொருள்களின் உண்மையியல்புகளை யறிந்து, அவற்றிற்கேற்பப் பெயரிட்டு வழங்கினர்.*

*இயற்கையாய் எல்லாப் பொருள்களும் உயிர், உயிரில்லது, உயிருள்ளது என மூவகைப்பட்டிருத்தலைக் கண்டு, அவற்றை முறையே* ***உயிர், மெய், உயிர்மெய்*** *என அழைத்தனர் முதுதமிழர்.*

*உடம்பை உய்ப்பது அல்லது செலுத்துவது உயிர். உள்ளிருக்கும் உயிரை மேலாகப் பொதிந்திருக்கும் உடம்பு மெய்; உயிரையுடைய மெய் உயிர்மெய்.*[1]

***உடல், உடம்பு, குடம்பை, கூடு, மெய், யாக்கை, முடை, கட்டை*** *என உடம்பிற்கு வழங்கும் பெயர்களின் காரணத்தை நோக்கின், அப் பெயர்களை இட்ட மக்களின் உயரிய அறிவு புலனாம்.*

*உயிருடன் சேர்ந்தே இயங்குவது அல்லது உயிருடனிருப்பது உடல் அல்லது உடம்பு; குஞ்சு பொரித்தபின் தொடர்பு நீங்கும் முட்டைக் கூடுபோல, உயிரைவிட்டு நீங்குவது குடம்பை அல்லது*

---

*1. உயிரும் மெய்யும் கூடியது உயிர்மெய் எனக் கூறுவது பொருந்தாது. இக் கூற்று உயிர்மெய் என்னுஞ் சொல் உலக வழக்கற்றபின் எழுந்தது. பிராணனையுடையது பிராணி என்பது போல, உயிரையுடைய மெய் உயிர்மெய் என்பதே பொருத்தமாம்.*

*கூடு.*[2] *உயிரை மேலாகப் பொதிந்திருப்பது மெய்; தோல் நரம்பு எலும்பு தசை அரத்தம் முதலிய எழுவகைத் தாதுக்களால் யாக்கப்பெற்றிருப்பது அல்லது முடையப்பட்டிருப்பது யாக்கை அல்லது முடை; உயிர் நீங்கியபின் கட்டைபோலக் கிடந்து எரிவது அல்லது மண்ணொடு மண்ணாய்ப்போவது கட்டை.*

*உயிரில்லாத பொருள்கள் எத்தனையோ வேறுபட்ட வண்ணம் வடிவு அளவு சுவை முதலிய தன்மைகளையுடையனவாயிருந்தாலும், அவற்றையெல்லாம் உடம்பொடு தொடர்புபடுத்தி ஒன்றாகக் கொண்டு, அவற்றுக்கு உடம்பு அல்லது மெய் என ஒரே பெயரிட்டதற்குக் காரணம், அண்டத்தையொத்தது பிண்டம் என்றும், உயிரற்ற பொருளனைத்தும் ஐம்பூதச் சேர்க்கை அல்லது வேறுபாடென்றும், முன்னைத் தமிழர் அறிந்திருந்தமையே.*

*பொருள்களை யெல்லாம் இங்ஙனம் மூன்று வகையாய் வகுத்ததோடமையாது, உயிருள்ள பொருள்கட்குள்ளும் பகுத்தறிவுள்ளது இல்லது என மேலுமொரு பாகுபாடு செய்து, அதற்கேற்ப வினையீறு வேறுபடுத்திக் கூறிவந்தனர் பழந்தமிழர்.*

*விலங்கினத்திலும் பறவையினத்திலும் ஒருசார் மரங்கட் குள்ளும் ஆண் பெண் என்னும் பால் வேறுபாடிருப்பினும், அவ் வேறுபாடு கண்டு அவற்றுக்கு வெவ்வேறு பெயரிட்டு வழங்கினும், வினைகொடுத்துக் கூறும்போது, பகுத்தறிவற்ற உயிர்களின்பால் வேறுபாடு காட்டாது, 'காளை வந்தது', 'ஆ வந்தது', 'காளைகள் வந்தன', 'ஆக்கள் வந்தன' என எண் வேறுபாடு மட்டும் காட்டியும், பகுத்தறிவுள்ள உயிர்கட்கு 'மகன் வந்தான்', 'மகள் வந்தாள்' என எண்ணோடு பாலுங் காட்டியும் வந்தனர் பழந்தமிழர்.*

*மக்கள் பகுத்தறிவுள்ள உயிரினமாயினும், அவருள் எல்லாரும் அதைப் பெறாமையால், பகுத்தறிவடையாத குழந்தைகளையும், பிள்ளைகளையும் 'குழந்தை வருகிறது', 'பிள்ளை வருகிறது' எனப் பாலீறு கொடாது எண்ணீறே கொடுத்துக் கூறியும், பருவமடைந்தவ ருள்ளும் பலர் பகுத்தறிவைப் பெறாமையால் அவரை 'மாக்கள்' என்று பிரித்தும் வந்தது, பழந்தமிழரின் பெரும்புலமையை யுணர்த்தும்.*

---

*2. ''குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே – உடம்போ டுயிரிடை நட்பு'' என்றார் (குறள் 338) திருவள்ளுவர். ''கூடுவிட்டிங் காவிதான் போயினபின்பு'' என்றார் (நல்வழி, 22) ஔவையார்.*

*''மாவும் மாக்களும் ஐயறி வினவே*
*பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே''* ***(மரபியல், 32)***

*''மக்கள் தாமே ஆறறி வுயிரே*
*பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே''* ***(மரபியல், 33)***

*என்று* ***தொல்காப்பியரும்***,

*''செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்*
*அவியினும் வாழினும் என்''* ***(குறள். 420)***

*''மக்களே போல்வர் கயவர் அவரன்ன*
*ஒப்பாரி யாங்கண்ட தில்''* ***(குறள். 1071)***

*எனத்* ***திருவள்ளுவரும்***, *மாந்தரை மக்கள் மாக்கள் என இருவகைப் படுத்திக் கூறுதல் காண்க.*

*மாந்தன் இயற்ற முடியாத இயற்கையை இயற்றிய ஒரு தலைவன் இருத்தல் வேண்டுமென்றும், அவன் எல்லாவற்றையுங் கடந்தவன் என்றும், கண்டு அல்லது கொண்டு அவனைக் கடவுள்[3] என்றனர் முதற்றமிழர்.*

*மக்கள் குடியிருக்கும் மனைக்குத் தமிழில் வீடு என்று பெயர்; பேரின்ப உலகிற்கும் வீடு என்றே பெயர். இவ்விரு பெயரும் ஒரு சொல்லே.*

*மாந்தன் பகலெல்லாம் உழைத்துக் களைத்து உணவு அல்லது பொருள் தேடி, மாலைக்காலத்தில் மனையாகிய வீட்டை யடைந்து இளைப்பாறி யின்புறுகின்றான்; உழைப்பாளிபோன்றே ஒருநாள் வழிப்போக்கனும் பகலெல்லாம் நடந்திளைத்து இராக்காலத்தில் ஒரு வீட்டில் தங்கி இளைப்பாறி யின்புறுகின்றான். வேலையை விடுதலுக்கும் வழிநடையை விடுதலுக்கும் வீடு என்று பெயர். 'விடுமுறை', 'விட்டிறுத்தல்' என்னும் வழக்குகளையும் நோக்குக.*

*எழுவகையான எல்லையற்ற பிறவிகளில் உழன்று அறத்தை ஈட்டிய ஆன்மா, அல்லது அப் பிறவிகளில் அலைந்து திரிந்து வீட்டுநெறிச் செலவை முடித்த ஆன்மா, அடையும் பேரின்ப வுலகும் வீடுபோலுதலின் வீடெனப் பட்டதென்க.*

---

*3. கடவுள் என்னும் பெயர்க்கு 'எல்லாவற்றையும் இயக்குபவன் அல்லது செலுத்துபவன்' என்றும் பொருளுரைக்கலாம். கடவுதல் = செல்லுதல்.*

சிலர் பிறப்பு இறப்பு என்னும் சொற்கள், முறையே, பகரமெய்ச் சேர்க்கையும் அதன் நீக்கமும் பெற்றிருப்பதால், உயிர் உடம்பொடு கூடுதலையும் அதைவிட்டு நீங்குதலையும் குறிக்கு மென்று கூறுவர். பிறப்பு என்பது 'பிள்' என்னும் வேரினின்றும், இறப்பு என்பது 'இறு' என்னும் வேரினின்றும் பிறந்திருப்பதாலும், பிணங்கு இணங்கு எனப் பிற வெதிர்ச்சொற்களும் பிறப்பு இறப்பு என்பவை போன்றே யமைந்திருப்பதாலும், அது போலிக் கூற்றென்க.

## 2. இலக்கணக் குறியீடு

எழுத்துகளில், வேறோர் எழுத்தின் உதவியின்றித் தானே ஒலிக்கும் உயிரெழுத்து தானாய் இயங்கும் உயிரையும், உயிரெழுத்தின் உதவியின்றித் தனித்தொலியாக மெய்யெழுத்து உயிரின்றி இயங்காத உடம்பையும், உயிரோடு கூடிய மெய்யெழுத்து உயிரோடு கூடிய உடம்பையும் ஒக்கிருத்தலால், அம் மூவகை எழுத்திற்கும் அம் மூவகைப் பொருட்பெயர்களையே உவமையாகு பெயராக இட்டனர் முதனூலாசிரியர்.

உயிரெழுத்துகளில், குறில் நெடில் என்பன குறுவாழ்க்கை யுயிரையும் நெடுவாழ்க்கை யுயிரையும் மெய்யெழுத்துகளில், வல்லினம் மெல்லினம் இடையினம் என்பன வல்லுடம்பையும் மெல்லுடம்பையும் இடைத்தரவுடம்பையும், நிகர்க்கும் என்பதை, அவ்வப் பெயர்களே உணர்த்தும்.

இலக்கியங் கண்டதற் கிலக்கணம் இயம்புதல் முறையில், பகுத்தறிவுள்ள உயிர்களைக் குறிக்கும் சொற்களை உயர்திணை என்றும், பகுத்தறிவில்லாத பொருள்களைக் குறிக்கும் சொற்களை அஃறிணை யென்றும் வகுத்தனர் முதனூலாசிரியர்.

பெயர் வினை உடை உரி என்னும் நால்வகைச் சொற்களுள், முதலிரண்டே தலைமையானவை. பெயர் என்பது ஆளையும், வினை என்பது ஆளின் செயலையும் குறிப்பன.

பெயர்ச்சொற்கள் ஏழு வேற்றுமை யடைவதும், இறுதியில் விளிவேற்றுமையாவதும்; உயிர்கள் அல்லது ஆன்மாக்கள் எழுபிறவி கொள்வதும் இறுதியில் இறைவனால் அழைக்கப்பெறுவதும் போல்வன.

பெயர் என்னும் சொல், முதலாவது, ஓர் ஆளை விளித்தற்கோ ஒரு பொருளைச் சுட்டுதற்கோ இடப்பட்ட சொல்லைப் பொதுப்படக்

குறிப்பதாகும். அது பின்னர் ஆகுபெயராய் ஒரு பெயரால் விளிக்கப்படும் ஆளையும் குறிக்கும். இருவர் மூவர் முதலிய எண்ணடி உயர்திணைப் பெயர்களை இரண்டு பேர் மூன்று பேர் என்னும் வகையிற் சொல்வது உலக வழக்கு. பேர் என்பது பெயர் என்பதன் மரூஉ.

இறையான்மா போன்றே உயிரான்மாவும் முதலீறற்ற தென்பதும், நிலைத்திணை (தாவரம்) நீர்வாழ்வன ஊர்வன பறவை விலங்கு மக்கள் தேவர் ஆகிய எழுவகைப் பிறப்புகளை யடையுமென்பதும், மக்கட் பிறப்பில் வீடுபேற்றிற்குச் சமைந்த நிலையில் இறைவனால் (ஆசிரிய வடிவில்) ஆட்கொள்ளப் பெறும் என்பதும், தென்னாட்டுச் சிவநெறிக் கொள்கை.

''ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே''

''புல்லும் மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே''

''நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே''

''சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே''

''நண்டும் தும்பியும் நான்கறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே''

''புள்ளும் மாவும்[4] ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே''

''மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'' **(மரபியல், 27 - 33)**

என்பன **தொல்காப்பியம்**.

இந் நூற்பாக்கள் அறுவகைப் பிறப்பையே எடுத்துக்கூறினும், ஏழாம் பிறப்பாகிய தெய்வப் பிறப்பும் இறுதியதனுள் அடங்கும்.

4. 'மாவும் மாக்களும்' என்பது பாட வேறுபாடு.

''மக்கள் தாமே ஆறறி வுயிரே'' என்று கூறியதோ டமையாது, ''பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'' என்று ஆசிரியர் பிறிதும் இணைத்துக் கூறியதனால், ஆறறிவுள்ள தெய்வப் பிறப்பும் மக்கட் பிறப்போடு சேர்த்துக் கூறப்பெற்றதாகும். உயிர்களை அறிவுபற்றி வகைப்படுத்திக் கூறுவதே ஆசிரியர் நோக்கமாதலின் விண்ணு லகிலுள்ள தேவர்களை விதந்து குறிப்பிட்டிலர். ஆறறிவுயிர் என்னும் பிறப்பளவில் மக்கட்கும் தேவர்க்கும் வேறுபாடின்மை யுணர்க.

மேலும், இல்லறம் துறவறம் ஆகிய இருவகை யறத்திலும் சிறந்தோரைத் தெய்வத்தோ டொப்பக் கொள்வது இருவகை வழக்கிலும் காணப்பட்டதாகும். துறவிகளைக் கடவுளர் என்றும் பகவர் என்றும் அடிகள் என்றும் அழைப்பதையும்,

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'' **(குறள். 50)**

என்று **வள்ளுவர்** கூறியதையும் நோக்குக.

ஆகவே, எழுவகைப் பிறப்பும் தொல்காப்பியனார்க்கு உடம்பா டென்பதும், அறுவகைப் பிறப்பையும் முறையே ஒவ்வோ ரறிவாக ஏற்றிக் கூறுவதால் அவற்றுக்கொரு தொடர்பு குறிப்பது ஆசிரியர் கருத்தென்பதும் பெறப்படும்.

எழுவகைப் பிறப்பையும் எடுக்கும் ஆன்மாவானது உயிரளவில் ஒன்றாயிருப்பினும் உடம்பளவில் வேறுபடுவதாலும், ஓரறிவுள்ள நிலைத்திணைப் பிறப்பிற்கும் ஓர் உடம்பு வேண்டி யிருப்பதாலும். ஒவ்வொரு பிறப்பையும் ஒரு வேறுபாடு அல்லது வேற்றுமையெனக் கொள்வது சாலப் பொருத்தமாகும்.

நிலைச்சொல்லான பெயர்ச்சொல் வருஞ்சொல்லின் பொருட் கேற்பத் திரியும் வேறுபாட்டை, வேற்றுமை என்பது தமிழிலக்கணம்.

தொல்காப்பியர் வேற்றுமையைப் பற்றிக் கூறுமிடத்து,

''வேற்றுமை தாமே ஏழென மொழிப'' **(546)**

''விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே'' **(547)**

''அவைதாம்,
பெயர் ஐ ஒடு கு
இன் அது கண்விளி என்னும் ஈற்ற'' **(548)**

*''அவற்றுள்,*
*எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே''* ***(549)***

*என்றார்.*

*வேற்றுமை மொத்தம் எட்டெனவும், அவற்றுள் முதல் வேற்றுமை பெயரின் இயல்பே யெனவும், பிற வேற்றுமை யெல்லாம் அதன் திரிபெனவும், இறுதி வேற்றுமை பெயரின் விளியெனவும் கூறிய இலக்கணம்; இயல்பும் எழுவகைப் பிறப்புமாகிய ஆன்மநிலைகள் எட்டென்பதையும், அவற்றுள் முதலதொழிந்த ஏனையவெல்லாம் வேற்றுமைப்பட்டவை யென்பதையும், இறுதிநிலையாகிய மக்கட் பிறப்பில் இறைவன் ஆன்மாவைத் தன்னிடம் அழைத்துக் கொள்வான் என்பதையும், குறிப்பாயுணர்த்து மன்றோ?*

*வினைச்சொற்களுள், முற்றுவினை எச்சவினை என்பன முடிந்த வினை முடியாத வினைகளையும், இறந்தகாலவினை, நிகழ்காலவினை, எதிர்காலவினை என்பன எச்சவினை நுகர்வினை எதிர்வினை (சஞ்சிதம் பிராரத்தம் ஆகாமியம்) என்பவற்றையும் ஒத்துள்ளன.*

*இங்ஙனம், மொழிச்சொற்களும் இலக்கணக் குறியீடுகளும் மெய்ப்பொருளுண்மைகளையும் கருத்துகளையும் உணர்த்துவது, தமிழின் தனிப்பெருஞ் சிறப்பாம்.*

# 4
# ஒருபொருட் பல சொற்கள்

*எம்மொழியிலும் ஒரு பொருட்குப் பல சொற்களிருப்பின், அவை யாவும் பருப்பொருளில் ஒத்திருப்பினும் நுண்பொருளில் ஒத்திரா. ஆகவே, ஒருபொருட் பலசொற்களெல்லாம் நுண்பொருள் வேறுபாட்டை யுடையன.*

*'' கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்''* ***(மூதுரை, 13)***

*'' கோக்கண்டு மன்னர் குரைகடல் புக்கிலர்''* ***(தனிப்பாடல்)***

*'' அமையொடு வேய்கலாம் வெற்ப''* ***(பழ. 357)***

*தந்தப்பல் லக்குஞ் சிவிகையுந் தாங்கி''* ***(தொண்டை - சத. 87 )***

*''கொடுந்தாள் முதலையும் இடங்கருங் கராமும்''* ***(குறிஞ்சிப். 257)***

*என்ற அடிகளில், ஒருபொருட் பலசொற்கள் வந்து வெவ்வேறு பொருள்நுட்பங் குறித்தல் காண்க.*[1]

### 1. பொருள் வகை

***பொருள்*** *காட்சி கருத்து ஆகிய இரண்டற்கும் பொதுவான பொருள்;* ***பண்டம்*** *கட்புலனானதும் கனவடிவுள்ளதுமான உயிரற்ற பொருள்;* ***சரக்கு*** *காய்ந்த பொருள்;* ***தாரம்*** *இயற்கை விளைபொருள்;* ***ஆக்கம்*** *செயற்கை விளைபொருள்;* ***செய்பொருள்*** *கையாற் செய்யப்படும் பொருள்;* ***உரு*** *கன வடிவப் பொருள்;* ***உருவம்*** *பெருங் கனவடிவப் பொருள்;* ***உருப்படி*** *தனிப்பட்டதும் உயிரற்றதும் ஒன்றன்படியுமான கனவடிவுப்பொருள்* (article); ***உடைமை*** *உடம்பிலுள்ள ஆடையணிப்பொருள்;* ***மதி*** *அளவிடப்பட்டு வரி*

---

1. இவ் வுண்மையை – 'Synonyms Discriminated', 'Words confused and Misused' முதலிய ஆங்கில நூல்களுட் காண்க.

*விதிக்கப்படும் கடல் வாணிகப்பொருள்* ***(எ - டு :*** *ஏற்றுமதி, இறக்குமதி);* ***சொம்*** *சொந்தப் பொருள் :* ***சொத்து*** *சொந்தப் பொருட்டொகுதி* (property). ***செல்வம்*** *விலைமதிப்புள்ள பொருட்டொகுதி.*[2] ***வெறுக்கை*** *செறிந்த செல்வம்;* ***காசு*** *தனி நாணயம்* (coin); ***பணம்*** *காசுத் தொகுதி* (money).

### *2. அரசர் வகை*

***ஊர்த்தலைவர் :*** *குறிஞ்சித்தலைவன் பெயர்கள் – மலையன், வெற்பன், சிலம்பன், பொருப்பன், கானகநாடன். (வெற்பு சிலம்பு பொருப்பு என்பன மலையின் பொதுப் பெயர்கள்).*

*முல்லைத்தலைவன் பெயர்கள்– குறும்பொறை நாடன், அண்ணல், தோன்றல்.*

*மருதத்தலைவன் பெயர்கள்– ஊரன், மகிழ்நன், கிழவன்.*

*பாலைத்தலைவன் பெயர்கள்– விடலை, மீளி, காளை.*

*நெய்தல் தலைவன் பெயர்கள்– கொண்கன், சேர்ப்பன், துறைவன், மெல்லம்புலம்பன்.*

***நாட்டுத்தலைவர் : குரிசில்*** *பிரபு,* ***வேள்*** *குறுநில மன்னன்;* ***குறும்பன்*** *கொள்ளைத் தலைவன்;* ***மன்னன்*** *சிற்றரசன்;* ***கோன்*** *அல்லது* ***கோ*** *அரசன்;* ***வேந்தன்*** *முடிவேய்ந்த பேரரசன், இந்திரன்.*

### *3. பேய் வகை*

*இருள் அல்லது* ***கருப்பு*** *இருண்டு தோன்றும் பேய்;* ***பேய்*** *அஞ்சத்தக்க ஆவி;* ***அலகை*** *துன்புறுத்தும் பேய்;* ***சூர்*** *அல்லது சூரர மகள் அல்லது அணங்கு அஞ்சத்தக்க பெண்பேய்;* ***தாக்கணங்கு*** *புடைத்துக் கொல்லும் பெண்பேய்;* ***நோக்கணங்கு*** *பார்வையாற் கொல்லும் பெண் பேய்;* ***மோகினி*** *ஆடவர்க்கு மோகத்தை யுண்டாக்கிக் கொல்லும் பெண்பேய்;* ***இடாகினி*** *இடுபிணந் தின்னும் பெண்பேய்;* ***குறளி*** *குட்டிப்பேய்;* ***பூதம்*** *பெரும்பேய்;* ***கூளி*** *குறும்பூதம்;* ***முனி*** *சடைப்பேய்;* ***ஆலி*** *ஆலமரப்பூதம்.*

---

*2. ‘செல்வோம்’ என்று சொல்வது செல்வம் என்றும் கையைவிட்டுச் செல்வது செல்வமென்றும் சிலர் பொருட் காரணம் கூறுவது பொருந்தாது. செல்லும் மதிப்புள்ளதே செல்வம். ‘இக் காசு செல்லுமா, செல்லாதா?’ என்னும் வழக்கை நோக்குக!*

### 4. குதிரைவகை

**குதிரை** குதிப்பது அல்லது தாண்டுவது; **பாடலம்** விரிந்த கழுத்தும் மார்பும் உடையது; **கோணம்** அல்லது கோடகம் முக்கோணக் கழுத்துடையது; **இவுளி** எதிர்த்துப் போர் புரிவது; **வன்னி** வெண்ணிறமானது; **பரி** வேகமாக ஓடுவது; **கந்துகம்** கடைந்த தூண்போன்ற கால்களையுடையது; **கனவட்டம்** கனமும் உருட்சியு முடையது; **கோரம்** கொடுமையானது; **புரவி** மதில் தாண்டுவது.

### 5. உடற்பெயர்

**உடல்** உடம்பிற் கைகால் தலையற்ற நடுப்பகுதி; **உடம்பு** முழுவுடம்பு (இவை ஆட்சிப்பொருள்கள்); **உடக்கு** உள்ளீடற்ற உடம்புக்கூடு; **யாக்கை** எழுவகைத் தாதுக்களாற் கட்டப்பட்டது; **மெய்** உயிரை மேலாகப் பொதிந்திருப்பது; **மேனி** உடம்பின் மேற்புறம்.

### 6. முதலைவகை

**முதலை** (gavial) தென்னாசியாவிற் பெரும்பான்மையாக வுள்ளது; **இடங்கர்** (crocodile) வட ஆப்பிரிக்காவிற் பெரும்பான்மை யாகவுள்ளது; **கராம்** (allegator) தென் அமெரிக்காவிற் பெரும் பான்மையாகவுள்ளது.

### 7. தவளைவகை

**தவளை** தவிர்த்து அல்லது இடைவிட்டுப் பாய்வது; **அரைத்தவளை** வாலறாத குட்டித்தவளை; **நுணல்** மணலுக்குள் நுழைந்திருப்பது; **தேரை** திரைந்த தோலையுடையது; **சொறியன்** சொறியுள்ளது; **மொங்கான்** மிகப் பெரியது.

### 8. வான்சுடர்ப் பெயர்கள்

**வெள்ளி** வெண்மையாக இரவில் தெரியும் சிறு சுடர்ப் பொதுப்பெயர்; **நாள்** இருபத்தேழு நாண்மீன்களின் பொதுப்பெயர்; **கோள்** எழு கோள்களின் பொதுப்பெயர்; **மீன்** நாள்மீன் அல்லது கோள்மீன்; **ஓரை** பன்னீர் இராசியின் பொதுப்பெயர்.

### 9. கொடி வகை

**கொடி** சிறியது; **பதாகை** அல்லது **படாகை** பெரியது.

### 10. போன்மை (Likeness) வகைகள்

**ஓவியம்** வரையப்படும் சித்திரம்; **கட்டளை** உருவம் வார்க்கும் அச்சு; **சிலை** நினைவுகூர்தற்கு ஒருவரைப்போல் செய்துவைத்த

*உருவம்; **படிமை** தெய்வச்சிலை; **பதுமை** தனிப்பட்டவரைக் குறியாது பொதுவாய்ச் செய்து வைக்கப்பட்ட ஆண் பெண் உருவம்; **பொம்மை** சிறு பதுமை; **பாவை** கனவளவில்லாத தோற்பாவை அல்லது கண்பாவை.*

### 11. மறுதலை வகைகள்

*எதிர்* (opposite); *திரித்தல்* (alteration); *பகை* (enmity); *மறுதலிப்பு* (denial); *மாற்றுமை அல்லது மறுதலை* (contrariety); *மறுப்பு* (refutation); *மறை* (negation); *எதிர்மறை* (strong negation); *மாற்றம்* (transference); *மாற்று* (antidote); *மாறு* (exchange); *முரண்* (contradiction); *விலக்கு* (prohibition); *வேற்றுமை* (difference); *வேறுபாடு* (change).

### 12. நூல்வகை

***நுவணம்** (நுவணை) கலை இலக்கணம், புத்தகத்திற் கூறப்படும் பொருள்; **புத்தகம்** நூற்பொருள் எழுதிய ஏட்டுத் தொகுதி; **பனுவல்** பிரபந்தம்; **வனப்பு** செய்யுள் நூல் அல்லது காவிய வகை; **சுவடி** சிறு புத்தகம்.*

*கலை தொழிற்கலை* (Art); *நூல் அறிவுக்கலை* (Science).

### 13. பாயிர வகைகள் [3]

***முகவுரை** நூல் முகத்தில் உரைக்கப்படுவது; **பதிகம்** ஆக்கியோன் பெயர் நூல் வந்தவழி முதலிய பத்துப் பொருள்களைக் கூறுவது; **அணிந்துரை** நூலுக்கு அழகு செய்து நிற்பது; **நூன்முகம்** நூலின் தொடக்கமாயிருப்பது; **புறவுரை** நூலின் இறுதியில் உரைக்கப்படுவது; **தந்துரை** நூலிற் சொல்லப்படாத பொருளைத் தந்துரைப்பது; **புனைந்துரை** நூலைச் சிறப்பித்துரைப்பது.*

### 14. யாப்பு வகை

***யாப்பு** சொற்களைப் பாவாக இசைத்தல்* (Metrical composition); ***செய்யுள்** அடிவரை யறுத்த மொழிநடை* (Poetry); ***பா** செய்யுள் வகை.* (Poetic metre); ***பாவினம்** இலக்கணம் நிரம்பாத பா; **நூற்பா***

---

*3. பாயிரம் என்பது போர்முகத்திற் பகைவரை விளித்துக் கூறும் முகவுரை. பின்பு அது நூன் முகவுரைக்காயிற்று. பயிர்தல் – விளித்தல், அழைத்தல். ''பாயிரங் கூறிப் படைதொக்கால் என்செய்ப'' என்பது பழமொழி.*

*இலக்கணங் கூறும் சூத்திரம்;* ***பாட்டு*** *பாடப்படும் தனிச்செய்யுள், இசைப்பா* (poem, song); ***கீர்த்தனை*** *கடவுளின் கீர்த்தியைக் கூறும் இசைப்பாட்டு* (lyric); ***பண்ணத்தி*** *நாடோடிப் பாட்டு,* ***தேவபாணி*** *தெய்வத்தை வழுத்தும் செய்யுட்பா.* ***பண்*** *இராகம்;* ***பாண்*** *இசைத்தொழில்.*

### *15. சான்றுவகை*

***ஆவணம்*** *பத்திரம்* (Record); ***அத்தாட்சி*** *மெய்ப்பிக்குங் கையெழுத்து (ஹஸ்த சாக்ஷி);* ***சான்று*** *ஆதாரம்* (Evidence); ***கரி*** (Witness).

### *16. புகழ்வகை*

***ஒளி*** *நன்மதிப்பு;* ***பெயர்*** *அல்லது* ***பேர்*** *நல்ல வழியிலும் தீயவழியிலும் பரவும் பேர்;* ***இசை*** *புலவர் பாடுவதால் உண்டாகும் புகழ்;* ***புகழ்*** *இறந்த பின்னும் வழங்கும் உயர்த்துரை;* ***சீர்த்தி*** *அல்லது* ***கீர்த்தி*** *மிகுபுகழ்.*

### *17. ஒலிவகை*

***அரவம்*** *பொதுவான ஒலி;* ***குரல்*** *தொண்டையொலி;* ***ஆரவாரம்*** *பெரிய ஊர்வலத்தில் கேட்கும் பல் இயவொலி;* ***இரைச்சல்*** *மழை அருவி சந்தைக்கூட்டம் முதலியவற்றின் பேரொலி;* ***ஆர்ப்பு*** *மாபெருங் கூட்டத்தின் வாழ்த்து அல்லது கண்டனவொலி;* ***சிலம்பு*** *எதிரொலி;* ***சிலை***[4] *பாடும்போது கலகலவென்றிலங்கும் ஒலி;* ***சந்தடி*** *விழா நிகழிடத்திலும் மாநகர வீதியிலும், பல்வேறு கவனமுள்ள மக்கள் தொழிலாலுண்டாகும் ஒலி;* ***கூச்சல்*** *பலர்கூடிக் கத்துமொழி;* ***பூசல்*** *சண்டையிலும் போரிலும் கேட்கும் ஒலி;* ***முழக்கம்*** *இடியாலும் பறையாலும் உண்டாகும் பேரொலி;* ***இசை*** *இனிய ஒலி;* ***ஒலி*** *எழுத்தொலி;* ***ஓசை*** *சொற்றொடர் அல்லது பாட்டொலி;* ***சந்தம்*** *அசையொத்த அடிகளைக் கொண்ட பாட்டொலி;* ***வண்ணம்*** *எழுத்தொத்த அடிகளைக் கொண்ட பாட்டொலி.*

### *18. மாலைவகை*

***கண்ணி*** *இவ்விரு பூவாக இடைவிட்டுத் தொடுத்த மாலை;* ***தார்*** *கட்டிய மாலை;* ***தொங்கல்*** *தொங்கல் விட்டுக் கட்டிய மாலை;*

*4. 'அவன் பாடுகையிற் சிலையோடும்' என்பது தென்னாட்டு வழக்கு.*

***கதம்பம்*** *அல்லது* ***கத்திகை*** *பலவகைப் பூக்களால் தொடுத்த மாலை;* ***படலை*** *பச்சிலையோடு மலர் விரவித்தொடுத்த மாலை;* ***தெரியல்*** *தெரிந்தெடுத்த மலராலாய மாலை;* ***அலங்கல்*** *சரிகை முதலிய வற்றால் விளங்கும் மாலை;* ***தொடலை*** *தொடுத்த மாலை;* ***பிணையல்*** *பின்னிய மாலை;* ***கோவை*** *கோத்த மாலை;* ***கோதை*** *கொண்டை மாலை;* ***சிகழிகை*** *தலை அல்லது உச்சி மாலை;* ***சூட்டு*** *நெற்றி மாலை;* ***ஆரம்*** *முத்து மாலை.*

### *19.* செருப்புவகை

***மிதியடி*** *ஒரே யடியுள்ளது.* ***தொடுதோல்*** *இடையன் செருப்புப் போலக் குதிங்காற்கும் புறங்காற்கும் வார்பூட்டியது;* ***சப்பாத்து*** *அகன்ற அடியுள்ளது;* ***சோடு*** *திரண்ட அடியுள்ளது;* ***செருப்பு*** *அளவான அகலமும் திரட்சியுமுடைய அடியுள்ளது;* ***குறடு*** *கட்டையாற் செய்தது.*

### *20.* சிவிகைவகை

***சிவிகை*** *மூடு பல்லக்கு;* ***பல்லக்கு*** *திறந்த பல்லக்கு.*

### *21.* மரக்கலவகை

***புணை*** *நீரில் மிதக்கும் கட்டை;* ***தெப்பம்*** *பல மிதப்புக் கட்டைகளின் சேர்க்கை;* ***கட்டுமரம்*** *இருகடையும் வளைந்த மரக்கட்டு;* ***தோணி*** *தோண்டப்பட்ட மரம் போல்வது;* ***ஓடம்*** *வேகமாய்ச் செல்லும் தட்டையான தோணி;* ***திமில்*** *திரண்ட மீன்படகு 'திண்டிமில் வன்பரதவர்'' (புறம். 24);* ***பஃறி*** *பன்றிபோன்ற வடிவமுள்ள தோணி;* ***பரிசில்*** *வட்டமான பிரம்புத் தோணி;* ***அம்பி*** *விலங்குமுகம் அல்லது பறவைமுகம் போன்ற முகப்பையுடைய மரத்தோணி;* ***படகு*** *பாய் கட்டிய தோணி;* ***நாவாய்*** *நீரைக் கொழித்துச் செல்லும் போர்க்கலம்;* ***கப்பல்*** *பலவாய் கட்டி வணிகச் சரக்கேற்றிச் செல்லும் பெருங்கலம்.*

### *22.* குற்ற வகைகள்

***அரில்*** *பொருள்கள் ஒழுங்கின்றி மடங்கிக்கிடக்கும் குற்றம்;* ***அழுக்கு*** *உடம்பிலும் உடையிலும் படியும் தீநாற்ற மாசு;* ***ஆசு*** *சக்கையும் மக்கும் வைத்து ஒட்டியதுபோன்ற குற்றம்;* ***இழுக்கு*** *ஒழுக்கக்கேடு;* ***ஏதம்*** *உறுப்பறை, உயிர்க்கேடு;* ***கசடு*** *மண்டி போன்ற குற்றம்;* ***கரிசு*** *பாவம்* (sin); ***கரில்*** *கொடுமை;* ***களங்கம்*** *கருத்*

*தொளிப்பு;* ***கறை*** *வாழை நுங்கு முதலியவற்றின் சாற்றாலுண்டாகும் சாயம்;* ***குற்றம்*** *சட்டத்திற்கு மாறான செயல்* (fault, guilt); ***குறை*** *தேவை அல்லது ஊனம்;* ***தப்பு*** *அல்லது* ***தப்பிதம்*** *சரியல்லாதது* (wrongness); ***தவறு*** *ஒரு கடமையைச் செய்யாக் குற்றம்* (failure); ***தீங்கு*** *இன்னல்* (harm); ***தீமை*** *நன்மையல்லாதது* (evil); ***துகள்*** *புழுதிபோன்ற குற்றம்;* ***நவை*** *மக்கள்போன்ற குற்றம்;* ***பழுது*** *பழமையால் வந்த கெடுதல்.*

***பிழை*** *ஒன்றிற்கு இன்னொன்றைச் சொல்லும் அல்லது கொள்ளும் குற்றம்* (mistake); ***புகர்*** *புள்ளி போன்ற குற்றம்;* ***புரை*** *துளைபோன்ற குற்றம்;* ***போக்கு*** *சேதம் அல்லது கழிவு;* ***மயல்*** *மயக்கத்திற்கிடமான குற்றம்;* ***மறு*** *மேனியிலுள்ள கரும்புள்ளி* (mole) *போன்ற குற்றம்;* ***மாசு*** *பொருள்களின்மேற் படியும் சிறு தூசி;* ***மை*** *கருமை;* ***வழு*** *இலக்கண நெறியினின்று விலகும் குற்றம்* (error); ***வழுவாய்*** *பாவம்;* ***வடு*** *தழும்புபோன்ற குற்றம்;* ***வசை*** *பழிப்பாகிய குற்றம்.*

### *23. காற்றுவகை*

***வேற்றலம்*** *(வாதம்);* ***வளி*** (wind); ***சூறாவளி*** (tempest); ***சுழல்*** (whirlwind); ***காற்று*** (gas); ***அன்றமை*** (air); ***ஆவி*** (spirit, vapour); ***வெம்பாவி*** (mist); ***நீராவி*** (steam); ***புயல்*** (cyclone); ***உயிர்*** (life); ***கொண்டல்*** *கிழக்கினின்று வீசும் மழைக்காற்று;* ***தென்றல்*** *தெற்கினின்று வீசும் இனிய மென்காற்று;* ***கோடை*** *மேற்கினின்று வீசும் வெப்பமான வன்காற்று;* ***வாடை*** *வடக்கினின்று வீசும் குளிர் காற்று.*

### *24. கருவிவகை*

***கருவி*** *பருப்பொருள் ஆய்தப்பொது* (instrument); ***ஆயுதம்*** *ஒரு தொழிற்குரிய கருவி* (tool); ***படை*** *போர்க்கருவி* (weapon); ***கரணம்*** *அறிவுக்கருவி அல்லது உறுப்புக்கருவி;* ***காரணம்*** *காரியத்தை விளைவிப்பது* (cause); ***ஏது*** *வாதக்காரணம்* (reason); ***முதல்*** *வணிகமுதல் போன்ற முதனிலை;* ***அடி*** *மரத்தின் அடிபோன்ற முதனிலை;* ***மூதம்*** *மரத்தின் வேர்போன்ற முதனிலை;* ***வித்து*** *மரம் முளைத்த விதைபோன்ற முதனிலை;* ***தலைக்கீடு*** *போலி ஏது* (pretext).

### *25. கொடைவகை*

***ஐயம்*** *இரப்போர்க்கிடுவது;* ***கைந்நீட்டம்*** *வேலைக்காரர்க்கு விழாநாளிற் கொடுப்பது;* ***ஈவு*** *இறைவன் பிறப்பில் ஒருவனுக்களித்த*

வரம்; ***பரிசு*** அல்லது ***பரிசில்*** திறமை கண்டளிப்பது; ***கொடை*** உயர்ந்தோர்க்கும் சிறு தெய்வங்கட்கும் கொடுப்பது; ***நன்கொடை*** முழுவுரிமையாகக் கொடுக்கும் சன்மானம்; ***மானியம்*** (மானிபம்) விளைவை யுண்ணும்படி கொடுக்கும் நிலம்; ***கட்டளை*** கோயிலிற் குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு விடும் நிபந்தம்; ***உறாவரை*** அல்லது ***முற்றூட்டு*** முழுவுரிமையாக அளிக்கும் நிலம்; ***இறையிலி*** அறத்திற்கு வரியில்லாது விடப்பட்ட நிலம்; ***தானம்*** அடியார்க்கும் பார்ப்பார்க்கும் அளிப்பது; ***பரிசம்*** மணப்பெண்ணுக் களிப்பது; ***வண்மை*** வரையாதளிப்பது; ***குருபூசை*** அடியார்க்குப் படைக்கும் விருந்து.

### 26. வெப்பவகை

***அழல்*** (தழல்) அவியாத கனல்; ***அனல்*** (கனல்) சற்று அவிந்த கனல்; ***உருமிப்பு*** வெப்பநாளிற் காற்றில்லாமையால் நேரும் புழுக்கம்; ***எரி*** எரியுஞ் சுவாலை; ***கங்கு*** கனல்துண்டு; ***கணை*** மூலச்சூடு; ***காங்கை*** நிலத்தில் அல்லது வெளியிலுள்ள வெப்பம்; ***கணப்பு*** குளிர்காயும் கனல்; ***காய்ச்சல்*** உடம்பு சுடும் வெப்பம்; ***கொதிப்பு*** மேலெழுந்து பொங்கும் வெப்பம்; ***கொள்ளி*** எரியுங் கட்டையின் நுனியிலுள்ள நெருப்பு; ***சுரம்*** முதுவேனிற் பாலை; ***சூடு*** உணவினால் உடலிலுண்டாகும் வெப்பம்; ***புழுக்கம்*** காற்றில்லாத சரக்கறையில் வெயர்க்கும் வெப்பம்; ***வெக்கை*** எரியும் நெருப்பின் அண்மையிலுள்ள வெப்பம்; ***வெட்டை*** வெப்பமிகையால் உண்டாகும் ஒரு நோய் (gonorrhea); ***வெப்பம்*** தட்பம் என்பதற்கு எதிர்; ***வெப்பு*** உடல் வெப்பத்தால் உண்டாகும் தொழுநோய்; ***வெம்மை*** சுடும் வெப்பம்; ***வெதும்பல்*** சுடாவெப்பம்; ***வெயில்*** வெப்பமான கதிரவன் ஒளி; ***வேனல்*** கோடைக்கால வெப்ப மென்காற்று; ***வேனில்*** கோடைக்காலம்.

### 27. தொகுதிப் பெயர்

***அம்பலம்*** (village assembly); ***அவை*** (audience); ***அவையம்*** (jury); ***ஆசிடை*** (association); ***ஆயம்*** (assembly); ***இல்*** அல்லது ***இல்லம்*** (house); ***கடிகை*** (village council); ***கணம்*** (society, host, body); ***கழகம்*** (academy); ***களம்*** (field); ***களரி*** (institute); ***குழு*** (faction, committee); ***குழூஉ*** (class); ***குழுமம்*** (guild); ***குழாம்*** (group); ***குழும்பு*** (company); ***கும்பு*** (gang); ***கும்பல்*** (crowd); ***குறி*** (village council); ***பெருங்குறி*** (meeting, gathering); ***கூளி*** (multitude); ***கூட்டம்*** (meeting, gathering); ***திரள்*** (mass); ***தொழுதி*** (herd, flock); ***தொகுதி*** (set, aggregation); ***தொகை*** (collection, sum); ***நெருள்*** (big crowd); ***பண்ணை*** (farm, a bevy

of ladies); ***பொதியில்*** (public hall); ***மக்கள்*** (people); ***மந்தை*** *ஆனிரை, மானிரை;* ***மன்று, மன்றம்*** *பொதுவிடம், அம்பலம், அறங் கூறவையம்;* ***மாந்தர்*** (human beings); ***மன்பதை*** (humanity mankind); ***வகுப்பு*** (class).

***தானை, சேனை***(army); ***படை*** (division, force); ***பஞிலம்***(company); ***கணகம்*** (battalion); ***மன்பதை*** (regiment); ***தண்டு*** (troop); ***தார்*** *போர்ப்படையின் முன்னணி;* ***கூழை*** *போர்ப்படையின் முன்னணி;* ***தூசு, தூசி*** *கொடி தாங்கிச் செல்லும் கொடிப்படை.*

***தலைக்கட்டு;*** *கணவனும் மனைவியும் மட்டும் உள்ள குடும்பம்;* ***குடும்பம்*** *கணவனும் மனைவி மக்களும் சேர்ந்த கூட்டம்;* ***குடும்பு*** *பல குடும்பங்கள் சேர்ந்த கூட்டம்;* ***இல்*** *அல்லது* ***குடி*** *பல தலைமுறையாகத் தொடர்ந்துவரும் பெருங் குடும்பு;* ***மரபு*** *தொடர்ந்துவரும் குடிவழி;* ***குலம்*** *பல குடிகள் சேர்ந்த தொகுதி (எ-டு: பள்ளியர், கவண்டர், அகம்படியர், குடியானவர் முதலிய பல குடிகள் சேர்ந்த தொகுதி (****வேளாண்*** *குலம்);* ***இனம்*** *ஒரேவகையான மொழி பேசும் பல குலத்தொகுதி* (nation); *வரணம் நிறங்காரணமாக ஏற்பட்ட மாபெருங் குலம்* (race).

### *28. இடவகை*

***இடம்*** *அறுவகைப்பொருளில் ஒன்றான இடம்;* ***தாவு*** *ஒரு கூட்டத்தில் ஒருவன் இருக்குமிடம்;* ***இருக்கை*** *இருக்கும் ஆசனம்;* ***வைப்பு*** *வைத்திருக்கும் நிலம்;* ***வரைப்பு*** *எல்லையோடு சேர்ந்த இடம்;* ***நிலை*** *நிற்குமிடம்* (stand); ***நிலையம்*** *நிற்கும் பெரிய இடம்* (station); ***நிலைக்களம்*** *ஆதாரமான இடம்.*

***வயின்*** *குறிப்பிட்ட சிற்றிடம்;* ***அகம்*** *உள்ளிடம்;* ***புறம்*** *வெளியிடம்;* ***இடை*** *பல பொருளுக்கு இடையிலுள்ள இடம்;* ***நடு*** *பல பொருளுக்குச் சரி நடுவிலுள்ள இடம்;* ***அகடு*** *ஒரே பொருளின் உள்நடுவிடம்;* ***தலை*** *மேலிடம்;* ***கண்*** *மேற்பரப்பிடம்;* ***சூழல்*** *சூழ்ந்திருக்குமிடம்;* ***புடை*** *சூழலில் ஒரு திசைப் பகுதி;* ***மருங்கு*** *ஒட்டியுள்ள ஒரு புறம்.*

***ஞாலம்*** *பூமியாகிய கோள்;* ***உலகம்*** *ஞாலத்திலுள்ள உயிர்த்தொகுதி;* ***நிலம்*** *தரை;* ***மண்*** *நிலப்புழுதி*(soil); ***மாநிலம்*** *முழுத்தரை;* ***நானிலம்*** *நால்வகை நிலத்தொகுதி;* ***வையம்*** *அல்லது* ***வையகம்*** *படைக்கப்பட்ட உலகு.*

### 29. மலைவகை

**அறை** சிறுபாறை; **முரம்பு** சரட் பாங்கான மேட்டுநிலம்; **கரடு** கற்பாங்கான பெருந்திடல்; **பொற்றை, பொறை, பொச்சை,** பெரும்பாறை; **பறம்பு** சிறு குன்று; **குன்று, குன்றம், கோடு** சிறுமலை; **குறும்பு** அரணான சிறுமலை; **மலை** மரமடர்ந்து வளமான குன்றுக்கூட்டம்; **பொருப்பு** பக்கமலை; **அடுக்கம்** மலையடுக்கு; **விலங்கல்** நாட்டின் குறுக்காகவுள்ள மலை; **விண்டு** விண்ணளாவிய மலை; **ஓங்கல்** உயர்ந்த மலை; **சிலம்பு** எதிரொலிக்கும் மலை; **வரை** மூங்கில் வளரும் மலை; **குவடு, கோடு** மலைச்சிகரம்; **முடி** உச்சிச் சிகரம்; **கொடுமுடி** உச்சிச் சிகரவுச்சி; **கவான்** இரு குவடுகள் சேருமிடம்; வெற்பு அடிமலை; **சாரல்** மலையடிவாரம்.

### 30. குளவகை

**குளம்** குளிக்கும் நீர்நிலை; **தெப்பக்குளம்** தெப்பத்தேர் ஓடும் குளம்; **ஊருணி** ஊரால் உண்ணப்படும் அல்லது ஊர்நடுவிலுள்ள குளம்; **ஏரி** ஏர்த்தொழிற்கு நீர்பாய்ச்சும் குளம்; **கண்வாய்** சிறுகால்வாயால் நீர் நிரம்பும் குளம்; **தடம், தடாகம்** அகன்ற அல்லது பெரியகுளம்; **கயம்** ஆழமான குளம்; **குட்டம்** குளத்தின் ஆழமான இடம்; **குட்டை** சிறு குளம்; **குண்டு** வற்றிய குளத்தில் நீர்நிறைந்த கிடங்கு; **பொய்கை** மலையடுத்த இயற்கையான குளம்; **சுனை** நீர்சுரக்கும் மலைக்குண்டு; **கிணறு** வெட்டப்பட்ட ஆழமான சிறுநீர்நிலை; **கேணி** மணற்கிணறு; **கூவல்** சிறுகிணறு; **துரவு** சுற்றுக் கட்டில்லாத பெருங்கிணறு; **மடு** அருவி விழும் கிடங்கு.

### 31. வீட்டுவகை

**வீடு** நிலையான உறைவிடம்; **மனை** வீட்டு நிலம் (ஆட்சிப் பொருள்); **இல், இல்லம்** வளமான வீடு; **அகம்** உள்வீடு; **உறையுள்** தங்குமிடம்; **குடிசை** தாழ்ந்த சிறு கூரைவீடு; **குடில்** இலையால் வேய்ந்த சிறு குடிசை; **குடிலம்** பெருங்குடில் (பர்ணசாலை); **குடிகை** சிறு கோயில்; **குச்சு வீடு** சிறு கூரைவீடு; **மச்சுவீடு** மெத்தை வீடு (terrace); **கூடு** நெற்கூடு போல் வட்டமான சிறு வீடு; **கொட்டகை** சுவர் அல்லது நெடுஞ்சுவர் இல்லாத நீண்ட கூரைவீடு; **கொட்டில்** தொழுவம் அல்லது ஆயுதச்சாலை; **சாலை** பெருங்கூடம்; **வளவு** ஒருவருக்குச் சொந்தமான பல வீடுகள் சேர்ந்த இடம்; **வளைசல்** வீடு முதலியவற்றின் சுற்றுப்புறம் அல்லது சூழ்நிலம்; **வளாகம்** ஆதீனம்; **மாளிகை** மாண்பான பெருவீடு; **மாடம்** மேனிலை; **மாடி** மேனிலை வீடு; **குடி** ஒரு குடும்பம் அல்லது குலம் வசிக்கும் தெரு அல்லது

*வீட்டுத் தொகுதி; **அரண்மனை** அரண் அல்லது பாதுகாப்புள்ள அரசன் மனை; **பள்ளி** படுக்கும் வீடு; **மடம்** துறவிகள் தங்கும் பெருங்கூடம் அல்லது மண்டபம்.*

### *32. அட்டில் வகை*

***அடுக்களை** வீட்டில் அடுப்புள்ள இடம்; **சமையலறை** சமைப்பதற்கென்று தனியாயுள்ள அறை; **அட்டில்** சமையலுக்குத் தனியாயுள்ள சிறு வீடு; **ஆக்குப்புரை** விழாப்பந்தலில் சமையலுக்கு ஒதுக்கப்படும் இடம்; **மடைப்பள்ளி** கோயிலை அல்லது மடத்தைச் சேர்ந்த சமையல் வீடு.*

### *33. சுவர்வகை*

***கட்டைமண்** சிறு மண்சுவர்; **குட்டிச்சுவர்** இடிந்து நிற்கும் சிறுசுவர்; **சுவர்** மண்ணால் அல்லது கல்லாற் கட்டப்படும் சிறுமதி, **மதில்** அரண்மனை கோயில் நகர் இவற்றைச் சூழும் உயர்ந்தகன் றுறுதியான சுவர்; **எயில்** பகைவரை அம்பால் எய்யும் இடங்களையுடைய மதில்; **இஞ்சி** செம்பையுருக்கி வார்த்துக் கல்லாற் கட்டிய மதில்.*

### *34. தெருவகை*

***முடுக்கு** சிறுசந்து; **சந்து** தெருவின் கிளை; **தெரு** சிறுவீதி; **மறுகு** போக்குவரத்து மிகுந்த பெருந்தெரு அல்லது வீதி; **ஆவணம்** கடைத்தெரு; **அகலுள்** அகன்ற மறுகு; **சாலை** பெருவழி* (road).

***சந்தி** மூன்று தெருக்கள் கூடுமிடம்; **சதுக்கம்** நான்கு தெருக்கள் கூடுமிடம்.*

### *35. காலப் பெயர்*

***காலம்** என்பது, 'பொருளிடங்காலம்' என்னுந் தொடரிற் போல் அறுவகைப் பொருளில் ஒன்றையும், 'முற்காலம்', 'தற்காலம்' எனப் பெருமுறையான காலப் பகுதியையுங் குறிக்கும்.*

***பொழுது** என்பது, பெரும்பொழுது சிறுபொழுது என அடையடுத்து நின்று, முறையே, இருமாத அளவான பருவ காலத்தையும் பத்து நாழிகையளவான நாட்பகுதியையுங் குறிக்கும்.*

*இளவேனில் முதுவேனில் கார் குளிர் முன்பனி பின்பனி என்பன, அறுபெரும் பொழுதுகள்; காலை நண்பகல் எற்பாடு மாலை யாமம் வைகறை என்பன, அறு சிறுபொழுதுகள்.*[5]

*5. சிறு பொழுதுகள் ஆறும், முறையே காலை 6 மணி முதல் நந்நான்கு மணியளவுகள்.*

***வேளை*** *என்பது, 'பகல்வேளை', 'இராவேளை', 'காலை வேளை', 'மாலைவேளை' என நாட்பகுதியைக் குறிக்கும்.*

***நேரம்*** *என்பது, மிகக் குறுகிய காலப்பெயராய், 'அவன் வந்தநேரம் எழுதிக்கொண்டிருந்தேன்', என வினைநிகழ் சிறு காலத்தையும், 'இவ் வினை செய்ய ஒரு மணிநேரம் செல்லும்', என வினை நிகழ்கால அளவையுங் குறிக்கும்.*

***சமையம்*** *என்பது, நீண்டதும் குறுகியதுமான காலப்பெயராய், ஒரு பொருள் ஒன்றற்குச் சமைந்த அல்லது பக்குவமான நிலையை மட்டும் உணர்த்தும். எ - டு ஃ சமையம் பார்த்து வந்தான்.*

***அமையம்*** *என்பது, சந்தர்ப்பம்.*

***செவ்வி*** *என்பது, ஒருவனின் மனம் செவ்வையான அல்லது இசைவான நிலை.*

***அற்றம்*** *என்பது, ஒருவனது விழிப்பற்ற நிலை.*

***முறை*** *என்பது, ஒரு வரிசையில் ஒருவனுக்கு ஒழுங்குப்படி ஒருவினை நிகழும் தடவை*[6] (turn). *எ - டு ஃ இருமுறை'* (two turns).

***தரம்*** *அல்லது* ***தடவை*** *என்பது, வரிசையொழுங்கில்லாமல் நிகழும் வினை நிகழ்ச்சித் தொகை. எ - டு ஃ இருதடவை* (twice, two times).

### *36. ஓய்வு வகை*

***ஒழிவு*** (leisure); ***ஓய்வு*** (rest, retirement); ***வரவு நாள்*** (holiday); – ***விடுமுறை*** (leave).

### *37. உறுப்பு வகை*

***சினை*** *உயிர்ப்பொருளின் உறுப்பு;* ***உறுப்பு*** *உயிர்ப்பொருள் உயிரில்லாப் பொருள் ஆகிய இரண்டிற்கும் பொதுவான உறுப்பு.*

***மீசைப்பெயர் ஃ அருப்பம்*** *புதிதாய் முளைப்பது;* ***கரிக்கோடு*** *கருத்த அருப்பம்;* ***மீசை*** *வளர்ந்தது.*

### *38. இறகுபெயர்*

***தூவு*** *அல்லது* ***தூவி*** *பறவையின் உடம்பிலுள்ள சிறு தூவு;* ***இறகு*** *சிறகிலும் வாலிலுமுள்ள பெருந்தூவு.*

---

*6. தடவை என்பதை 'வாட்டி' என்பது வடார்க்காட்டு வழக்கு.*

***குணப்பெயர் :*** ***இயல்*** *இயற்கையான குணம்;* ***இயல்பு*** *இயற்கையான வழக்கம்;* ***தொழுவாடு*** *செயற்கையான வழக்கம்;* ***பண்பு*** *திருந்திய குணம்;* ***குணம்*** *உயிர்ப்பொருட்குணம்;* ***தன்மை*** *உயிரிகட்கும் உயிரிலிகட்கும் பொதுவான குணம்.*

### *39.* கோப நிலைகள்

***கோபம்*** *சிறிது பொழுது நிற்பது;* ***சினம்*** *நீடித்து நிற்கும் கோபம்;* ***சீற்றம்*** *சீறியெழுங் கோபம்;* ***வெகுளி*** *அல்லது* ***காய்வு*** *அல்லது* ***உருத்திரம்*** *நெருப்புத் தன்மையுள்ள கடுங்கோபம்;* ***கொதிப்பு*** *கண்போன்ற உறவினர்க்குச் செய்யப்பட்ட கொடுமை பற்றிப் பொங்கியெழுங் கோபம்;* ***எரிச்சல்*** *மனத்தை உறுத்துங் கோபம்;* ***கடுப்பு*** *பொறாமையோடு கூடிய கோபம்;* ***கறம்*** *அல்லது* ***வன்மம்*** *பழிவாங்குங் கோபம்;* ***கறுவு*** *தணியாக் கோபம்;* ***கறுப்பு*** *கருப்பன் முகம் கறுத்துத் தோன்றும் கோபம்;* ***சிவப்பு*** *அல்லது* ***செயிர்*** *சிவப்பன் முகம் சிவந்து தோன்றுங் கோபம்;* ***விளம்*** *நச்சுத் தன்மையான கோபம்;* ***வெறி*** *அறிவிழந்த கோபம்;* ***முனிவு*** *அல்லது* ***முனைவு*** *வெறுப்போடு கூடிய கோபம்;* ***கதம்*** *என்றும் இயல்பான கோபம்;* ***கனிவு*** *முகஞ்சுளிக்கும் கோபம்;* ***செற்றம்*** *அல்லது* ***செறல்*** *பகைவனை அழிக்கும் கோபம்;* ***ஊடல்*** *மனைவி கணவனொடு கோபித்துக் கொண்டு உரையாடாத மென்கோபம்;* ***புலவி*** *ஊடலின் வளர்ந்த நிலை;* ***துனி*** *ஊடலின் முதிர்ந்த நிலை;* ***சடைவு*** *உறவினர் குறை கூறும் அமைதியான கோபம்.*

### *40.* மற நிலைகள்

***மறம்*** *வீரம்;* ***துணிவு*** *வினை முயற்சிக்கேற்ற வீரம்;* ***துணிச்சல்*** *நிலைமைக்கு மிஞ்சிய வீரம்;* ***உரன்*** *அல்லது* ***திடம்*** *அல்லது* ***திண்மை*** *மனவுறுதி;* ***திடாரிக்கம்*** *தைரியம்;* ***திண்ணக்கம்*** *நெஞ்சழுத்தம்;* ***தறுகண்மை*** *இறப்பிற்கஞ்சாத வீரம்.*

### *41.* தொழில்வகை

***செயல்*** *சிறியதும் பெரியதுமாய் ஏதேனுமொரு செயல்;* ***வினை*** *பிறவிக்கேதுவான செயல்;* ***தொழில்*** *கைத்தொழில்;* ***வேலை*** *பிழைப்பிற்கேதுவான செயல்;* ***அலுவல்*** *உத்தியோகம்;* ***கருமம்*** *ஆள்வினைச் செயல்;* ***கரணம்*** *திருமணச் சடங்காகிய செயல்;* ***கடமை*** *கட்டாயமாகச் செய்யவேண்டிய செயல்;* ***கடப்பாடு*** *ஒப்புரவு அல்லது வேளாண்மைச் செயல்;* ***காரியம்*** *வாழ்க்கைச் செயல்;* ***கம்*** *அல்லது* ***கம்மியம்*** *ஐவகைக் கொல்லர் தொழில்;* ***உழைப்பு*** *மெய்வருத்தச்*

செயல்; ***ஊழியம்*** வாணாள் முழுதும் செய்யும் வேலை (service); ***தொண்டு*** பொதுநலச் செயல்; ***தொழும்பு*** அடிமைவேலை; ***பணி*** பொருளாக்கச் செயல்; பணிக்கப்பட்ட செயல்; ***பணிவிடை*** குரவர்க்குச் செய்யும் தொண்டு; ***புரிவு*** விருப்பச் செயல்; ***சோலி*** கவனிக்க வேண்டிய சொந்த வேலை; ***வெட்டி*** வீண்வேலை; ***அமஞ்சி*** கூலியில்லாக் கட்டாய வேலை; ***நிகழ்ச்சி*** எதிர்பார்த்த நடப்பு; ***நேர்ச்சி*** எதிர்பாராத நடப்பு.

## 42. வினைச்சொல்

*சொல்லும் வகைகள் :* ***அசைத்தல்*** *அசை பிரித்துச் சொல்லுதல்;* ***அறைதல்*** *உரக்கச் சொல்லுதல்;* ***இசைத்தல்*** *கோவைபடச் சொல்லுதல்;* ***இயம்புதல்*** *இயவொலியுடன் சொல்லுதல்;* ***உரைத்தல்*** *செய்யுட்கு உரை சொல்லுதல்;* ***உளறுதல்*** *அச்சத்தினால் ஒன்றிற் கின்னொன்றைச் சொல்லுதல்;* ***என்னுதல்*** *ஒரு செய்தியைச் சொல்லுதல்;* ***ஓதுதல்*** *காதில் மெல்லச் சொல்லுதல்;* ***கரைதல்*** *அழுது அல்லது அழைத்துச் சொல்லுதல்;* ***கழறுதல்*** *கடிந்து சொல்லுதல்;* ***கிளத்தல்*** *ஒன்றைத் தெளிவாய்க் குறிப்பிட்டுச் சொல்லுதல்;* ***குயிற்றுதல்*** *குயிற்குரலிற் சொல்லுதல்;* ***குழறுதல்*** *நாத்தடுமாறிச் சொல்லுதல்;* ***கூறுதல்*** *கூறுபடுத்துச் சொல்லுதல்;* ***கொஞ்சுதல்*** *செல்லப்பிள்ளைபோற் சொல்லுதல்;* ***சாற்றுதல்*** *அரசனாணையைக் குடிகளுக்கறிவித்தல்* (proclamation); ***செப்புதல்*** *வினாவிற்கு விடை சொல்லுதல்;* ***சொல்லுதல்*** *இயல்பாக ஒன்றைச் சொல்லுதல்,* ***நவிலுதல்*** *பலகால் ஒன்றைச் சொல்லிப் பயிலுதல்;* ***நுதலுதல்*** *ஒன்றைச் சொல்லித் தொடங்குதல்;* ***நுவலுதல்*** *நூலைக் கற்பித்தல்;* ***நொடித்தல்*** *கதை சொல்லுதல்;* ***பகர்தல்*** *பகிர்ந்து விலை கூறுதல்;* ***பலுக்குதல்*** *உச்சரித்தல்;* ***பறைதல்*** *ஒன்றைத் தெரிவித்தல்;* ***பன்னுதல்*** *நுட்பமாய் விவரித்துச் சொல்லுதல்;* ***பிதற்றுதல்*** *பித்தனைப்போலப் பேசுதல்;* ***புகலுதல்*** *ஒன்றை விரும்பிச் சொல்லுதல்;* ***புலம்புதல்*** *தனிமையாய்ப் பேசுதல்;* ***பேசுதல்*** *உரையாடுதல் அல்லது மொழியைக் கையாளுதல்;* ***மாறுதல்*** *மாறிச் சொல்லுதல்;* ***மிழற்றுதல்*** *கிளிக்குரலிற் சொல்லுதல்;* ***மொழிதல்*** *சொற்றிருத்தமாகப் பேசுதல்;* ***வலித்தல்*** *வற்புறுத்திச் சொல்லுதல்;* ***விள்ளுதல்*** *வெளிவிட்டுச் சொல்லுதல்;* ***விளம்புதல்*** *பலர்க் கறிவித்தல்;* ***நொடுத்தல்*** *விலை கூறுதல்.*

## 43. உட்கொள்ளும் வகைகள்

***அசைத்தல்*** *விலங்குபோல் அசையிட்டுத் தின்னுதல்;* ***அதுக்குதல்*** *சூடான உணவை வாயின் இருபுறத்திலும் மாறிமாறி*

*ஒதுக்குதல்; **அரித்தல்** பூச்சி புழுப்போலச் சிறிது சிறிதாய்க் கடித்தல்; **அருந்துதல்** சிறிது சிறிதாய்த் தின்னுதல் அல்லது குடித்தல்; **ஆர்தல்** வயிறு நிரம்பவுண்ணுதல்; **உண்ணுதல்** எதையும் உட்கொள்ளுதல்; **உதப்புதல்** (குதப்புதல்) வாயினின்று வெளிவரும்படி மிகுதியாய்ச் சவைத்தல்; **உறிஞ்சுதல்** ஒன்றிலுள்ள நீரை வாயால் உள்ளிழுத்தல்; **ஒதுக்குதல்** ஒரு கன்னத்தில் அடக்குதல்; **கடித்தல்** கடினமானதைப் பல்லால் உடைத்தல்; **கரும்புதல்** ஒரு பொருளின் ஓரத்தில் சிறிது சிறிதாய்க் கடித்தல்; **கறித்தல்** மெல்லக் கடித்தல்; **குடித்தல்** கலத்திலுள்ள நீரைப் பொதுவகையில் வாயிலிட்டு உட்கொள்ளுதல்; **குதட்டுதல்** கால்நடைபோல் அசையிட்டு வாய்க்கு வெளியே தள்ளுதல்; **கொறித்தல்** ஒவ்வொரு கூலமணியாய்ப் பல்லிடை வைத்து உமியைப் போக்குதல்; **சப்புதல்** சவைத்து ஒன்றன் சாற்றை உட்கொள்ளுதல்; **சவைத்தல்** வெற்றிலை புகையிலை முதலிய வற்றை மெல்லுதல்; **சாப்பிடுதல்** சோறுண்ணுதல்; **சுவைத்தல்** ஒன்றன் சுவையை நுகர்தல்; **சூப்புதல்** கடினமானதைச் சப்புதல்; **தின்னுதல்** மென்று உட்கொள்ளுதல்; **நக்குதல்** நாவினால் தொடுதல்; **பருகுதல்** கையினால் ஆவலோடு அள்ளிக் குடித்தல்; **மாந்துதல்** ஒரே விடுக்கில் அல்லது பெருமடக்காய்க் குடித்தல்; **முக்குதல்** அல்லது **மொக்குதல்** வாய் நிறைய ஒன்றையிட்டுத் தின்னுதல்; **மெல்லுதல்** பல்லால் அரைத்தல்; **மேய்தல்** மேலாகப் புல்லைத் தின்னுதல்; **விழுங்குதல்** மெல்லாமலும் பல்லிற் படாமலும் விரைந்து உட்கொள்ளுதல்; **மிசைதல்** மிச்சில் உண்ணுதல்.*

### *44. இரக்கும் வகைகளும், ஈயும் வகைகளும்*

*__ஈ__ என்று இரத்தல் இழிந்தோன் செயல்; **தா** என்று கேட்டல் ஒத்தோன் செயல்; **கொடு** என்று கட்டளையிடுதல் உயர்ந்தோன் செயல்.*

*''ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே''*

*''தா என் கிளவி ஒப்போன் கூற்றே''*

*''கொடுஎன் கிளவி உயர்ந்தோன் கூற்றே''* ***(எச்சவியல், 49-50-51)***

*என்பன தொல்காப்பியம். ஆதலால், **ஈதல்** என்பது இழிந்தோர்க் களித்தல்; **தருதல்** என்பது ஒத்தோர்க் களித்தல்; **கொடுத்தல்** என்பது உயர்ந்தோர்க்களித்தல்.*

*__அளித்தல்__ என்பது அன்பினாற் கொடுத்தலையும், **இடுதல்** என்பது கீழிட்டுக் கொடுத்தலாகிய இரப்போர்க் கீதலையும்;*

***வழங்கல்*** *என்பது எடுத்துக் கொடுத்தலையும் குறிக்கும்.* ***அருளுதல்*** *என்பது அருளிக் கொடுத்தல்.*

### 45. பார்க்கும் வகைகள்

***விழித்தல்*** *கண்ணைத் திறந்து பார்த்தல்;* ***பார்த்தல்*** *இயல்பாகக் குறிக்கோளின்றிப் பார்த்தல்;* ***நோக்குதல்*** *குறிக்கோளோடு கூர்ந்து பார்த்தல்;* ***காணுதல்*** *தேடிப் பார்த்தல் அல்லது போய்ப் பார்த்தல்;* ***நோடுதல்*** *சோதித்துப் பார்த்தல் (நோட்டம் சோதனை);* ***கவனித்தல்*** *நுட்பமாய்ப் பார்த்தல்;* ***நாடுதல்*** *ஆராய்ந்து பார்த்தல்.*

### 46. உறங்கும் நிலைகள்

***படுத்தல்*** *கிடப்புநிலை யடைதல்;* ***சாய்தல்*** *கால்நீட்டி யிருந்துகொண்டு தலையைச் சாய்த்தல்;* ***கிடத்தல்*** *உறங்காது படுக்கை நிலையிலிருத்தல்;* ***கண்வளர்தல்*** *கண்ணை மூடுதல்;* ***துஞ்சுதல்*** *கண்ணைமூடித் தூங்குதல்;* ***தூங்குதல்*** *தொட்டிலிலாவது தூங்கு கட்டிலிலாவது கண்படை செய்தல்;* ***உறங்குதல்*** *ஒடுக்கநிலை யடைந்து அயர்ந்து தூங்குதல்.*

### 47. மனச் செயல்கள்

***முன்னுதல்*** *கருத்தோடும் கருத்தில்லாமலும் ஒன்றை உளத்திற்கொள்ளுதல்* (to think); ***உள்ளுதல்*** *ஒன்றை ஊக்கத்தோடு முன்னுதல்;* ***உன்னித்தல்*** *ஒன்றை முன்னிக் கண்டுபிடிக்க முயலுதல்* (to guess); ***உணர்தல்*** *புலன் வழியாலன்றி நேரடியாக உள்ளத்தால் அறிதல்;* ***அறிதல்*** *புலன்வழியாக உள்ளதாற் காணுதல்;* ***உகத்தல்*** *ஒன்றைச் சிறப்பாக விரும்புதல்* (to choose); ***ஊகித்தல்*** *காரண காரியங்களில் ஒன்றை யொன்றாலறிதல்* (to infer); ***எண்ணுதல்*** *யோசித்தல்;* ***ஓர்தல்*** *ஒன்றி அல்லது பொருந்த வுணர்தல்;* ***ஓய்தல்*** *நுணுகி ஆய்தல்;* ***உன்னுதல்*** *தியானித்தல்,* ***கண்ணுதல்*** *கவனமாய் முன்னிப்பார்த்தல்* (to consider); ***கணித்தல்*** *கணக்கிட்டுக் கண்டுபிடித்தல்* (to calculate); ***கருதுதல்*** *சற்று விருப்பத்தோடு முன்னுதல்* (to intend); ***சூழ்தல்*** *ஆலோசித்தல்;* ***தெரிதல்*** *ஒன்றன் தன்மையறிதல்;* ***தெரித்தல்*** *தெரிந்தெடுத்தல்* (to select); ***தெளிதல்*** *ஐயம் அகலுதல் அல்லது கலக்கம் நீங்குதல்;* ***தேறுதல்*** *உறுதி கொள்ளுதல், நம்புதல்;* ***தேர்தல்*** *பரீட்சித்தல், ஆய்ந்தெடுத்தல்; நினைத்தல் ஞாபகங்கொள்ளுதல்* (to remember); ***மதித்தல்*** *நிதானித்தல்;* ***மானித்தல்*** *முன்னியளத்தல்;* ***தீர்மானித்தல்*** *முன்னியளந்து முடிவு செய்தல்;* ***உசாவுதல்*** *உரையாடி ஆலோசித்தல்*

(discussion); ***கொள்ளுதல்*** *ஒன்றை நம்புதல்;* ***உட்கொள்ளுதல்*** *உள்ளத்திற்கொள்ளுதல்.*

*48. இகழும் வகைகள்*

***எள்ளுதல்*** *மனத்தால் இகழுதல்;* ***இகழ்தல்*** *சொல்லால் இகழுதல்; பழித்தல் சொல்லால் அல்லது செயலால் இகழுதல்.*

*49. வையும் வகைகள்*

***ஏசுதல்*** *'வாங்கிக் குடித்தவன்', 'இரப்பெடுத்தவன்' என வறுமைநிலையைச் சொல்லிப் பழித்தல்;* ***திட்டுதல்*** *'நாய்', 'பேய்' என அஃறிணைப் பெயரைச் சொல்லிப் பழித்தல்;* ***வைதல்*** *இடக்கர்ச் சொற்களைச் சொல்லிப் பழித்தல்;* ***பழித்தல்*** *பலர் முன் இழுக்கமான செய்திகளைச் சொல்லி அவமானப்படுத்துதல்;* ***சாவித்தல்*** *'நீ மண்ணாய்ப் போக', 'நீ நாசமாய்ப் போக' எனச் சபித்தல்.*

*50. கண்டிக்கும் வகைகள்*

***தெழித்தல்*** *விலங்குகளை அதட்டி ஓட்டுதல்;* ***அதட்டுதல்*** *மக்களை உரத்த குரலால் அல்லது ஒருசில அசைகளால் கடிதல்;* ***கடிதல்*** *குற்றஞ் செய்தவனைக் கோபித்தல்;* ***கண்டித்தல்*** *குற்றஞ் செய்தவன் திருந்துமாறு கோபித்தல்;* ***எச்சரித்தல்*** *குற்றஞ்செய்தவன் திருந்துமாறு அச்சுறுத்தல்;* ***சுழறுதல்*** *மென்மையாகக் கண்டித்தல்.*

***துணைவினைகள்*** *(நிகழ்கால வினையெச்சத்தின்பின் வருவன) :* ***முடியும்*** *என்பது வினைமுற்றுப் பெறுவதையும்,* ***இயலும்*** *என்பது வினைநடத்தலையும்,* ***கூடும்*** *என்பது வினைக்குரிய இடம் பொருளேவல் கூடிவருதலையும்,* ***ஒண்ணும்*** *என்பது உளப் பொருத்தத்தையும்,* ***தகும்*** *என்பது வினைத்தகுதியையும்,* ***வேண்டும்*** *என்பது வினைக்கட்டாயத்தையும்,* ***மாட்டுவேன்*** *என்பது வினைசெய்வான் வலிமையையும், சிறப்பாக வுணர்த்தும்.*

*51. செயப்பாட்டுவினை விகுதிகள்*

***படு*** *என்பது வினையால் துன்புறுதலையும்;* ***உண்*** *என்பது வினைப்பய னுகர்ச்சியையும்,* ***பெறு*** *என்பது வினையாற் பெறும் பேற்றையும், சிறப்பாக வுணர்த்தும்.*

*52. தொழிற்பெயர் - சூள் வகைகள்*

***சூள்*** *தெய்வஞ் சான்றாகக் கூறும் உறுதிமொழி;* ***ஆணை*** *அரசாணையின் பேரால் கூறும் உறுதிமொழி;* ***நெடுமொழி***

போர்முனையில் பகைவர்முன் ஒருவன் தன்னை மிகுத்துக்கூறும் கூற்று; **வஞ்சினம்** 'நான் என் பகைவனுக்கு இன்னது செய்யேனாகில் இன்னநிலை யடையக் கடவேன்' என்று கூறும் சபதம்; **பூட்கை** ஒரு காரியம் முடியும்வரை வேறொன்றை விலக்கிவைக்கும் உறுதிப்பாடு; **மேற்கோள்** ஓர் ஒழுக்கத்தை அல்லது நல்வினையை மேற்கொள்ளும் கடைப்பிடி; **பொருத்தனை** ஒருவன் தனக்குக் கடவுள் செய்யும் ஒரு குறிப்பிட்ட நன்மைக்குப் பதிலாகத் தான் ஒன்றைக் காணிக்கையாகக் கொடுப்பதாகச் செய்துகொள்ளும் வாய்ச்சொல் ஒப்பந்தம்; **நேர்த்திக் கடன்** கைம்மாறு கருதியும் கருதாமலும் கடவுளுக்கு அல்லது தெய்வத்திற்கு ஒரு பொருளை ஒதுக்கிவைத்தல்.

**கங்கு** அல்லது **கங்கணம்** ஒருவன் தன் பகைவனிடத்தில் பழிக்குப் பழிவாங்க வேண்டுமென்று அதற்கடையாளமாகக் கட்டிக்கொள்ளும் காப்பு; **ஒட்டு** ஒருவன் தான் விரும்பாததொன்றைத் தன் எதிரி செய்யின், அவன் அழிந்துவிடுவான் என்று கூறும் ஆணை.

53. நோன்புவகை

**நோன்பு** ஆன்மாவின் தூய்மைக்காக ஓரிருவேளை அல்லது நாள் உண்ணாதிருத்தல்; **தவம்** ஆன்மாவின் தூய்மைப்பாட்டிற் காகவும் அரும்பொருட் பேற்றிற்காகவும் பலநாள் உண்டி சுருக்கல்; **துறவு** உலகப்பற்றை யொழித்துக் காலமெல்லாம் கடுந்தவம் செய்தல்.

54. போட்டிவகை

**இகல்** பகைமையால் இடும்போட்டி; **இசல்** விளையாட்டாக இடும் போட்டி; **வீம்பு** வம்பிற்கு இடும் போட்டி.

55. சண்டைவகை

**சண்டை** இருவர் செய்யும் போர்; **மல்** இருவர்தம் வலிமை காட்டச் செய்யும் போர்; **கலாம்** பலர் செய்யும் போர்; **கலகம்** இரு குழுவார் அல்லது கூட்டத்தார் செய்யும் போர்; **போர்** இருநாட்டார் அல்லது அரசர் செய்யும் போர்; **பூசல்** போர் ஆரவாரம்; **சமர்** இரு படைகள் கலந்து செய்யும் போர்; **ஞாட்பு** செறிந்து செய்யும் போர்; **மலைவு** பூச்சூடிச் செய்யும் போர்; **செரு** பகைவரை அழிக்கும் போர்.

56. புறங்கூற்று வகை

**புறணி** முகத்திற் புகழ்ந்தும் புறத்திற் பழித்தும் பேசுதல்; **குண்டுணி** பலர்கூடி ஒருவரைப் பழித்து நகையாடுதல்; **குறளை**

*ஒருவர்க்கு மாறாக இன்னொருவரிடம் புறங்கூறிக் கலகமூட்டுதல்;* ***கோள்*** *மேலதிகாரியிடம் ஒருவரைப்பற்றித் தீதாகச் சொல்லுதல்;* ***ஓமல்***[7] *ஒருவரைப் பழித்து ஊரார் கூடிப் பேசும் பேச்சு;* ***உவலை*** *ஒருவரின் ஆக்கம் பொறாது பிறர் கூறும் கூற்று. ஓமல் உவலை இரண்டும் படர்க்கையிலன்றி முன்னிலையிலும் நிகழும் ஆயினும், புறங்கூற்றின்பாற்படும்.*

*57. மறுப்புவகை*

***மறுப்பு*** *பிறர் கொள்கையை அல்லது கூற்றை மறுத்தல்* (refutation); ***கண்டனம்*** *பிறர் கொள்கையையாவது கூற்றையாவது கண்டித்தல்* (censure); ***அங்கதம்*** *பிறர் கொள்கையையேனும் கூற்றையேனும் பழித்தல்* (satire).

*58. சோம்பல்வகை*

***நெடுநீர்*** *ஒரு வினையை நீட்டித்துச் செய்தல்;* ***மறவி*** *ஒரு வினையை மறந்துவிடுதல்;* ***மடி*** *ஒரு வினையுஞ் செய்யாது இருத்தல்;* ***துயில்*** *ஒருவினையுஞ் செய்யாது தூங்குதல்.*

*59. தண்டனை வகை*

***மன்றுபாடு*** *மன்றத்தாரால் விதிக்கப்பட்டு மன்றத்தின் (தருமாசனத்தின்) முன் செலுத்தும் தண்டம்;* ***குற்றம்*** *தெய்வத்திற்கு மாறாகச் செய்த குற்றத்திற்காகக் கோயிலிற் செலுத்தும் தண்டம்;* ***தண்டா*** *பிறவகையிற் செலுத்தும் தண்டம்.*

*60. குறிக்கோள் வகை*

***கொள்கை*** *மத நம்பிக்கை அல்லது சித்தாந்தம்* (doctrine); ***கோட்பாடு*** *சிறு கொள்கை* (tenet); ***குறிக்கோள்*** *குறித்துக்கொண்ட பொருள்* (object[8]); ***ஏடல்*** *சொந்தக் கருத்து* (idea); ***நெறிமுறை*** *ஒருவன் தானே அமைத்துக்கொள்ளும் நியதி* (principle); ***நோக்கம்*** *ஒரு பொருளின் மேலுள்ள நாட்டம்* (aim); ***இலக்கு*** *அடையவேண்டிய எல்லை* (goal); ***இலக்கம்*** *எய்யும் குறி* (target); ***விதி*** *ஒழுக்கம் அல்லது மொழிவரம்பு* (rule); ***சட்டம்*** *அரசியலார் அமைத்த விதி* (law); ***மேல்வரிச்சட்டம்*** *ஒருவர் தாம் கையாளுவதற்குத் தாமே அமைத்துக்கொண்ட திட்ட வாக்கியம்* (motto).

---

*7. 'ஊருக்கு ஓமல் வீட்டுக்கு வயிற்றெரிச்சல்' என்பது பழமொழி.*

*8. கருதுகோள்* (Hypothesis) *என்பது தற்காலம் புதுச்சொல்.*

*சில ஒருபொருட் பலசொற்கள், வேர்ப்பொருள் காரணமின்றி ஆட்சி காரணமாகவே வெவ்வேறு பொருள் குறிப்பனவாயுள்ளன. தொல்காப்பியனார்,*

*''அன்ன ஆங்க மான இறப்ப*
*என்ன உறழத் தகைய நோக்கொடு*
*கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம்''* ***(உவமவியல், 12)***

*''எள்ள விழையப் புல்லப் பொருவக்*
*கள்ள மதிப்ப வெல்ல வீழ*
*என்றாங் கெட்டே பயனிலை யுவமம்''* ***(உவமவியல், 14)***

*''கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய*
*ஒட்ட ஒடுங்க ஓட நிகர்ப்பஎன்*
*றப்பால் எட்டே மெய்ப்பால் உவமம்''* ***(உவமவியல், 15)***

*''போல மறுப்ப ஒப்பக் காய்த்த*
*நரவியப்ப நளிய நந்தஎன்*
*றொத்துவரு கிளவி உருவின் உவமம்''* ***(உவமவியல், 16)***

*என உவம வுருபுகளை நால்வகை யுவமத்திற்கும் பகுத்துக் கொடுத்தது ஆட்சிபற்றியே.*

*இனி அவர்,*

*''செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்*
*நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்*
*தன்மை முன்னிலை படர்க்கை என்னும்*
*அம்மூ விடத்தும் உரிய என்ப''* ***(கிளவியாக்கம், 28)***

*''அவற்றுள்,*
*தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்*
*தன்மை முன்னிலை ஆயீ ரிடத்த''* ***(கிளவியாக்கம், 29)***

*''ஏனை யிரண்டும் ஏனை யிடத்த''* ***(கிளவியாக்கம், 30)***

*''யாதுஎவன் என்னும் ஆயிரு கிளவியும்*
*அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும்''* ***(கிளவியாக்கம்,31)***

*''அவற்றுள்,*
*யாதுஎன வரூஉம் வினாவின் கிளவி*
*அறிந்த பொருள்வயின் ஐயந் தீர்தற்குத்*
*தெரிந்த கிளவி யாகலும் உரித்தே''* ***(கிளவியாக்கம், 32)***

என, **செல் வா தா கொடு யாது எவன்** என்று சொற்கட்கு இடமும் பொருளும் வரையறுத்தது, ஆட்சியும் பொருளும் பற்றியதாகும்.

**யாம் நாம்** என்ற சொற்கள், முறையே தனித்தன்மைப் பன்மையும் உளப்பாட்டுத் தன்மைப்பன்மையும் குறித்தற்கும் ஆட்சியே காரணமாகும்.

இனி, சொல் வேறுபாட்டினாலன்றி விகுதி வேறுபாட்டி னாலும் நுண்பொருள் வேறுபாடு கொண்ட ஒருபொருட் பல சொற்கள் அமைந்துள்ளன.

**எ - டு :** வாழ்தல் = வசித்தல்; வாழ்க்கை = உயிரோடிருக்கும் காலம்; வாழ்வு = இன்பமாக அல்லது சிறப்பாகப் பிழைத்தல்; வாழ்ச்சி = வாழுமிடம்; நிறுத்தல் = துலைக்கோலில் தூக்குதல்; நிறுத்தல் = படுக்கையிற் கிடப்பதை நட்டுக்கு நிற்கவைத்தல்; நிறுவுதல் = ஒரு கொள்கையை அல்லது நிறுவனத்தை (ஸ்தாபனத்தை) நாட்டுதல்; **நிற்பித்தல்** ஒருவனை நிற்கவைத்தல், **நிற்பாட்டுதல்** ஒரு காரிய நிகழ்ச்சியைத் தற்காலிகமாகவாவது நிலையாகவாவது நீக்குதல்.

இனி, பல பெயர்கள் ஒரே பருப்பொருளைக் குறிப்பன வாயினும், அவை யாவும் வெவ்வேறு காரணம் பற்றியன என்றறிதல் வேண்டும்.

**எ - டு : யானைப் பெயர்கள்**

**உம்பல்** உயர்ந்தது; **உவா** திரண்டது; **ஓங்கல்** மலைபோன்றது; **கரி** கரியது; **கள்வன்** கரியது; **கறையடி** உரல்போன்ற பாதத்தை யுடையது; **குஞ்சரம்** திரண்டது; **கைம்மா** துதிக்கையையுடைய விலங்கு; **கைம்மலை** கையையுடைய மலைபோன்றது; **தும்பி** துளையுள்ள கையையுடையது; **நால்வாய்** தொங்குகின்ற வாயை யுடையது; **புகர்முகம்** முகத்தில் புள்ளியுள்ளது (ஒருவகை); **புழைக்கை (பூட்கை)** துளையுள்ள கையையுடையது; **பெருமா** பெரிய விலங்கு; **பொங்கடி** பெரிய பாதத்தையுடையது; **யானை** (ஏனை) கரியது; **வழுவை** உருண்டு திரண்டது; **வாரணம்** சங்கு போன்ற தலையையுடையது, அல்லது புல்லை வாரிப்போடுவது; (வேழம் = வெள்ளையானை போலும்.)

இதுகாறுங் கூறியவற்றால், ஒரு பொருட்குப் பலசொற்கள் இருக்கலாமென்றும், அவை யாவும் பருப்பொருளில் ஒத்திருப்பினும் நுண்பொருளில் வேறுபட்டவையென்றும், தப்பான ஆட்சியால்

*சொற்கள் தமக்குரியவல்லாத பொருள்களைக் குறித்து வருகின்றன வென்றும், இத் தப்பான ஆட்சி கடைக்கழகக் காலத்திலேயே தொடங்கிவிட்டதென்றும், ஒருபொருட் பலசொற்கள் யாவும் தத்தம் நுண்பொருளை யுணர்த்திய காலம் தலைக்கழகத்ததாகவே யிருத்தல் வேண்டுமென்றும் அறிந்துகொள்க.*

# 5
# தமிழ்ச்சொல் வளம்

**பயிர்வகைச் சொற்கள்**

*சொல்வளம் இலக்கியச் செம்மொழிகட்கெல்லாம் பொது வேனும், தமிழ்மட்டும் அதில் தலைசிறந்ததாகும்.* ***கால்டுவெல் கண்காணியார்*** *இதுபற்றிக் கூறுவதாவது :*

*''தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆயும்போது, தமிழிலுள்ள ஒருபொருட் பலசொல் வரிசைகள் அவற்றில் இல்லாக்குறை எந்தத் தமிழறிஞர்க்கும் மிகத் தெளிவாகத் தோன்றும். தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக வுரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றி, தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியன வாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள.* ***எடுத்துக்காட்டாக*** *: பேச்சு வழக்குத் தமிழில் இருப்பிடத்தைக் குறிக்கும் சொல் 'வீடு' என்பது; ஆனால், இதனொடு தெலுங்கிற்குரிய 'இல்' என்னும் சொல்லும், கன்னடத்திற்குரிய 'மனை' என்னும் சொல்லும், இனி இவற்றோடு வடமொழிக்கும்* ***பின்னிய*** (Finnish) *மொழிகட்குமுரிய 'குடி' என்னும் சொல்லும் தமிழகராதியிற் குறிக்கப்பட்டுச் சில சமயங்களிற் பயன்படுத்தவும் பெறுகின்றன. இங்ஙனமாகத் தமிழ் இலக்கணமும் அகராதியும், திராவிடமொழிகளின் அமைவுகட்கும் வேர்ச்சொற்கட்கும் ஒரு பெரும் பொதுக்களஞ்சியமாகும்''என்பது.*

*('திரவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம்'* ***முன்னுரை, பக். 84, 85)***

*தமிழ்ச்சொல் வளத்தைப் பலதுறைகளிலும் காணலாமேனும், இங்குப் பயிர்வகைச் சொற்கள் மட்டும் சிறப்பாக எடுத்துக்காட்டப் பெறும்.*

### வித்துவகை

***விதை*** *கத்தரிவிதைபோலச் சிறியது;* ***முத்து*** *வேப்பமுத்துப் போல் உருண்டு திரண்டது;* ***காழ்*** *புளியங்கொட்டைபோல் வயிரங்கொண்டது;* ***கொட்டை*** *மாங்கொட்டைபோற் பெரியது.*

### வேர்வகை

***வேர்*** *ஆழமாக இறங்குவது;* ***கிழங்கு*** *திரண்டிருப்பது;* ***பூண்டு*** *உருண்டு மென்மையாயிருப்பது;* ***கட்டை*** *குட்டையான கற்றையாயிருப்பது.*

### வேரின் பிரிவுகள்

***ஆணிவேர்*** *தண்டின் தொடர்ச்சியாக ஆழமாய் இறங்குவது;* ***பக்கவேர்*** *ஆணிவேரின் கிளை;* ***சல்லிவேர்*** *பக்கவேர் கிழங்கு பூண்டு முதலியவற்றின் சன்னமான கிளைவேர்.*

### அரிதாள்வகை

***இருவி*** *நெல், கேழ்வரகு முதலியவற்றின் அரிதாள்.*

***கட்டை*** *சோளம், கரும்பு முதலியவற்றின் அரிதாள்.*

***தூறு*** *தென்னை, பனை முதலியவற்றின் அரிதாள்.*

***முருடு*** *வேம்பு, புளி முதலியவற்றின் அரிதாள்.*

### அடிவகை

***தாள்*** *நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி.*

***தண்டு*** *கீரை, வாழை முதலியவற்றின் அடி.*

***கோல்*** *நெட்டி, மிளகாய்ச் செடி முதலியவற்றின் அடி.*

***தூறு*** *குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடி.*

***தட்டு*** *அல்லது* ***தட்டை*** *கம்பு, சோளம் முதலியவற்றின் அடி.*

***கழி*** *கரும்பின் அடி;* ***கழை*** *மூங்கிலின் அடி.*

***அடி*** *புளி, வேம்பு முதலியவற்றின் அடி.*

### கிளைப் பிரிவுகள்

***கவை*** *அடிமரத்தினின்று பிரியும் மாபெருங் கிளை;* ***கொம்பு*** *அல்லது* ***கொப்பு*** *கவையின் பிரிவு;* ***கிளை*** *கொம்பின் பிரிவு;* ***சினை***

*கிளையின் பிரிவு;* ***போத்து*** *சினையின் பிரிவு;* ***குச்சு*** *போத்தின் பிரிவு; இணுக்கு குச்சின் பிரிவு.*

**காய்ந்த அடியுங் கிளையும்**

***சுள்ளி*** *காய்ந்த குச்சு;* ***விறகு*** *காய்ந்த சிறு கிளை;* ***வெங்கழி*** *காய்ந்த கழி;* ***கட்டை*** *காய்ந்த கொம்பும் கவையும் அடியும்.*

**இலைவகை**

***இலை*** *புளி வேம்பு முதலியவற்றின் இலை;* ***தாள்*** *நெல் புல் முதலியவற்றின் இலை;* ***தோகை*** *சோளம் கரும்பு முதலியவற்றின் இலை;* ***ஓலை*** *தென்னை பனை முதலியவற்றின் இலை.*

**கொழுந்துவகை**

***துளிர்*** *அல்லது* ***தளிர்*** *நெல் புல் முதலியவற்றின் கொழுந்து;* ***முறி*** *அல்லது* ***கொழுந்து*** *புளி வேம்பு முதலியவற்றின் கொழுந்து;* ***குருத்து*** *சோளம் கரும்பு தென்னை பனை முதலியவற்றின் கொழுந்து.*

*கொழுந்தாடை கரும்பின் நுனிப்பகுதி.*

**காய்ந்த இலைவகை**

***சண்டு*** *காய்ந்த தாளும்தோகையும்;* ***சருகு*** *காய்ந்த இலை.*

**இலைக்காம்பு வகை**

***அடி*** *தாள் தோகை இவற்றின் காம்பு;* ***காம்பு*** *இலையின் காம்பு;* ***மட்டை*** *ஓலையின் காம்பு.*

**இலைநரம்பு**

***நரம்பு*** *காம்பின் தொடர்ச்சியாக இலையின் நுனிவரை செல்வது;* ***நாம்பு*** *நரம்பின் கிளை.*

**பூமடல்வகை**

***பூ*** *வாழை மடல்;* ***மடல்*** *தாழை, வாழை முதலியவற்றின் மடல்;* ***பாளை*** *தென்னை, பனை முதலியவற்றின் மடல்.*

**பூவின் நிலைகள்**

***அரும்பு*** *பூவின் தோற்றநிலை;* ***போது*** *பூ விரியத் தொடங்கும் நிலை;* ***மலர்*** *(அலர்) பூவின் மலர்ந்த நிலை;* ***வீ*** *மரஞ்செடியினின்று பூ கீழேவிழுந்த நிலை;* ***செம்மல் பூ*** *வாடின நிலை.*

### அரும்புவகை

***அரும்பு*** *மல்லிகை முல்லை முதலியவற்றின் அரும்புபோல் சிறிதாயும் கூராயுமிருப்பது;* ***மொட்டு*** *அடுக்கு மல்லிகை நந்தியாவட்டம் முதலியவற்றின் அரும்புபோல் சற்றுப் பெரிதாயும் மொட்டையாயு மிருப்பது;* ***முகை*** *தாமரை சதுரக்கள்ளி முதலிய வற்றின் அரும்புபோல் பெரிதாயிருப்பது.*

### பூக்காம்புவகை

***காம்பு*** *சிறியது;* ***தாள்*** *அல்லது* ***தண்டு*** *பருமையும், மென்மையு முள்ளது;* ***நாளம்*** *உட்டுளையுள்ளது.*

### இதழ்வகை

***அல்லி*** *அகவிதழ்;* ***புல்லி*** *புறவிதழ்;* ***இதழ்*** *சிறியது;* ***மடல்*** *பெரியது.*

### பிஞ்சுவகை

***பூம்பிஞ்சு*** *பூவோடு கூடிய இளம்பிஞ்சு;* ***பிஞ்சு*** *இளங்காய்;* ***வடு*** *மாம்பிஞ்சு;* ***மூசு*** *பலாப்பிஞ்சு;* ***கவ்வை*** *எட்பிஞ்சு;* ***குரும்பை*** *தென்னை பனை முதலியவற்றின் இளம்பிஞ்சு;* ***முட்டுக்குரும்பை–*** *சிறு குரும்பை;* ***இளநீர்*** *முற்றாத தேங்காய்;* ***நுழாய்*** *இளம்பாக்கு;* ***கருக்கல்*** *இளநெல்;* ***கச்சல்*** *வாழைப்பிஞ்சு.*

### காய்நிலைகள்

***பழக்காய்*** *பழுத்தற்கேற்ற முற்றிய காய்;* ***கடுக்காய்*** *முற்றிய பனங்காய்;* ***காலக்காய்*** *அல்லது* ***பருவக்காய்*** *உரிய காலத்திற் காய்ப்பது;* ***வம்பக்காய்*** *காலமல்லாக் காலத்திற் காய்ப்பது;* ***கருக்காய்*** *முற்றிய காய்.*

### குலைவகைகள்

***கொத்து*** *அவரை துவரை முதலியவற்றின் குலை;* ***குலை*** *கொடிமுந்திரி போன்றதின் குலை;* ***தாறு*** *வாழைக்குலை;* ***கதிர்*** *கேழ்வரகு சோளம் முதலியவற்றின் கதிர்;* ***அலகு*** *அல்லது* ***குரல்*** *நெல் தினை முதலியவற்றின் கதிர்;* ***சீப்பு*** *வாழைத்தாற்றின் பகுதி.*

### கனிவகைகள்

***காய்*** *தெங்கு பூசணி முதலியவற்றின் கனி;* ***கனி*** *முந்திரி நெல்லி முதலியவற்றின் கனி (கனிவாயிருப்பது);* ***பழம்*** *மா வாழை*

*முதலியவற்றின் கனி (பழுப்பு நிறமானது);* ***நெற்று*** *வேர்க்கடலை போன்றதின் முதிர்வு;* ***காய்ப்பழம்*** *பழுக்கத் தொடங்கிய காய்;* ***ஓதப்பழம்*** *புளியின் காய்ப்பழம்.*

### முதிர்ச்சி வகைகள்

***பழுத்தல்*** *மா வாழை முதலியவற்றின் காய் முதிர்ச்சி.*

***முற்றல்*** *சுரை பூசணி முதலியவற்றின் காய் முதிர்ச்சி.*

***நெற்று*** *தேங்காய் பீர்க்கு முதலியவற்றின் காய் முதிர்ச்சி.*

***விளைச்சல்*** *நெல் சோளம் முதலியவற்றின் கதிர் முதிர்ச்சி.*

### காய்கனிக் கேட்டு வகைகள்

***சூம்பல்*** *நுனியில் சுருங்கிய காய்;* ***சிவியல்*** *சுருங்கிய பழம்;* ***சொத்தை*** *புழுபூச்சி யரித்த காய் அல்லது கனி;* ***வெம்பல்*** *சூட்டினால் பழுத்த பிஞ்சு;* ***அளியல்*** *குளுகுளுத்த பழம்;* ***அழுகல்*** *குளுகுளுத்து நாறிய பழம் அல்லது காய்;* ***சொண்டு*** *பதராய்ப்போன மிளகாய்.*

***கோட்டான்காய்*** *அல்லது* ***கூகைக்காய்*** *கோட்டான் உட்கார்ந்ததினால் கெட்ட காய்;* ***தேரைக்காய்*** *தேரையமர்ந்ததினால் கெட்ட காய்;* ***அல்லிக்காய்*** *தேரை யமர்ந்ததினால் கெட்ட தேங்காய்;* ***ஒல்லிக் காய்*** *ஒருவர் தமித்து இளநீர் குடித்த தென்னையிற் கெட்ட காய்.*

### காயின் காம்பிதழ் வகை

***இதக்கை*** *தேங்காய் பனங்காய் முதலியவற்றின் காம்பிதழ்;* ***சொங்கு*** *சோளத்தின் காம்பிதழ்.*

### பழத்தோல் வகை

***தொலி*** *மிக மெல்லியது;* ***தோல்*** *திண்ணமானது;* ***தோடு*** *வன்மையானது;* ***ஓடு*** *மிக வன்மையானது;* ***குடுக்கை*** *சுரையின் ஓடு;* ***மட்டை*** *தேங்காய் நெற்றின் மேற்பகுதி;* ***உமி*** *நெல் கம்பு முதலியவற்றின் மூடி;* ***கொம்மை*** *வரகு கேழ்வரகு முதலியவற்றின் உமி.*

### உள்ளீட்டு வகை

***சாறு*** *நீர் போலிருப்பது;* ***சோறு*** *கட்டிச் சோறுபோலிருப்பது;*[1] ***சதை*** *வாழை மா முதலியவற்றின் உள்ளீடு;* ***சுளை*** *சீத்தா பலா*

---

*1. கத்தரி முருங்கை கற்றாழை முதலியவற்றின் உள்ளீடு சோறு எனப்படும்.*

முதலியவற்றின் உள்ளீடு; **அரிசி** நெல் கம்பு முதலியவற்றின் உள்ளீடு; **பருப்பு** அவரை துவரை முதலியவற்றின் உள்ளீடு.

**கழிவுவகை**

**சக்கை** முந்திரி எலாமிச்சை முதலியவற்றின் கழிவு; **கொதக்கு** புளியின் கழிவு; **கூந்தை** பனங்காயின் கழிவு; **கோது** கரும்பின் கழிவு.

**விதைவகை**

**மணி** விளைந்தது; **பதர்** அல்லது **பதடி** விளையாதது.

**மணிவகை**

**கூலம்** நெல் புல் (கம்பு) முதலிய தானியம்; **பயறு** அவரை உழுந்து முதலியவை; [2] **கடலை** வேர்க்கடலை கொண்டைக்கடலை; முதலியவை; **விதை** கத்தரி மிளகாய் முதலியவற்றின் வித்து; **காழ்** புளி காஞ்சிரை முதலியவற்றின் வித்து; **முத்து** வேம்பு ஆமணக்கு முதலியவற்றின் வித்து; **கொட்டை** மா பனை முதலியவற்றின் வித்து; **தேங்காய்** தென்னையின் வித்து.

அவரை துவரை முதலிய பயறுகள் முதிரை என்று பெயர் பெறும்.

வித்து என்பது முளைக்கவைக்கும் எல்லா மணிகட்கும் பொதுப் பெயராம்.

**தொலி** மெல்லியது; **தோல்** திண்ணமானது; **தோடு** சற்று வன்மையானது; **ஓடு** மிக வன்மையானது; **சிரட்டை** அல்லது **கொட்டாங்கச்சி** தேங்காயின் ஓடு.

**பதர்வகை**

**பதர்** நன்றாய் விளையாதது; **பொக்கு** உள்ளீடற்றது.

**பயிர்வகை**

**பூசணம்** அல்லது **பூஞ்சணம்** (பூஞ்சாளம்) நொந்த சோற்றிலும் ஈரமரத்திலும் தோன்றும் நுண்பாசி; **பாசம்** நீர்மேலும் ஈரமுள்ள இடத்திலும் தோன்றும் பசுமையான நுண்பயிர்; **பாசி** நீரில் அடிவரை

2. கடலையும் பயற்றில் ஒருவகையே; கடையப்படுவது கடலை; வறுத்தலும் கடைதலொக்கும்.

*படர்ந்துள்ள பாசம்;* ***காளான்*** *ஈரமுள்ள இடத்தில் குடைபோல் தோன்றும் பயிர்வகை;* ***புல்*** *அறுகு குசை போன்றவை;* ***பூண்டு*** *வெங்காயம் வெள்ளைப் பூண்டு போன்றவை;* ***செடி*** *மிளகாய்ச் செடி கத்தரிச்செடி போன்றவை;* ***கொடி*** *அவரைக்கொடி பாகற்கொடி போன்றவை;* ***புதர்*** *அடர்ந்த குத்துச்செடி;* ***பயிர்*** *நெல் கம்பு கேழ்வரகு போன்றவை;* ***மரம்*** *மா புளி போன்றவை.*

**கொடிவகை**

***இவர்கொடி*** *ஏறிப்படர்வது* (climber); ***படர்கொடி*** *நிலத்திற் படர்வது* (creeper).

**இவர்கொடி வகை**

***வலந்திரி*** *வலமாகச் சுற்றி ஏறுவது;* ***இடந்திரி*** *இடமாகச் சுற்றி ஏறுவது.*

**மரவகை**

***ஆண்மரம்*** *காயாதது;* ***பெண்மரம்*** *காய்ப்பது;* ***கோளி*** *வெளிப்படையாய்ப் பூவாது காய்ப்பது;* ***வயிரம்*** *விளைந்த மரம்;* ***வெளிறு*** *விளையாத மரம்.*

**கரும்புவகை**

***கரும்பு*** *கரியது;* ***வேழம்*** *வெளியது;* ***இராமக்கரும்பு*** *வெண்மையுஞ் செம்மையுங் கலந்தது.*

**நிலைத்திணை (தாவர)ப் பாகுபாடு**

***அகக்காழ்*** *மா புளி போல உள்வயிரம் உள்ளவை;* ***புறக்காழ்*** *புல் மூங்கில் போல வெளிவயிரம் உள்ளவை.*

**இளம்பயிர் வகை**

***நாற்று*** *நெல் கத்தரி முதலியவற்றின் இளநிலை;* ***கன்று*** *மா புளி வாழை முதலியவற்றின் இளநிலை;* ***கருந்து*** *வாழையின் இளநிலை;* ***பிள்ளை*** *தென்னையின் இளநிலை;* ***குட்டி*** *விளாவின் இளநிலை;* ***மடலி*** *அல்லது* ***வடலி*** *பனையின் இளநிலை; பைங்கூழ் நெல் சோளம் முதலியவற்றின் பசும்பயிர்.*

### காய்ந்த பயிர் வகை

***வைக்கோல்*** *காய்ந்த நெல் வரகு முதலிய பயிர்;* ***செத்தை*** *காய்ந்த செடி;* ***தட்டு*** *அல்லது* ***தட்டை*** *காய்ந்த சோளம் கரும்பு முதலிய பயிர்;* ***மாறு*** *காய்ந்த துவரை மிளகாய் முதலிய பயிர்;* ***உலவை*** *காய்ந்த மரம்;* ***சாவி*** *பட்டுப்போன நெல் வரகு முதலியவற்றின் இளம் பயிர்.*

### வெட்டிய விறகுத்துண்டு வகை

***கட்டை*** *பெரியது;* ***சிறாய்*** *சிறியது;* ***பொடி*** *அல்லது* ***தூள்*** *சிறுசிறாய்.*

### மரப்பட்டை வகை

***பட்டை*** *புளி வேம்பு முதலியவற்றின் பட்டை;* ***சிறாம்பு*** *தென்னை பனை முதலியவற்றின் பட்டை;* ***மட்டை*** *அல்லது* ***தடை*** *வாழையின் பட்டை.*[3]

### பயிர்ச்செறிவு வகை

***புதர்*** *குத்துச்செடிகளின் செறிவு;* ***பொதை*** *பெருஞ்செடி கொடிகளின் செறிவு;* ***பொதும்பர்*** *மரங்களின் செறிவு.*

### நிலைத்திணைத் தொகுப்பு வகை

***செய்*** *நெல் கரும்பு முதலிய பயிர்த்தொகுதி;* ***தோட்டம்*** *மிளகாய் கத்தரி முதலிய செடித்தொகுதி;* ***தோப்பு*** *மா தென்னை முதலிய மரத்தொகுதி;* ***காடு*** *முல்லை குறிஞ்சியிலுள்ள நிலைத் திணைத் தொகுதி;* ***அடவி*** *மரமடர்ந்த காடு;* ***சோலை*** *மரமடர்ந்த இயற்கைத் தோப்பு;* ***கா*** *காக்கப்படும் சோலை;* ***கானல்*** *கடற்கரைச் சோலை;* ***வனம்*** *மக்கள் வழக்கற்ற காடு.*

### செய் வகை

***முதை*** *பழங்கொல்லை;* ***இதை*** *புதுக்கொல்லை;* ***புன்செய்*** *சிறிது பண்படுத்தப்பட்ட நிலம்;* ***நன்செய்*** *நன்றாய்ப் பண்படுத்தப்பட்ட நிலம்;* ***புறவு*** *முல்லை நிலம்;* ***கொல்லை*** *முல்லை நிலத்துப் புன்செய்;* ***புனம்*** *குறிஞ்சிநிலத்துப் புன்செய்;* ***வானாவாரி*** *(மானாமாரி) மழைபெய்து விளையும் நிலம்.*

---

*3. பட்டை என்னும் பெயர் வாழைத்தடைக்கும் வழங்கும்.*

**நிலவகை**

***புறம்போக்கு*** *பண்படுத்தப்படாத அரசியலார் நிலம்;* ***தரிசு*** *பயிர் செய்யப்படாது புல் முளைத்துக்கிடக்கும் நிலம்;* ***சிவல்*** *சிவந்த நிலம்;* ***கரிசல்*** *களிமண் நிலம்;* ***முரம்பு*** *கன்னிலம் அல்லது சரள்நிலம்;* ***சுவல்*** *மேட்டு நிலம்;* ***அவல்*** *பள்ளமான நிலம்.*

**நன்செய் வகை**

***வயல்*** *வைத்துப் போற்றப்படும் நிலம்;* ***கழனி*** *போரடிக்கும் களமுள்ள வயல்;* ***பழனம்*** *பழைமையான வயல்;* ***பண்ணை*** *பள்ளமான வயல்;* ***செறு*** *சேறு செய்யப்பட்ட வயல்.*

**வேலிவகை**

***இடுமுள்வேலி*** *இடப்பட்ட காய்ந்த முள்வேலி;* ***வாழ் முள்வேலி*** *வளரும் முட்செடியும் முள்மரமும் உள்ள வேலி.*

**காட்டுவகை**

***மிளை*** *அல்லது* ***இளை*** *காவற்காடு;* ***இறும்பு*** *குறுங்காடு;* ***வல்லை*** *பெருங்காடு;* ***முதையல்*** *பழங்காடு;* ***பொச்சை*** *கரிந்த காடு.*

*இங்ஙனம் பொருள்களின் வகைகளெல்லாம் தமிழில் தனித்தனி பெயர் பெற்றுள்ளன. இனி ஒரே பொருள் பல பெயர் பெறுவதுமுண்டு.* ***எ - டு :*** *வாளவரை, பாடவரை, சாட்டையவரை, தம்பட்டவரை.*

*இதுகாறுங் கூறியவற்றால், தமிழ் சொல்வளமுடைய தென்றும், தமிழர் மதிவளமுடையரென்றும், தமிழ்நாடு பொருள் வளமுடைய தென்றும், தெள்ளிதின் விளங்கும்.*

*ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம் புலமக்களாலும் அமையப்பெறும். தமிழ்ப் பொதுமக்கள் எங்ஙனம் உயர்ந்த பகுத்தறிவுடையர் என்பது முன்னரே மெய்ப்பொருட் சொற்களைப் பற்றிய கட்டுரையில் விளக்கப்பெற்றது. எத்துணையோ ஆராய்ச்சி நடந்துவரும் இக்காலத்திலும், எத்துணையோ மொழிகளினின்று கடன் கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும், இலையைக் குறிக்க* (leaf) *என ஒரே சொல் உளது. ஆங்கிலப் பயிர் நூலாசிரியரும், வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்ப் பொதுமக்களைப் போல வன்மை மென்மைபற்றித் தாள் இலை தோகை ஓலை எனப் பாகுபாடு செய்தாரில்லை. இத்தகைய பாகுபாடு*

ஏனை யுறுப்புகளுள்ளும் செய்யப்பட்டமை முன்னர்க் காட்டப் பெற்றது.

தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடைய தென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிறநாடுகளி லுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும் சில்வகைப் பட்டனவாகவு மிருக்க, தமிழ்நாட்டிலுள்ளவையோ, பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவு மிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, கோதுமையை எடுத்துக்கொள்ளின், அதில் சம்பாக்கோதுமை குண்டுக்கோதுமை வாற்கோதுமை முதலிய சில வகைகளேயுண்டு. ஆனால், தமிழ்நாட்டு நெல்லிலோ, செந்நெல் வெண்ணெல் கார்நெல் என்றும், சம்பா மட்டை கார் என்றும் பலவகைகள் இருப்பதுடன், அவற்றுள் சம்பா குண்டுச்சம்பா குதிரைவாலிச்சம்பா சிறுமணிச் சம்பா சீரகச்சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன. இவற்றோடு, வரகு காடைக்கண்ணி குதிரைவாலி முதலிய சிறு கூலங்கள் தமிழ்நாட்டிலன்றி வேறெங்கும் விளைவ தில்லை. தமிழ்நாட்டுள்ளும் தென்னாட்டிலேயே அவை விளைகின்றன. பழங் காலத்தில் விளைந்த அளவு பொன்னும் மணியும் முத்தும் பவழமும் இன்று விளையாவிடினும், அருமையான கூலங்களும் சிறு கூலங் களும் இன்றும் தென்றமிழ் நாட்டில் விளைந்து வருவது கண்கூடு.

ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும். வளத்தினால் மக்கள் திருந்துவதும் வறத்தினால் அவர்கள் கெடுவதும் இயல்பு.

''எவ்வழி ஆடவர் நல்லவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே'' **(புறம். 187)**

என்று ஔவையார் கூறினாரேனும்,

எவ்வழி நல்லை நிலனே
அவ்வழி வாழும் ஆடவர் நலரே

என்று அதை மாற்றுவதே இயற்கைக்குப் பொருத்தமாம். மருதநில மக்களினும் முல்லைநில மக்களும், முல்லைநில மக்களினும் குறிஞ்சிநில மக்களும், குறிஞ்சிநில மக்களினும் பாலைநில மக்களும், கொடியராயிருப்பதை இன்றும் காண்கிறோம். ஆதலால் நிலத்தின் பான்மையால் மக்கள் மனப்பான்மை திரியுமேயன்றி, மக்கள் மனப்பான்மையால் நிலத்தின் மனப்பான்மை திரிவதன்று. தமிழ்நாட்டின் தனிப்பெரு வளத்தினாலேயே, பண்டைத்

தமிழ்மக்கள் தனிப்பெரு நாகரிகத்தை யுடையவராயிருந்திருக் கின்றனர் என அறிக.[4]

திருந்திய மக்களை மற்ற உயிரிகளினின்றும் பிரித்துக் காட்டுவது மொழியாதலின், அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கும் சிறந்த வழியாகும். பொருள்களைக் கூர்ந்து நோக்கி நுண்பாகுபாடு செய்து அவற்றிற் கேற்பப் பருப்பொருட் சொற்களும் நுண்பொருட் சொற்களும் அமைத்துக்கொள்வது, சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்கட்கே இயலும்.

தமிழின் பெருமையையும் தமிழர் பண்பாட்டையும் உணர்ந்த கால்டுவெல் ஐயர், ''தமிழ்போன்ற திராவிட மொழியை நன்றாகக் கற்ற ஐரோப்பியர் ஒருவர், அத்தகைய வியத்தகு மொழியை வளர்த்துள்ள மக்களினத்தை மதிப்பொடு கருதாமல் இருக்க முடியாது'', ''தென்னிந்தியப் பழங்குடி மக்கள் மிக மதிநுட்பம் வாய்ந்தவர் என்பதற்கையமில்லை'' எனக் கூறியுள்ளார்.

– திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் முகவுரை, பக். 9, 10.

4. ஆதிமக்கள் மருதநிலத்தை யடைந்த பின்னரே நாகரிகத்தில் சிறந்ததையும், பேரூரும் நகரும் மாநகரும் முதன்முதல் மருதநிலத்திலேயே தோன்றியதையும், நகரம் என்னும் சொல்லினின்றே நாகரிகம் என்னும் சொல் திரிந்ததையும் ஊன்றி நோக்குக.

## 6

# பலபொரு ளொருசொற்கள்

'பலபொரு ளொருசொல்' என்பது ஒருபொருட் பலசொல்லுக்கு எதிராகும். 'வேழம்' என்பது, கரும்பு மூங்கில் யானை எனப் பலபொருள் தருதலின் பலபொரு ளொருசொல்லாம்.

பலபொரு ளொருசொற்கள் இருவகை நிலையில் ஏற்படுவதுண்டு. ஒன்று பல பொருட்கும் சிறப்புச் சொல் உண்டாயிருப்பது; இன்னொன்று அவை யில்லாதிருப்பது. கரும்பு மூங்கில் யானை என்னும் மூன்று சொல்லும் இருக்கும்போது, அவற்றுக்குப் பொதுவாக வேழம் என்னும் சொல் தோன்றுவது சிறப்புச் சொல் உள்ள நிலை; அம் மூன்றும் இல்லாதபோது அது தோன்றுவது சிறப்புச் சொல் இல்லா நிலை; இவற்றுள், முன்னது மொழியின் பண்பாட்டையும், பின்னது அஃதின்மையையும் உணர்த்தும்.

முதலாவது ஒருபொருட்கு ஒரு சொல் ஏற்பட்ட பின்னரே அதன் நுண்ணியல்புகளையெல்லாம் குறிக்கும் ஒருபொருட் பலசொற்கள் ஏற்படுதலின், ஒருபொருட் பலசொற்கள் மலிந்துள்ள மொழிகளி லெல்லாம் மொழிப் பண்பாட்டை யுணர்த்தும் பலபொரு ளொருசொற்களே காணமுடியும். தமிழ் ஒருபொருட் பலசொன் மலிந்த மொழியாதலின், ஏற்கெனவே தனித்தனி சொற்பெற்றுள்ள பல்வேறு பொருள்களை இனத்தன்மையும் ஒப்புமையும்பற்றித் தொகுத்துச் சுட்டும் பலபொரு ளொருசொற்களே கொண்டுள்ளது.

பலபொரு ளொருசொற்கள், (1) உண்மை (2) போலி என இருதிறப்படும். இனத்தன்மையும் ஒப்புமையும் தொடர்பும்பற்றிப் பல்வேறு பொருள்களைத் தொகுத்துச் சுட்டும் பலபொரு ளொருசொல் உண்மையானதாம்.

***எ-டு : கேழல்*** என்பது, பன்றியையும் அதற்கினமான யானையையும் குறிப்பது; **வாரணம்** என்பது, நெடுங்கடலையும்

*வளைந்த சங்கையும் சங்குபோன்ற தலையையுடைய (அல்லது நிலத்தைக் கிளைக்கின்ற) கோழியையுங் குறிப்பது.*

*திரிவும் புடைபெயர்ச்சியுந் திரிபுங் காரணமாக ஒரு வடிவடைந்து ஒருசொற்போலத் தோன்றும் சொற்கள் போலியாம்.*

***எ - டு :*** *கத்தியைக் குறிக்கும்* ***வாள்*** *என்னுஞ் சொல் 'வள்' என்னும் வேரினின்றும், ஒளியைக் குறிக்கும் வாள் என்னும் சொல் விள் என்னும் வேரினின்றும் திரிந்தவையாகும்.*

*'மாள்', 'மாண்' என்னும் இருவினைச் சொற்களும் இறந்த காலத்திற் புடைபெயருங்கால், மாண்டான் என ஒரு வடிவடையும்.*

*'புழைக்கை' என்பதன் திரிபான* ***பூட்கை*** *என்னும் சொல்லும், 'பூண்கை' என்பதன் திரிபான* ***பூட்கை*** *என்னும் சொல்லும், திரிபின் காரணமாக ஒருவடி வடைந்தவையாகும்.*

*உண்மையான பலபொரு ளொருசொற்கள்,* ***ஓரினந் தழுவியவும்,*** ***வேறினந் தழுவியவும்*** *என இருவகைப்படும்.*

### ஓரினந் தழுவியவை

***புல்*** *என்பது, புல் கம்பு மூங்கில் ஆகிய மூன்றையும்;* ***தாழை*** *என்பது, கைதை தெங்கு ஆகிய இரண்டையும்;* ***குருகு*** *என்பது நீண்டு வளைந்த கழுத்துள்ள நாரை கொக்கு அன்னம் முதலிய நீர்ப்பறவை களையும் கொக்கலகு போல் மூக்குள்ள கொல்லுலைத் துருத்தியை யும் குறிக்கும். இங்ஙனமே பிறவும்.*

### வேறினந் தழுவியவை

***ஓங்கல்*** *= மலை, யானை.*

***மீன்*** *= நீர்மீன், விண்மீன்.*

***தும்பி*** *= ஒருவகை வண்டு, யானை. இவ் விரண்டும் தூம்புள்ள கைபோன்ற உறுப்பை* (proboscis) *யுடையவை.*

***சுவரொட்டி*** *= ஒருவகை ஈரல், ஒருவகை விளக்கு, ஒருவகைப் புறா, ஒருவகை விளம்பரத்தாள். இவை யாவும் சுவரில் ஒட்ட அல்லது ஒட்டிவைக்கப்பெறுவன.*

*சில பொருள்கள் ஓரினம் அல்லது ஒத்த தன்மையுடையன என்பதை யுணர்த்த, அவற்றின் பொதுப்பெயர் இனப்பொருள்*

*தொறும் வெவ்வே றடைபெற்று வழங்கும். அத்தகைய பெயர்கள்* ***அடையடுத்த பலபொரு ளொருசொல்லாம். எ - டு ஃ*** *அரசு, ஆற்றரசு, பூவரசு; வேம்பு (அல்லது நல்லவேம்பு), நாய்வேம்பு, கறிவேம்பு, நிலவேம்பு; நெல்லி, கீழ்வாய்நெல்லி; பருத்தி, வேலிப்பருத்தி; தாழை, கற்றாழை; வாழை, கல்வாழை; புலி, வரிப்புலி (வேங்கை), சிறுத்தைப்புலி, கழுதைப்புலி, ஈப்புலி.*

*சில பொருள்களின் இனத்தியன்மையை அல்லது ஒப்புமை யைக் குறிக்க, அவற்றின் தொகுதிப்பெயர் அல்லது பொதுப்பெயர் தொகைபெற்று வழங்குவதுண்டு. அத்தகைய பெயர்கள்* ***தொகை பெற்ற பலபொரு ளொருசொல்லாம். எ-டு ஃ முந்நிரை*** *ஆடு மாடு எருமை என்னும் மூன்றன் மந்தை அல்லது கூட்டம்.*

***முக்கடுகம்*** *ஃ சுக்கு மிளகு திப்பிலி என்பன.*

*அடையடுத்ததும் தொகை பெற்றதுமான பலபொரு ளொரு சொற்கள், ஓரினந் தழுவியவாயு மிருக்கலாம்; வேறினந் தழுவியவாயு மிருக்கலாம்.*

*பலபொரு ளொருசொற்கள் ஒருபொருட் பலசொற்களைப் போல மொழிவளத்தை யுணர்த்தாவிடினும், தொகுத்தறிவும் பகுத்தறிவிற்கு வழிகாட்டுதலின், அவ்வளவில் மக்கள் பண்பாட்டை யுணர்த்துவனவேயாம் என அறிக.*

## 7

# வழக்கற்ற சொற்கள்

தமிழைப்போலச் சொல்வளமுள்ள மொழி உலகத்தில் வேறொன்றுமில்ல. ஆயினும், ஆங்கிலக் கலை நூல்களை மொழி பெயர்க்கப் போதிய சொற்கள் இற்றைத் தமிழிலில்லை என ஒரு குறை அடிக்கடி கூறப்படுகின்றது.

ஆங்கிலம் தற்கால மொழியாயும், நாள்தோறும் வளர்ச்சி யடைந்து வருவதாயும், உலகத்திலுள்ள மொழிகளினின்றெல்லாம் கடன் கொண்டுள்ளதாயும், மாநிலமெங்கும் பரவினதாயும், பிறநாட்டிலும் போற்றப்படுவதாயும், முழுமணி நூல்கள் மேன்மேலும் வெளியிடப் பெற்று வருவதாயும் பன்னாட்டரசியன் மொழியாயும், இருக்கும் பேறு வாய்ந்தது. தமிழோ, பழைமையான மொழியாயும், சென்ற மூவாயிரம் ஆண்டுகளாகத் தளர்ச்சியடைந்து வருவதாயும், வழங்கும் நிலம் வரவரக் குறுகி வருவதாயும், குறுகிய தன்னாட்டிலும் பெருகிய பகையுள்ளதாயும், தன் மக்களாலும் தள்ளப்படுவதாயும், இக்கால நூல்கள் எழுதப்படாததாயும், அரசியன் மொழியல்லாததாயும், எத்துணையோ கலைகளும் நூல்களும் சொற்களும் இறந்துபட்டும் வழக்கற்றுமுள்ளதாயும், இதுபோ துள்ளனவும் வழக்கற்று வருவதாயும் உள்ளது.

ஆங்கிலம் எத்துணையோ சொல்வளம் மிக்கதாயினும், தமிழிலுள்ள *பூட்டன்* (Great Grand Father), *சேயான்* (Great Great Grand Father), *ஓட்டன்* (Great Great Great Grand Father), *பகல், வெயில், காய், பிஞ்சு* முதலிய பல பொருள்களை யுணர்த்தத் தனிச்சொல் கொண்டில்லை. அறிவியற் கலை நூல்களை மொழிபெயர்த்தற்கு வேண்டிய சொற்களும் குறியீடுகளும் தமிழி லில்லாமைக்குக் காரணம், கடந்த வோராயிரம் ஆண்டுகளாகத் தமிழ் வளர்ச்சி யடையாமையும் ஆயிரக்கணக்கான அருந்தமிழ்ச் சொற்கள் இறந்து பட்டமையுமே.

மக்கள் வரவரக் கலைநாகரிக வளர்ச்சியடைந்து வருவதால், அன்றன்று தோன்றும் புதுப்புது கருத்துகட்கெல்லாம் உடனுடன் சொற்கள் அமையப்பெறல் வேண்டும். ஆங்கிலத்தில் அது நடைபெற்று வருகின்றது. ஆனால், தமிழிலோ அஃதில்லை. அதோடு இருந்த சொற்களும் பல இறந்துவிட்டன. உலகவழக்கிறந்த சொற்கள் செய்யுள் அல்லது நூல்வழக்கிலும், நூல்வழக்கிறந்த சொற்கள் அகராதியிலும், இடம் பெறுவதுண்டு. தமிழில் ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பு அகராதியும் இவ் விருபதாம் நூற்றாண்டிற்கு முன்பு விரிவான அகராதியும் இருந்ததில்லை. ஆதலால், இதற்குமுன் வழக்கிறந்த சொற்களெல்லாம் மீளா இருளில் மூழ்கிவிட்டன. அவைபோக எஞ்சியவற்றுள்ளும் பல வழக்கிறந்துள்ளன. அவை வழக்கற்றமைக்குக் காரணம் அவற்றை வழங்காமையே.

உயிருள்ள மொழிக்குப் பற்றுக்கோடு மக்கள் நாவே. நாவில் இடம் பெறாதவை பாவில்மட்டும் இடம் பெறும். அப் பாவும் மொழிப்பற்றற்றார் இயற்றுவதாயின், அதிலும் அவை இடம் பெறா.

தமிழர் பல தமிழ்ச்சொற்களை வழங்காமைக்குக் காரணம், தம்மையும் தம் மொழியையும்பற்றி அவர்கள் கொண்டுள்ள தாழ்வுணர்ச்சியே. வடமொழி தேவமொழியென்றும், அம் மொழியையும் அதன் சொற்களையும் வழங்குவது இறைவனும் விரும்பும் ஏற்றம் என்றும், தவறான கருத்துகளைத் தமிழர் கொண்ட தினின்றே, தமிழின் பெருமை குலையத் தொடங்கிவிட்டது. ஆங்கிலம் அரசியன்மொழி என்ற காரணத்தினாலேயே, தமிழர் அதைப் போற்றவும், தமிழைத் தூற்றவும் தலைப்பட்டாராயின், தேவர் பேசுவதாகவும் தேவதேவன் விரும்புவதாகவும் கருதப்பட்ட வடமொழியை அவர்கள் எத்துணைத் திருப்பற்றோடு போற்றி யிருத்தல் வேண்டும்!

இன்றும், 'சோறு' என்பது தாழ்வென்பதும், 'சாதம்' என்பது உயர்வென்றும், 'நீர்' என்பது இழிவென்றும், 'ஜலம்' என்பது ஏற்றமென்றும் கருதுபவர் எத்துணையர்! என்றும், வழக்குற்ற சொற்கள் எளிதுணர் பொருளவாயும், வழக்கற்ற சொற்கள் அரிதுணர் பொருளவாயும் இருத்தல் இயல்பே. வழக்கற்ற சொற்கள் எளிதாய்ப் பொருளுணர்த்தாமைக்குக் காரணம், அவற்றின் வழக்கற்ற தன்மையேயன்றி, அவற்றில் இயல்பாயமைந்துள்ள ஏதேனுமொரு குறையன்று. நீண்டகாலமாக உறவாடாத மக்கள் அயலாராகத் தோன்றுவதுபோன்றே, நீண்டகாலமாக வழங்காத சொற்களும் அருஞ் சொல்லாய்த் தோன்றுகின்றன.

*தமிழில் வழங்காத வெதிர் (மூங்கில்) என்னும் சொல், தெலுங்கிலும், 'நூக்கு', 'நொய்ம்மை', 'குறங்கு', 'தவ' முதலிய இலக்கியச் சொற்கள் தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் உலக வழக்காய் வழங்குவதை நோக்குமிடத்து, சொற்கள் வழக்கினாலேயே எளிய தன்மையும் அஃதின்மையாலேயே அரிய தன்மையும் அடைகின்றன என்பது தெற்றென விளங்கும்.[1] வடமொழிச் சிறப்பெழுத்துகள் போன்ற வல்லொலி யெழுத்துகள் தமிழி லின்மையால், தமிழ்ச்சொற்களில் எதையும் பலுக்க (உச்சரிக்க) முடியாத கடுமையுடையதென்று கொள்வதற்கிடமில்லை.*

*அகத்தியம் (அவசியம்), ஆவலாதி (முறையீடு), இலக்கு (குறிப்பிட்ட இடம்), அரங்கு (அறை), அலுவல் (உத்தியோகம்), குதாவிடை (தடை), துப்புரவு (சுத்தம்), நரல் (ஜனம்), மேலாவு (மேலதிகாரிகள்) முதலிய பல சொற்கள், தென்னாட்டில் தொன்றுதொட்டு உலகவழக்காக வழங்கி வருகின்றன. அவை தென்னாட்டார்க்கு எளிய சொற்களாயினும், ஏனையோர்க்கு அரிய சொற்களே. இதனால், சொற்கள் எண்சொல்லும் அருஞ்சொல்லு மாவதற்கு, அவற்றின் வழக்குண்மையும் இன்மையுமே காரண மென்பது வலியுறுதல் காண்க.*

*அழகான தென்சொற்க ளிருக்க, அவற்றிற்குப் பதிலாக வேண்டாத அயற்சொற்களை வழங்குவதினால், தமிழின் தன்மையும் தூய்மையும் வளமுங் கெடுவதுடன், பல தென்சொற்கள் பொரு ளிழக்கவும் நேர்கின்றன.*

***எ - டு:*** *'உயிர்மெய்' என்பது பழங்காலத்தில், உயிரையுடைய மெய் என விரிந்து, பிராணி எனப் பொருள்பட்டது. பிராணிபோல உயிரும் மெய்யுஞ் சேர்ந்த எழுத்தை உயிர்மெய் என்றது உவமை யாகுபெயர். ஆனால், பிராணி என்னும் வடசொல்லை வழங்கியபின், உயிர்மெய் என்னும் தென்சொல் வழக்கிறந்ததுடன் பொருளு மிழந்து விட்டது.*

*இனி, பொய்யொடு கலந்த மெய்யும் பொய்யாகத் தோன்றுவது போல, வடசொற்களோடு கலந்த பல தென்சொற்களும்*

---

*1. தள்ளுவதை* ***நூக்குதல்*** *என்பது வடார்க்காட்டு வழக்கு; தொடையைக்* ***குறங்கு*** *என்பது இராமநாதபுர வழக்கு; காளிக்கு ஆட்டுத் தொடையைப் படைத்தலை 'அம்மனுக்குக் குறங்கு கொடுத்தல்' என்பர் அம் மாவட்டத்தார்; சின்ன என்பதை* ***நொய்ய*** *என்பது குடந்தை வழக்கு; இளம்பிஞ்சைத்* ***தவப்*** *பிஞ்சு என்பது திருச்சிராப்பள்ளி வழக்கு; குறங்குமட்டை என்பது தஞ்சை வழக்கு.*

*வடசொல்லாகக் கருதப்படுகின்றன. 'காலம்', உலகம், மீனம், கலை முதலிய பல சொற்கள் இத்தகைய.*

*சொல்லாராய்ச்சியும் மொழியாராய்ச்சியு மின்மை காரணமாக, தமிழ்ப்பற்றுள்ள தூய தமிழர்கூடச் சில தென்சொற்களை வடசொற் களென ஒதுக்கிவிடுகின்றனர். 'தீர்மானம்' என்பது தூய தென்சொல். தீர்மானித்தது அல்லது முடிவுபோகக் கருதியது என்பது இதன் பொருள். இதை யறியாது இதனை யொதுக்கி வருகின்றனர் தூய தமிழர் சிலர்.* ***ஒ.நோ :*** *ஆரஆய் – ஆராய்.*

*அச் சொற்களை வழங்குவதினால், மொழி வளருமென்றும் வளம்பெறுமென்றும், ஆங்கிலத்தை யெடுத்துக் காட்டி அறியாதாரை மருட்டி வருகின்றனர் சில தமிழ்ப் பகைஞர். உவகை களிப்பு மகிழ்ச்சி என முத்தென்சொல் இருக்கவும் அவை வழக்கற்று ஆனந்தம் சந்தோஷம் ஜாலி* (jolly) *குஷி முதலிய அயற்சொற்களும்; உண்மை வாய்மை மெய்ம்மை என முத்தென்சொல் இருக்கவும், அவற்றுக்குப் பதிலாக சத்தியம் நிஜம் வாஸ்தவம் என்னும் வடசொற்களும்; இறை பகுதி வரி முதலிய பல தென்சொற்களிருக்கவும், அவற்றுக்குப் பதிலாகக் கிஸ்து என்னும் உருதுச் சொல்லும்; இன்னும் இவை போன்ற எத்துணையோ பலவும் வழங்கி வருவதால் தமிழ் தளர்ந்ததோ, வளர்ந்ததோ? நடுநிலையும் பகுத்தறிவுமுள்ள அறிஞர் கூறுவாராக.*

*தமிழ்ப் பொதுமக்கள் வாயினின்றும், 'சொல்' என்று வராது 'வார்த்தை' என்று வருவதற்கும், 'ஆண்டு' என்று வராது 'வருஷம்' என்று வருவதற்கும், 'குலம்' என்று வராது 'சாதி' என்று வருவதற்கும் எது காரணம்? தமிழ்ச்சொல் வழக்கற்றமையோ; அதன் தகுதியின்மையோ?*

*இன்னும் நூலாசிரியர் சிலர் வடசொற்களைத் தமிழிற் புகுத்தி அதன் தூய்மையைக் குலைப்பதையே குறிக்கோளாகக் கொண்டு, 'தலைக்கீடு' என்பதை 'வியாஜம்' என்றும், 'பணிவிடை' என்பதை 'சிசுருஷை' என்றும், 'நல்லிணக்கம்' என்பதை 'சௌஜன்யம்' என்றும், 'செழிப்பு' என்பதை 'சுபிக்ஷம்' என்றும், இன்னும் இவைபோன்ற பலவும் எழுதி வருவதை ஒரு சிலரான தமிழறிஞரன்றி வேறு யாரறிவார்?*

*ஆதலால், தமிழை அழியாது காக்கவேண்டுமெனின், அதன் வழக்கிறந்த சொற்களையெல்லாம் மீண்டும் வழக்கிற்குக் கொண்டுவரல் வேண்டும்.*

வழக்கற்ற சொற்களையெல்லாம் ஒரு தனிச் சுவடியாக வெளியிட இந் நூலாசிரியன் கருதுதலின், ஈண்டு மிக வேண்டிய சொற்களே காட்டப்பெறும்.

அகவை (வயது)

அகநாழிகை அல்லது உண்ணாழிகை (கர்ப்பக்கிருகம்)

அங்காடி (கடைத்தெரு)

நாளங்காடி (பகற்கடைத்தெரு), அல்லங்காடி (மாலைக் கடைத்தெரு)

அடுத்தூண் (ஜீவனத்திற்கு விட்ட நிலம்)

அடைய வளைந்தான் (கோயிலின் புறச்சுற்றுமதில்)

அணல் (தாடி)

அணிகம் (வாகனம்)

அணியம் (readiness)

அணுக்கத் தொண்டன் (personal attendant)

அணுக்கன் திருவாயில் (கர்ப்பக்கிருகவாயில்)

அரியணை அல்லது அரசுகட்டில் (சிங்காசனம்)

அறைகூவல் (சவால் விடுதல்)

அறம் (தருமம்)

ஆசிரியன் (உபாத்தியாயன்)

ஆடவன் (புருஷன்)

ஆடிடம் (விளையாடுமிடம்)

ஆடை (வஸ்திரம்)

ஆரோசை (ஆரோகணம்), அமரோசை (அவரோகணம்)

ஆவணம் (பத்திரம்)

ஆளுங்கணம் (Managing Committee)

ஆளோட்டி அல்லது ஆளொதுங்கி (காவற்கூடு - sentry box)

ஆளோடி (குளத்தின் மதிலுள் புறமாக மக்கள் நடப்பதற்குக் கட்டிய வழி)

இசை அல்லது இன்னிசை (சங்கீதம்)

இட்டேற்றம் (பொய்யாகக் குற்றஞ்சாட்டுகை)

*இதழ்குவி பா (ஓட்டியம்)*

*இதழகல் பா (நிரோட்டியம்)*

*இரப்போன் (பிச்சைக்காரன்)*

*இருமையால் நேர்ந்து (உபயானு சம்மதமாய்)*

*இயம் (வாத்தியம்), இயவன் (வாத்தியக்காரன்)*

*இயம்புதல் (வாத்தியம் வாசித்தல்)*

*இழப்பு (நஷ்டம்)*

*இளந்த நாக்கடித்தல் (ஆராயாது வாக்களித்தல்)*

*இளவேனில் (வசந்தம்)*

*உகப்பு* (choice)

*உறாவரை அல்லது முற்றூட்டு (சர்வமானியம்)*

*ஊட்டகர், ஊட்டுநர் (போஷகர்)*

*ஊட்டுப்புரை (அன்னசத்திரம்)*

*ஊதியம் (இலாபம்)*

*ஊமையாமொழி (அஜபா மந்திரம்)*

*ஐயம் அல்லது இரப்பு (பிக்ஷை)*

*ஐயம் அல்லது அயிர்ப்பு (சந்தேகம்)*

*ஒப்புரவு (உபகாரம்)*

*ஒருநாயகம்* (Universal Dominion)

*ஓம்படுத்தல் அல்லது ஓம்படை (மக்களைப் பாதுகாப்பிற் கொப்புவித்தல்)*

*ஓசுநன்* (Sailor)

*ஓமாலிகை (வாசனைச் சரக்கு)*

*ஓரை (இராசி, இலக்கணம்)*

*ஓலக்கம் (அரசுவீற்றிருக்கை* - Durbar)

*ஓவியம் (சித்திரம்)*

*கண்ணெச்சில் (கண் திருஷ்டி)*

*கரிசு (பாவம்)*

*கருவூலம்* (*பொக்கிசசாலை* - Treasury*)*

*கலங்கரை விளக்கம்* (Light House)

*கழுவாய் (பிராயச்சித்தம்)*

*குரல் அல்லது கேள்வி (சுருதி - சுதி)*

*குடவோலை* (Ballot Paper)

*குடும்பு* (Ward)

*கூலம் (தானியம்)*

*கூற்றம் (தாலுகா)*

*கூற்றுவன் (யமன்)*

*கேள்வி (விசாரணை)*

*கையடை (பாதுகாக்கும்படி ஒப்புவித்த பொருள்* - Trust)

*கையறம் (சரமகவி,* Elegy)

*கையூட்டு (லஞ்சம்)*

*கோட்டம் (ஜில்லா)*

*கோள், கோண்மீன் (கிரகம்)*

*சலக்கரணை (சௌகரியம்)*

*சார்ச்சி வழக்கு (உபசார வழக்கு)*

*சால்வு (திருப்தி)*

*சாறு (இரசம்)*

*சுவடன் அல்லது சுவைஞன் (இரசிகன்)*

*சுவை (காவியரசம்)*

*சிற்றூர் (கிராமம்)*

*தக்கை முறுக்கி* (Spanner)

*தவப்பழி* (Hunger Strike)

*தாழ்சீலை (இலங்கோடு)*

*தாள் அல்லது இதழ் (பத்திரம், பத்திரிகை)*

*திணைக்களம்* (Department)

*திருமுழுக்கு (அபிஷேகம், ஞானஸ்நானம்)*

*துய்ப்பு (அனுபவம்)*

*தெரிப்பு (தெரிந்தெடுக்கை* - Selection)

*தேற்றம் (நிச்சயம்)*

*நட்டாமுட்டி* (Layman)

*நரல் (ஜனம்)*

*நாள், நாண்மீன் (27 நக்ஷத்திரங்களில் ஒன்று)*

*நால்வகைச் செய்யுள் : கடும்பா இன்பா மிறைப்பா பெரும்பா. அல்லது, கடுமை இனிமை மிறை அகலம் (ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம்)*

*நினா (ஸ்தாய்)*

*வலிவு மெலிவு சமன் (தாரம் மந்தரம் மத்திபம்)*

*நீர்ச்சீலை (கௌபீனம், கோவணம்)*

*நுகர்ச்சி (அனுபோகம்)*

*நெஞ்சாங்குலை (இருதயம்)*

*நெடுஞ்சாண்கிடை வணக்கம் (சாஸ்டாங்க நமஸ்காரம்)*

*பதியெழுகை* (Evacuation)

*படமாடம் (சிறுகூடாரம்* - Tent)

*பண்டுவம், பரிகாரம் (சிகிச்சை)*

*பலகணி (ஜன்னல்)*

*பற்றுமுறி (ரசீது)*

*பாடுகிடத்தல் (வரங்கிடத்தல்)*

*பிள்ளையார் நோன்பு (விநாயக சதுர்த்தி)*

*பிறங்கடை (வாரிசு)*

*புரவுவரி* (Revenue)

*புலம்பன் (ஆன்மா)*

*பெண்டு (ஸ்திரீ)*

*பொதுநாயகம்* (Universal Sovereignty)

*பொருநன் (சிப்பாய்* - Soldier)

*பொருள் (அர்த்தம்)*

*முடிசூட்டு (மகுடாபிஷேகம்)*

*மதங்கம் (மிருதங்கம்)*

*மதவலி* (Sando)

*மருத்துவன் (வைத்தியன்)*

*மருப்பு (தந்தம்)*

*மறை (வேதம்)*

*மழம், மறம் (வீரம்), மழவன் அல்லது மறவன் (வீரன்)*

*மன்பதை* (Mankind)

*மீகாமன், மீகான், நீகான் (மாலுமி)*

*மெய்ப்பாடு (பாவம்)*

*மெய்ப்பித்தல் (ருசுப்படுத்தல்)*

*வடக்கிருத்தல் (மானங்கெட வருமிடத்து உண்மை நோன் பிருந்து உயிர் துறத்தல்)*

*வலவன் (சாரதி)*

*வழக்காரம் (பிராது)*

*வழிபடுதல் ( ஆராதித்தல்)*

*வழுவாய் (பாவம்)*

*வாய்வாளாமை (மௌனம்)*

*வியப்பு (ஆச்சரியம்)*

*விலங்கு (மிருகம்)*

*விறல் (சத்துவம்)*

*விசி* (Bench)

*வேளாண்மை (உபசாரம்)*

*வீடு (மோக்ஷம்)*

*மேற்காட்டிய பொதுச் சொற்கள் போன்றே* ***சாத்தன், கொற்றன், மருதன், ஆதன், பூதன், கீரன், பேகன், பாரி, காரி, நள்ளி, குமணன், வெளியன், தித்தன், தம்பி, கம்பன், கூத்தன், கண்ணன், முருகன், புகழேந்தி, அடியார்க்குநல்லான், நச்சினார்க் கினியன், பரிமேலழகன், தோலாவழக்கன்*** *முதலிய எண்ணிறந்த மக்கட் பெயர்களும்* ***கயற்கண்ணி*** *(மீனாக்ஷி),* ***கலைமகள்*** *(சரஸ்வதி),* ***மலைமகள்*** *(பார்வதி),* ***திருமகள்*** *(லக்ஷ்மி) முதலிய பற்பல தெய்வப் பெயர்களும்,* ***பொருநை*** *(தாம்பிரபரணி),* ***தில்லை*** *(சிதம்பரம்),* ***மறைக்காடு*** *(வேதாரணியம்),* ***பழமலை*** *அல்லது* ***முதுகுன்றம்*** *(விருத்தாசலம்) முதலிய பல இடப்பெயர்களும் வழக்கற்றுள்ளன.*

*விடாப்பிடி (வைராக்கியம்), தடுமம் அல்லது நீர்க்கோவை (ஜலதோஷம்), ஊக்கம் (உற்சாகம்), திருவிழா (உற்சவம்), விழிப்பு (ஜாக்கிரதை) முதலிய பல சொற்கள் வழக்கு வீழும் நிலையில் உள்ளன.*

*கனவு, தூக்கம், பயிற்சி, வெள்ளி முதலிய தென்சொற்க ளிருப்பவும், சொப்பனம் நித்திரை அப்பியாசம் நக்ஷத்திரம் முதலிய வடசொற்கள் வீணே உலவி வருகின்றன.*

*எழுநாட்பெயர்களுள், அறிவன் (புதன்), காரி (சனி) என்னும் இருநாட் பெயர்கள் வழக்கு வீழ்ந்து போயின.*

*இரங்கும் நிலையில், 'அளியன்!' 'அளியள்!' 'அளியர்!' 'அளிது!' 'அளிய!' என்று சொல்லும் வழக்கு வீழ்ந்து, பாவம்! என்று சொல்லும் வழக்கு வேரூன்றியுளது.*

*இந்த நிலையில் தமிழிற் போதிய சொற்களில்லை என்று குறைகூறுதலும் வழக்கற்ற சொற்களைப் புதுக்கக்கூடாதென்று தடைசெய்தலும் ஒருங்கே நிகழ்கின்றன. தமிழாட்சியும் மாட்சியும் நீங்கி எத்தனையோ நெடுங்காலம் கழிந்தபின்னும், இக்காலக் கருத்துகட்கேற்ற சொற்களும் சொற்கருவிகளும் தமிழில் மலிந்துள்ளன. பல தமிழ்ச்சொற்கள் வழக்கற்றமைக்குக் காரணம் அயலாரால் புகுத்தப்பெற்ற ஏமாற்றுக்கொள்கை யாதலின், அவற்றைப் புதுக்குதல் தமிழர் கடனும் முறைமையுமாகும்.*

*ஒரு நாட்டுச் செல்வங்களுள் மொழியும் ஒன்றாகும். மொழித் துணையின்றி ஒரு நாட்டார் நாகரிகமாகவும் வசதியாகவும் வாழ்வ தரிது. முன்னோர் அரும்பாடுபட் டீட்டிய அறிவுச் செல்வமெல்லாம், மொழிவாயிலாகவே போற்றப்பட்டு வருகின்றன. புல் என்றொரு பொதுப் பெயரையோ, அறுகு என்றொரு சிறப்புப் பெயரையோ, வா என்றொரு வினைச்சொல்லையோ, புத்தம் புதுவதாக ஒருவர் எங்ஙனம் ஆக்குதல் கூடும்? எத்துணைச் சொற்கள் சேர்ந்து ஒரு பெரு மொழியும் அதன் இலக்கியமும் அமைகின்றன! முன்னோர் வைத்துப்போன சின்னஞ் சிறுபொருள்களைக் கூடப் பொன்னே போல் போற்றுவது மக்கள் வழக்கமாயிருக்க, தொன்றுதொட்டு இன்றுகாறும் கணக்கற்ற தலைமுறைகளாய்த் தொடர்ந்தும் திரண்டும் வரும் அரும்பெருஞ் செல்வத்திரட்டாகிய மொழியை, எத்துணைக் கவனமாகவும் கண்ணியமாகவும் பேணுதல் வேண்டும்!.*

*இடைக்காலத் தமிழரின் பேதைமையால் பாழான மண்ணிற்கும் படையான சிதலுக்கும், படியாதார் நெருப்பிற்கும், பதினெட்டாம் பெருக்கிற்கும், பற்பல பூச்சிக்கும், பகைவரின் சூழ்ச்சிக்கும் இரையான கலைநூல் சொல் எத்துணை யெத்துணை! பல கலைகளிலுள்ள சொற்றொகுதிக ளெல்லாம் சேர்ந்தே ஒரு மொழியாகும். ஒரு கலைச்சொற்களைப் பிறிதொரு கலையிலும், ஒரு*

*நூற் சொற்களைப் பிறிதொரு நூலிலும் காண்பதரிது. திருவாசகம் இன்றில்லையேல், சாழல் தெள்ளேணம் முதலிய சொற்களை வேறெங்குக் காணமுடியும்? திருவாசகத்திலும் திருவாசகமான எத்துணை அருநூல்களும் பெருநூல்களும் இறந்துவிட்டன! அவற்றிலுள்ள முழுமணிச் சொற்களனைத்தும் பெரும்பாழ்க்கடலுள் மூழ்கினவே!* ***தொல்காப்பியம்*** *ஒன்றில்லாவிடின் இற்றைத் தமிழர் கதி என்னவாகும்? இவற்றை யெல்லாம் தீர எண்ணி, இறந்தன போக எஞ்சிய சொற்களையேனும் இற்றைத் தமிழர் இறவாது காப்பாராக.*

# 8
# பொருள்திரி சொற்கள்

*உலகிலுள்ள ஒவ்வொரு பொருட்கும் மக்கள் உள்ளத்தி லெழும் ஒவ்வொரு கருத்திற்கும் ஒவ்வொரு சொல் தோன்றுவது, மொழிவசதிக்கு இன்றியமையாததாகும். ஆயினும், ஒவ்வொரு கருத்திற்கும் ஒவ்வொரு புதுச்சொல் அமைவது இயலாது. ஆதலால், பழஞ்சொற்களினின்றே புதுச்சொற்கள் திரித்துக்கொள்ளல் வேண்டும். கருத்துகள் ஒன்றோடொன்று தொடர்புற்றிருப்பதால், அவற்றைக் குறிக்கும் சொற்களும் தொடர்புற்றிருப்பது பொருத்தமே.*

*கருத்துகள் பல்கப் பல்கச் சொற்களும் பல்கவேண்டியிருப்ப தால், ஒரு மொழி முழுவளர்ச்சியடைவதற்குப் பல்லாயிரக் கணக்கான திரிசொற்கள் தேவையாயுள்ளன. பழஞ்சொல்லினின்று புதுச்சொல் திரிக்க வசதியில்லாவிடத்து, ஒரு சொல்லே தொடர்புள்ள பல பொருள்களைக் குறிக்க நேர்கின்றது. இங்ஙனம், பொருள் திரியினும் சொல் திரியாத பெயரே ஆகுபெயர் எனப்படும்.*

*சொற்கள் காரணம்பற்றியும் ஆட்சிபற்றியும் பொருளுணர்த்தும். காரணம்பற்றிப் பொருளுணர்த்துவதே சொல்லுக்குச் சிறப்பாயினும், பொருளுணர்த்துங் குறியே சொல்லாதலின், சிறுபான்மை ஆட்சிபற்றியும் சொல் பொருளையுணர்த்துமாறு பயன்படுத்தப்பெறும். அவ் வாட்சியும் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவாறு வேறுபடும். ஆட்சிப்பொருள், ஆள்வான் கருத்திற் கேற்றபடியும், ஆளும் சொல் குறிக்கும். பொருளின் நிலைமைக் கேற்றபடியும், (1)* ***உயர்பு****, (2)* ***இழிபு****, (3)* ***பொது****, (4)* ***வரையறுப்பு****, (5)* ***விரிப்பு*** *என ஐந்நிலைமைப்படும்.*

### *1. உயர்பு* (Elevation)

*அரசனே தெய்வமாக வணங்கப்பட்ட முதற்காலத்தில்,* ***இறைவன்*** *என்பது அரசனையும்* ***கோவில்*** *(அல்லது* ***கோயில்****)*

என்பது அரசனுடைய அரண்மனையையும் குறித்தன. பின்னர், கடவு ளுணர்ச்சி யேற்பட்டபின் அவை இரண்டும் முறையே கடவுளையும் அவரிருக்கையாகக் கருதப்படும் வீட்டையும் குறித்தன.

**தொண்டன் அடியான்** என்ற பெயர்களும், முதலாவது மக்கட்குத் தொண்டும் அடித்தொழிலும் செய்தவர்களைக் குறித்து, பின்னர், கடவுள் தொண்டரையும் கடவுளடியாரையும் குறித்தன. **தொண்டன்** என்னும் பெயர், இன்று பொதுநல ஊழியனையுங் குறிக்கும்.

**களிப்பு** என்னுஞ் சொல், முதலாவது, கள்ளுண்டலையே குறித்து, பின்பு கள்ளுண்டு மகிழ்தலையும், அதன்பின் இன்பத்தால் மகிழ்தலையும் குறித்தது.

மேற்காட்டிய ஐஞ்சொற்களும், முதலாவது தாழ்ந்த பொருள் களைக் குறித்து, பின்னர் உயர்ந்த பொருள்களைக் கொண்டமை காண்க. இங்ஙனம், சொற்பொருள் உயர்வதே உயர்பு எனப்படும்.

## 2. இழிபு (Degradation)

உயர்பிற்கு நேர்எதிர் **இழிபு** எனப்படும்.

**கடவுள்** என்னும் பெயர், மனமொழி மெய்களையும் எல்லா வற்றையுங் கடந்த முழுமுதற் கடவுளையே குறிக்க எழுந்த சொல்லென்பது, அதன் பகுதியாலேயே விளங்கும். கடவுட்டன்மை யடைந்த முனிவர்களை இல்லறப் பொதுமக்கள் கடவுள் என்றழைத்த பின், கடவுள் என்னும் சொற்பொருள் இழிந்துவிட்டது. **பகவன்** என்னும் சொல்லும் இங்ஙனமே கடவுளைமட்டும் குறித்த நிலையில் உயர்ந்ததாயிருந்தது. பின்னர் முனிவனை அல்லது முனிவற் போலியைக் குறிக்க ஆளப்பட்டபின், இழிவடைந்துவிட்டது. இதனாலேயே, முழுமுதற் கடவுளை 'ஆதி' என்னும் அடைகொடுத்து 'ஆதிபகவன்' என அழைத்தார் திருவள்ளுவர்.

**தம்பிரான்** என்னும் கடவுட்பெயர், துறவை மேற்கொண்ட மடத்தலைவரைக் குறிப்பதும் மேற்கூறிய முறையே.

**அந்தணர்** என்பது அழகிய குளிர்ந்த அருளையுடைய முனிவர் பெயர்.

''அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்'' **(குறள். 30)**

என்றார் திருவள்ளுவரும். இச் சொல் அந்தணர்போல்வாரையும், அடியாரையும், பூசாரிகளையும் படிப்படியாய்க் குறித்து, இன்று ஒரு குலத்தாரையுங் குறிக்கின்றது.

**பண்டாரம்** என்பது பல பொருள்கள் நிறைந்த சரக்கறைப் பெயர். அது முறையே, பல அறிவுப் பொருள்களை உள்ளத்தில் தொகுத்துவைத்த பேரறிஞனையும், அப் பேரறிவு காரணமாக உலகப்பற்றைத் துறந்த துறவியையும், அத் துறவிபோலக் கோலம் பூண்டவனையும், அக் கோலம் பூண்ட இரப்போனையும் குறித்தது.

''எங்கள் பாண்டிப்பிரான் தன் அடியார்க்கு மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே'' என்னும் திருவாசகத் தொடரிலும் (36 : 5) ''பண்டாரங் காமன்படை யுவள்கண் காண்மின்'' என்னும் பரிபாடல் தொடரினும் (11 : 123) 'பண்டாரம்' என்னும் சொல் பொக்கிசத்தையும் பொக்கிசசாலையையும் குறித்தமை காண்க.

களஞ்சியத்தைப் பண்டாரம் என்பதும், நூல்நிலையத்தைக் கலைமகள் பண்டாரம் என்பதும் உலக வழக்கு. சைவமடத் தலைவரைப் பண்டாரம் என்பது, அவர் பேரறிவு வாய்ந்த துறவி என்னும் காரணம்பற்றியே.

பண்டாரம் பரதேசி என்னும் இணைமொழி வழக்கில் பண்டாரம் என்பது துறவுக்கோலம் பூண்ட இரப்போனைக் குறித்தல் காண்க.

ஆள்வான், ஆளுடையான், ஆட்கொண்டான், ஆளவந்தான், ஆண்டவன், ஆண்டான், ஆண்டி, ஆண்டை என்பன ஒரே பெயரின் பல்வேறு வடிவங்களாகும். ஆண்டி என்னும் சொல், முதலாவது கடவுளையும், பின்பு அவனருள்பெற்ற துறவியையும் [1] அதன்பின் போலித் துறவியான இரப்போனையும், அதற்கும் பின் ஏழையையும் குறித்தது. பழனியாண்டி, மடத்தாண்டி, கோவணாண்டி, ஓட்டாண்டி முதலிய வழக்குகளை நோக்குக.

**பரதேசி** என்பது சுதேசி (சுவதேசி) என்பதற்கு எதிர். அது முதலாவது அயல்நாட்டானைக் குறித்தது; பின்பு அயல்நாட்டு அல்லது அயலூர் ஏழையைக் குறித்தது; இன்று இரப்போனைக்

1. ஆழ்வார் என்னும் பெயர்; ஆள்வார் என்பதின் திரிபென்பர் பெரும்புலவர் மு.இராகவையங்கார்.

குறிக்கின்றது. 'பண்டாரம் பரதேசி', 'அரதேசி பரதேசி' முதலிய வழக்குகளை நோக்குக.

**பத்தினி** என்பது பத்தன் என்பதன் பெண்பால் வடிவம். பத்தன் என்னும் ஆண்பால் வடிவம் போன்றே, பத்தினி என்பதும் முதலாவது தேவபத்தினியைக் குறித்தது. பின்னர், 'குலமகட்குக் கொழுநனே தெய்வம்' என்னும் புரைபட்ட கருத்து மக்கள் உள்ளத்திற் புகுந்தபின், மாந்தனான கணவன்மாட் டன்புடையாளைக் குறித்து வருகின்றது.

ஆண்டிலும் அறிவிலும் தாழ்ந்த சிறுவன் சிறுமியைப் பயலும் சிறுக்கியும் என்பது உலகவழக்கு. **பயல்** என்பது பையல் (பையன்) என்பதன் மறுவடிவம். **சிறுக்கி** என்பது, சிறுக்கன் (சிறுவன்) என்பதன் பெண்பால். இவ்விரு பெயர்களும், முதலாவது இளமை யொன்றே குறித்தனவாயினும், இன்று இளமையோடு இழிவும் சேர்த்துக் குறிப்பனவாகும்.

**பட்டப்பெயர்** என்பது, முதலாவது, 'அருண்மொழித்தேவன்', 'உத்தம சோழப் பல்லவன்', 'தருமசேனன்' முதலிய பட்டங் குறித்த உயர்வுப்பெயர்களையே குறித்தது. ஆயின், இன்றோ, அது நகையாளரும் பகையாளரும் பழிப்பதற்கிடும் இழிவுப் பெயர்களையே குறிக்கின்றது.

திருவாளன் என்பது திருமாலின் பெயர்களுள் ஒன்று. அது பின்பு செல்வமுள்ளவனையும் மதிப்புள்ளவனையுங் குறித்தது. இன்றோ அது 'Mr.' என்னும் ஆங்கில மதிப்படைபோல ஒவ்வொருவன் பெயர்க்கு முன்னரும் சேர்க்கப்படுகிறது.

திருமால் திருவருள் என்பவற்றிற்போல, திரு என்னும் அடைமொழியைத் தனிப்படக் கூறினும், அது தெய்வத்தன்மை குறிப்பதாகும். ஆனால், திரு என்பதன் வடமொழித்திரிபான ஸ்ரீ என்பதுடன் பற்பல உயர்வு குறித்த சொற்களை அடுக்க அடுக்க, அது இழிவுசிறக்கின்றது. இதற்குக் காரணம் குறிக்கப்படும் பொருளின் தகுதியின்மையே. சிறுவனை அண்ணாத்தை என்றும், நரியை நரியனார் என்றும் அழைத்தால் எங்ஙனம் அவ் வழைப்புத் தகாதோ, அங்ஙனமே உயர்வுச் சொல்லடுக்கிய ஸ்ரீ என்பதும் என்க. மதிப்பும் மதிப்புடைய பொருளும் மதிக்கத்தக்க இடத்திலேயே மதிப் படையும்; இன்றேல் அதற்கெதிரான பயனே விளையும். நாய்க்குப் பீடமும், நரிக்கு முடியும், பன்றிக்கு முகபடாமும், விளக்கு மாற்றுக்குப் பட்டுக்குஞ்சமும் எங்ஙனம் பொருந்தாவோ, அங்ஙனமே மதிப்பில்லாத இடத்திற்கு மதிப்புடைச் சொற்கள் பொருந்தா.

*கடவுள் பெயர்க்குமுன் ஸ்ரீ என்றும், அரசன் பெயர்க்குமுன் ராஜஸ்ரீ என்றும், சிற்றரசன் பெயர்க்கு முன் ராஜ ராஜஸ்ரீ என்றும், செல்வன் பெயர்க்கும் வறியன் பெயர்க்கும் முன் மகாராஜ ராஜஸ்ரீ என்றும், மதிப்படைகள் வழங்குதலையும், மக்கள் இழிவுபற்றி அவர்கள் பெயர்க்குமுன் வழங்கும் மதிப்படைகளும் இழிவடைந் துள்ளமையையும் நோக்குக!*

*தொல்காப்பியர் காலத்தில், தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் விளிக்கத்தக்க **எல்லா**[2] என்றொரு பொதுப்பாற் சொல் வழங்கி வந்தது.*

*''முறைப்பெயர் மருங்கில் கெழுதகைப் பொதுச்சொல்*
*நிலைக்குரி மரபின் இருவீற்றும் உரித்தே''* ***(பொருளியல், 220)***

*என்பது தொல்காப்பியம். இதற்கு,*

*''முறைப்பெயரிடத்து இருபாற்கும் பொருந்தின தகுதியுடைய எல்லா வென்னுஞ் சொல், புலநெறி வழக்கிற்குரிய முறைமையி னானே வழுவாகாது ஆண்பாற்கும் பெண்பாற்கும் உரியதாய் வழங்கும் என்றவாறு''*

*'கெழுதகை' என்றதனானே தலைவியும் தோழியும் தலைவனைக் கூறியதே பெரும்பான்மை யென்றும், தலைவன் தலைவியையும் பாங்கனையுங் கூறுதல் சிறுபான்மை வழுவமைதி யென்றுங் கொள்க.*

***(எ - டு)***

*''அதிர்வில் படிறெருக்கி வந்தென் மகன்மேல்*
*... ... ... ...*
*எதிர்வளி நின்றாய்நீ செல்;*
*இனி யெல்லா''* ***(கலித். 81)***

*எனத் தலைவியைத் தலைவன் இழித்துக் கூறலின் வழுவாயமைந்தது.*

*''எல்லா நீ*
*... ... ... ...*
*என்நீ பெறாததீ தென்''* ***(கலித்.61)***

*எனத் தோழி தலைவனை விளித்துக் கூறலின் வழுவாயமைந்தது.*

---

*2. இது* Hallo *என்னும் ஆங்கிலச் சொல்லை ஒத்தது.*

''எல்லா விஃதொத்தன்'' (கலித். 61) என்பது பெண்பால்மேல் வந்தது. ஏனைய வந்துழிக் காண்க. 'பொதுச்சொல்' என்றதனானே எல்லா, எலா, எல்ல, எலுவ எனவும் கொள்க.

''எலுவ சிறாஅர்'' **(குறுந். 129)**

என வந்தது.

''யாரை யெலுவ யாரே'' **(நற். 395)**

எனத் தலைவனைத் தோழி கூறினாள்.

''எலுவி யென்பது பாலுணர்த்தலின் ஆராயப்படா'' என வுரைத்தார் நச்சினார்க்கினியர்.

எல்லா என்னும் விளி இருபாற் பொதுவாகவே வழங்கி வந்த தெனினும், அதன் திரிபு நிலையில் எலுவன் என்னும் ஆண்பால் வடிவமும், எலுவி என்னும் பெண்பால் வடிவமும் தோன்றின.

எல்லா என்னும் சொல், இன்று தென்னாட்டில் ஏல ஏலா எலே என்னும் வடிவுகளில் ஆண்பால் விளியாகவும், ஏழா என்னும் வடிவில் பெண்பால் விளியாகவும், வழங்கி வருகின்றது.

ஏழு – ஏடன் – தோழன், ஏடி – தோழி – ஏடன் என்னும் வடிவம், ஏட ஏடா ஏடே, அட அடா அடே என்று திரிந்து ஆண்பால் விளியாகவும்; ஏடி ஏடீ, அடி அடீ எனத் திரிந்து பெண்பால் விளியாகவும் தமிழ்நாடெங்கும் வழங்கி வருகின்றது. அடடா அடட என்பன அடுக்கு.

அட என்பது அரா ரா என்றும், அடே என்பது அரே ரே என்றும் தெலுங்கில் வழங்கிவருகின்றது. இவற்றுள் ரா ரே என்னும் சிதைவுகள் இந்தியிலும் உருதுவிலும் வழங்கிவருகின்றன.

இங்ஙனம் தமிழின் தாய்மையை யுணர்த்தும் எல்லா என்னும் சொல், முதலில் தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் மதிப்பாய் விளிக்கும் விளியாயிருந்தது, இன்று அடிமையரையும் கீழ்மக்களையும் விளிக்கும் இழிவுச்சொல்லாய் வந்துளது.

**சேரி** என்பது, பல வீடுகள் ஒன்றாகச் சேர்ந்திருக்கும் குடியிருப்பு. முதற்காலத்தில் முல்லை நிலத்தூர்கள் சேரி என்னும் பொதுப்பெயர் பெற்றன. முல்லைநில மக்கள் இடையராதலின், மருதநில நகர்ப்புறத்துள்ள இடையர் குடியிருப்பு புறஞ்சேரி

எனப்பட்டது. மருதநிலத் தூர்கள் பேரூரும் நகருமாகி, திணைமயக்கமும் தொழில்பற்றிய குலப் பாகுபாடும் உண்டானபின், ஒவ்வொரு பேரூரிலும் ஒவ்வொரு குலத்தாருடைய தனிக் குடியிருப்பும் சேரி எனப்பட்டது. இங்ஙனம் இடைச்சேரி பறைச்சேரி பார்ப்பனச்சேரி என்னும் வழக்கு எழுந்தது.

''ஏமப் பேரூர்ச் சேரியும் சுரத்தும்'' **(அகத். 37)**

என்றார் தொல்காப்பியர்.

சேரிகளில் வழங்கும் உலக வழக்கு அல்லது தெருப் பேச்சுநடை 'சேரிமொழி' எனப்பட்டது.

''சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்
புலன்என மொழிப புலன் உணர்ந் தோரே'' **(செய். 239)**

என்று தொல்காப்பியர் கூறுதல் காண்க.

நாளடைவில் குலப் பாகுபாடு பிறப்பொடு தொடர்புபடுத்தி யமைக்கப்பட்ட பின், தாழ்த்தப்பட்டோர் பிற குலத்தாரோடு சேராது ஊருக்குப் புறம்பே வசிக்க நேர்ந்தது. அதிலிருந்து சேரி என்னும் சொல், தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பையே உணர்த்தி வருகின்றது.

## 3. பொது

சில சொற்களின் பொருள்கள், உயர்படையாமலும் இழிபடை யா மலும் பொதுமுறையாகத் திரிந்துள்ளன.

**பள்ளி** என்பது, முதலாவது படுக்கையை யுணர்த்தும் சொல். 'பள்ளிகொள்ளுதல்', 'பள்ளிகொண்டான்', 'பள்ளியெழுச்சி' முதலிய வழக்குகளை நோக்குக. பள்ளி என்பது, கீழிடத்தை அல்லது தாழிடத்தை யுணர்த்தும் பள் என்னும் வேரினின்று பிறந்ததாகும். பள் + அம் = பள்ளம். பள்– படு. படுத்தல் – கீழே கிடத்தல்.

படுக்கையையுடைய கலமும் அறையும் வீடும் தானியாகு பெயர் என்னும் இடனாகுபெயராய்ப் பள்ளி எனப்படும். படுக்கும் அறையைப் பள்ளியறை யென்பர்.

இரப்போரும் துறவிகளும் வழிப்போக்கரும் திக்கிலிகளும் பள்ளிகொள்வதற்கென்று, அதாவது படுப்பதற்கென்று, ஏற்பட்ட மடமும் பள்ளி எனப்படும்.

கல்விச்சாலைகள் பெரும்பாலும் மடங்களிலிருந்து வந்தமை யால், பள்ளி என்னும் சொல் கல்விச்சாலையையுங் குறித்தது. 'பள்ளிக்கூடம்', 'பள்ளிப்பிள்ளை', 'பள்ளிக்கு வைத்தல்' முதலியன உலக வழக்கு. எழுத்துப்பள்ளி என்பது மலையாள (சேர) நாட்டு வழக்கு.

மடங்கள் பெரும்பாலும் கோவில்களைச் சேர்ந்திருந்தமை யாலும், அங்ஙனம் சேராத மடங்களுள்ளும் கோவில் இருந்தமை யாலும், கோவில் கடவுள் வீடாதலாலும், பள்ளி என்னும் சொல் கோயிலையுங் குறிக்கும்.

சமண புத்தமதக் கோவில்கள் மடத்தோடு சேர்ந்திருந்தமை யாலேயே, பொதுவாய்ப் பள்ளியெனப்பட்டன. மசூதிகளும் மடம்போன்றவை என்னுங் காரணத்தால் பள்ளிவாசல் எனப்படும்.

''கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்'' **(குறள். 844)**

என்னுங் குறட்கு, ''சான்றோரவையின்கண் பேதையாயினான் புகுதல், தூயவல்ல மிதித்த காலை இன்பந்தரும் அமளிக்கண்ணே வைத்தாற் போலும்.

'' 'கழுவாக்கால்' என்பது இடக்கரடக்கு; அதனால் அவ் வமளியும் இழிக்கப்படுமாறுபோல, இவனால் அவ்வவையும் இழிக்கப்படும் என்பதாம்'' என்று உரைகூறினார் பரிமேலழகர்.

சான்றோர் அவை திருமுன்னிலைபோலத் தெய்வத் தன்மை யுடையதாய்க் கருதப்படுவதால், பள்ளி என்பதற்குப் படுக்கை என்று பொருள் கொள்ளாமல் கோவில் என்று பொருள் கொள்வதே பொருத்தமாம்.

படுக்கும் வீடே ஒருவனுக்கு நிலையான இடமாதலால் பள்ளி என்பது நிலையான இடத்தைக் குறித்துப் பின்பு அக் கருத்தை அடிப் படையாகக் கொண்டு இடத்திற்கே பொதுப் பெயராயிற்று.

''எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரு வளியின்'' **(பிறப்பியல், 20)**

என்று தொல்காப்பியர் கூறுதல் காண்க.

**துரை** என்பது, துர என்னும் பகுதியடியாகப் பிறந்து, தலைவன் அல்லது சிற்றரசன் என்று பொருள்படும் கொடுந்தமிழ்ச்சொல். துரத்தல் செலுத்துதல் அல்லது நடத்துதல். மேனாடுகளிலிருந்து இங்கு

முதன்முதல் வந்தவர்கள் தலைவராகவும் அரசியலை மேற்கொண்ட வராகவு மிருந்ததினால், அவர்கட்குத் துரை என்பது பொதுப் பெயராக வழங்கத் தலைப்பட்டது.

பெண்ணை அல்லது பெண்டிரைக் குறிக்கும் **மாதர்** என்னும் சொல், காதற்பொருளைத் தருவதற்குக் காரணம், பெண்டிரின் காதலிக்கப்படும் தன்மையாகும்.

''மாதர் காதல்'' என்பது தொல்காப்பியம். **(உரியியல், 30)**

**சேவகன்** (வ.) என்னும் பெயர், 'ஊழியன்', 'ஏவலன்', 'மறவன்' முதலிய பொருள்களைத் தரும். ஊழியனும் ஏவலனும் மறவராயிருந்தால்தான் உண்மையாகவும் சிறப்பாகவும் ஊழியஞ் செய்ய முடியும். பண்டைக்காலத்தில் ஏவலர் **இளையர்** எனப் பட்டதும், அவர் இளமையோடு கூடிய மறமும் வலியும் உடையரா யிருந்தமைபற்றியே.

**வண்ணம்** என்பது நிறம். அது நிறம்போன்ற வகையையும், செய்யுளின் ஓசை வகையையும், ஓசையிற் சிறந்த செய்யுள் அல்லது பாட்டையும் குறித்தது. அவ்வண்ணம் இவ்வண்ணம் என்பன வகையையும், நெடுஞ்சீர் வண்ணம் குறுஞ்சீர்வண்ணம் என்பன ஓசை வகையையும், வண்ணகவொத்தாழிசைக்கலி, நாட்டைவண்ணம் என்பன செய்யுள் அல்லது பாட்டையும் குறித்தல் காண்க. வண்ணத்தை வர்ணம் என்பர் வடமொழியார்.

வெள்ளை நிறமானது தெளிவாகவும் களங்கமற்றுமிருப்பதால் **வெள்ளை** என்னும் சொல் தெளிவையும் களங்கமின்மையையும் குறிக்கும். எளிய நடையை வெள்ளை நடை என்பர். சூதுவா தற்றவனை வெள்ளை என்றும் வெள் நந்தி என்றும் அழைப்பர். ''வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை'' என்றார் ஔவையாரும். குற்றமற்ற பாவகை வெள்ளை எனப்பட்டது. வெள்ளையான பா வெண்பா.

பக்குவம் செய்யப்படாத மூலிகை பச்சையாயிருப்பதால், **பச்சை** என்னும் சொல், பக்குவம் செய்யப்படாத அதாவது அடக்கிச் சொல்லப்படாத இடக்கரைக் குறிக்கும். 'பச்சைப் பேச்சு', 'பச்சை பச்சையாய்ப் பேசுதல்' என்பன உலக வழக்கு.

எளியாரிடத்தும் வலியாரிடத்தும் ஒப்ப நின்று ஒறுக்கும் தன்மைபற்றித் தெய்வச் சான்றாகக் கொள்ளப்படுவது நெருப்பு. அதன் நிறம் செம்மை. அதனால் **செம்மை** என்னும் சொல் நேர்மையை உணர்த்தும்.

***திணை*** என்பது, திரட்சியைக் குறிக்கும் திண்ணை என்னுஞ் சொல்லின் தொகுத்தல் திரிபு (விகாரம்). அது முறையே, திரண்ட குழுவையும், பெருங் குழுவான குலத்தையும், குலத்திற்குச் சிறந்த ஒழுக்கத்தையும், குலம் போன்ற பாகுபாட்டையும், ஐவகை மரபினர் வசித்த நிலவகையையும் அவற்றின் செய்திகளையும் குறிப்ப தாயிற்று.

*பழங்காலத்தில், ஒருவர் இன்னொருவருக்குக் கொடுக்குங் கொடையை உறுதிப்படுத்துவதற்கு, கொடுப்பார் கொள்வார் கையில் நீரை வார்ப்பது வழக்கம். இதற்குத்* ***தாரைவார்த்தல்*** *என்று பெயர். இத் தொடர் இன்று வடார்க்காட்டு வழக்கில் ஒருவன் ஒரு பொருளைத் தொலைத்துவிடுவது, அதைக் கொடுத்துவிடுவதுபோ லிருத்தலால், அதுவுங் கொடைச் சொல்லாற் குறிக்கப்பட்டதென்க.*

## *4. வரையறுப்பு* **(Restriction)**

*பல பொருட்குப் பொதுவான சொல்லை அவற்றுள்ள ஒரே பொருளில் வழங்குதல் வரையறுப்பாகும்.*

***பிள்ளை*** *என்னும் பொதுப்பெயரை வேளாளர்க்கு மட்டும் குலப்பட்டமாக வழங்குவதும், ஆண்பிள்ளையை அல்லது பெண்பிள்ளையை மட்டும் குறிக்க ஆள்வதும்,* ***கறி***[1] *என்னும் பொதுச் சொல்லால் ஊன்கறியை மட்டும் உணர்த்துவதும்;* ***குட்டி*** *என்னும் இளமைப் பெயரை ஆடும் மக்களுமாகிய ஈரினத்திற்குமட்டும் சிறப்பாய்ப் பயன்படுத்துவதும்; வரையறுப்பிற் கெடுத்துக்காட்டாம்.*

*யாம் நாம் என்னும் இரு பன்மைப் பெயர்களுள், முன்னதைத் தனித்தன்மைக்கும் பின்னதை உளப்பாட்டுத் தன்மைக்கும், வகுத்துக் கொண்டதும் ஒருவகை வரையறுப்பே.*

*சில பொதுச் சொற்கள் ஆள்வான் கருத்தின்படி உயர்ந்த பொருளையோ தாழ்ந்த பொருளையோ மட்டும் குறிக்கும். குலமகன் குலமகள் என்னும் தொடர்களின் முதற்சொல் உயர்குலத்தையே குறித்தல் காண்க.*

*சில பொதுச் சொற்கள், நற்பொருள் தீப்பொருள் ஆகிய இரண்டில் ஒன்றைமட்டும் உணர்த்தும். ஒழுக்கம் செய்கை குணம் மணம் என்பன நற்பொருளிலும், கருமம் காரியம் வினை நாற்றம் வீச்சம் என்பன தீப்பொருளிலும் உலக வழக்கில் வழங்கும். கருமம்*

*1. இது* Meat *என்னும் ஆங்கிலச் சொல்லையொத்தது.*

என்று பழந்தீவினையையும் வினை என்று பிறப்பிற்கேதுவான செயலையும், காரியம்[2] என்று கருமாந்தரத்தையும் குறிப்பர். நாற்றம் என்பது செய்யுள் வழக்கில் நற்பொருளுணர்த்தும்.

''நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்'' **(களவியல்,)**

என்றார் தொல்காப்பியர்.

''நாற்றம் உரைக்கும் மலருண்மை'' **(நான்மணிக். 47)**

என்றார் விளம்பிநாகனார்.

**இழைத்தல்** என்னும் வினை, பொதுவாய்த் தீமை செய்தலையே குறிக்கும்.

## 5. விரிப்பு (Extension)

ஒரு பொருட்குச் சிறப்பான சொல்லை, அதற்கினமான பிறபொருட்கும் வழங்குவது விரிப்பாம்.

கைம்மை நோன்பு நோற்றவளை மட்டும் குறிக்க வேண்டிய **கைம்பெண்** (கைம்பெண்டு, கைம்பெண்டாட்டி) என்னும் பெயர், இன்று கணவனையிழந்த பெண்டிர் எல்லார்க்கும் பொதுப்பெயராய் வழங்குகின்றது.

**பொன்** என்பது பலவகைத் தாதுக்களையும் பொதுவாகச் சுட்டுவதும், **செம்பு** என்பது பலவகைத் தாதுக்களாலும் செய்யப்படும் ஒருவகைக் கலத்தைக் குறிப்பதும், **தோடு** என்பது ஓலையாற் செய்யப்பட்ட காதணியை மட்டும் குறிக்காது பிற கருவிகளாற் செய்யப்பட்டவற்றையும் குறிப்பதும், **புள்** என்பது பறவை நிமித்தத்தை மட்டுமன்றிப் பல்வேறு நிமித்தங்களையும் பொதுவாகக் குறிப்பதும் விரிப்பின் வகையாம்.

இரும்பிற்குக் கரும்பொன் என்றும், வெள்ளிக்கு வெண்பொன் என்றும் பெயர்.

''தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று'' **(குறள். 931)**

என்னுங் குறள்தொடரில், பொன் என்பது இரும்பைக் குறித்தது. வாய்ச்சொல்லாற் குறிக்கப்படும் குறியை வாய்ப்புள் என்பர்.

2. இது வடார்க்காட்டு வழக்கு.

## 9
# ஒழுக்கவியற் சொற்கள்

### *1. நல்லார் இயல்பு*

*பிறரிடத் தன்புள்ளவர் நல்லார் என்றும், அஃதில்லாதவர் தீயார் என்றும் சொல்லப்படுவர். அன்புள்ள ஒருவர் ஒருசிலர்க்கேனும் நன்மை செய்யாதிருத்தல் இயலாது. அன்பு எங்ஙனமும் வெளிப் படும். அவ் வெளிப்பாடு ஏதேனுமொரு பொருட் கொடையாகவே யிருக்கும்.*

*''அன்பிலா ரெல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு''* ***(குறள். 72)***

*என்றார் திருவள்ளுவர்.*

*இவ் வுண்மையை உணர்த்துவது* ***நல்கு*** *என்னும் சொல். இது நன்மையை யுணர்த்தும் நல் என்னும் வேரினின்று பிறந்தது. நல்லவர் கட்டாயம் பிறர்க்கு ஏதேனும் நல்குவர் என்பது இதனாற் குறிக்கப் பெறும் கருத்தாகும்.*

### *2. முனிவர் இயல்பு*

*அழகிய குளிர்ந்த அருளையுடைய முனிவர்க்கு* ***அந்தணர்*** *என்று பெயர்.*

*''அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்*
*செந்தண்மை பூண்டொழுக லான்''* ***(குறள். 30)***

*என்றார் திருவள்ளுவர்.*

*இதனால், கைம்மாறு கருதாது எல்லா வுயிர்களிடத்தும் அன்பு செய்தலாகிய அருளில்லாதார்க்கு, அந்தணர் என்னும் பெயர் ஒரு சிறிதும் பொருந்தாதென்பது பெறப்படும்.*

### 3. அரசர் இயல்பு

அரசனுக்கும் குடிகட்குமுள்ள தொடர்பு தந்தைக்கும் மக்கட்குமுள்ள தொடர்பாகும். குடிகளை அரவணைத்துக் காப்பவனேயன்றி, அதிகாரத்தோடு ஆள்பவன் சிறந்த அரசனல்லன். அரசனைக் குறிக்கும் பெயர்களுள், **காவலன்** என்பது ஒன்றாகும். அரசனுக்குரிய தொழில் குடிகளைத் திறமையாய்க் காப்பதே என்னும் உண்மை, இச் சொல்லால் விளங்கும். ஓர் அரசனுடைய குடிகளை அவன் **அடிநிழலார்** என்று கூறுவதும் இக் கருத்துப்பற்றியே.

''மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்ந்து அறங்காப்பான் அல்லனோ **(திருஆரூர், 36)**

என்றார் சேக்கிழார்.

அரசன் குடிகளைத் துன்பவெயிலினின்று காத்தற்கு அடையாளமாகவே, வெண்கொற்றக்குடை தாங்கியுள்ளான்.

''கண்பொர விளங்கும்நின் விண்பொரு வியன்குடை
வெயின்மறைக் கொண்டன்றோ வன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ!'' **(புறம். 35 : 19 - 21)**

என்றார் வெள்ளைக்குடி நாகனார்.

''பலகுடை நீழலுந் தம்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்'' **(குறள். 1034)**

என்று அரசனுடைய நாட்டைக் 'குடைநீழல்' என்று வள்ளுவர் கூறியதும் இக் கருத்துப்பற்றியே.

### 4. கணவன் மனைவியர் இயல்பு

கணவனும் மனைவியும் ஒருயிரும் ஈருடலுமாக ஒருவர்க் கொருவர் உரிமை பூண்டிருப்பதனால், இருவர்க்கும் முறையே **கிழவன் கிழத்தி** என்று பெயர். கிழமை பூண்டவன் கிழவன்; கிழமை உரிமை. கணவன் மனைவியர் காதல் **உரிமை** யெனப்பட்டமைக்கும் இதுவே காரணம். இருவரும் ஒருவர்க்கொருவர் கண்போற் சிறந்தவராதலின் **கண்ணாளன் கண்ணாட்டி** எனவுங் கூறப்படுவர்.

மனைவிக்கு **வாழ்க்கைத்துணை** என்றும், **இல் இல்லாள் மனை மனைவி குடி** என்றும் பெயரிருப்பதால், மனைவி

கணவனுடன் ஒத்துழைத்து அவனுக்கு அடங்கி நடத்தல் வேண்டுமென்பதும், ஆடவன் பெண் துணையின்றி வாழ்க்கை நடத்துதல் இயலாதென்பதும், ஆடவன் வெளியேறிப் பொருளீட்டிக் கொணர்ந்து கொடுக்க மனைவி இல்லத்தி லிருந்துகொண்டே தன்னையும் தன் கணவனையும் தன் மக்களையும் பேண வேண்டுமென்பதும் பெறப்படும்.[1] வலவனுக் கடங்காத குதிரைக்குத் **தட்டுவாணி** என்றும் **சண்டி** என்றும் பெயர். இப் பெயர்கள் கணவனுக் கடங்காத மனைவியையுங் குறிக்கும்.[2]

## 5. ஆண் பெண் இயல்பு

ஆண்மையுள்ளவன் ஆண்; பெண்மையுள்ளவள் பெண். ஆண்மை மறம்; பெண்மை விரும்பப்படும் தன்மை. நெறிப்படக் கருதிய கருத்துகளையெல்லாம் வெளியிடுதலும், இருளுக்கும் பேய்க்கும் அஞ்சாமையும், உயிர்க்கிறுதி வரினும் ஒழுக்கம் தப்பாமையும், பற்றலரைக் கண்டால் பணியாது பொருதிறத்தலும், இடுக்கண் வருங்கால் நகுதலும் ஆண்மையாம்; முகத்தழகொடு அகத்தழகும் உடைமையும் ஆணவமின்றி யமைந்திருத்தலும், கல்வியறிவு நிரம்பியிருத்தலும், நல்ல கணவனுக்கடங்கி நடத்தலும் பெண்மையாம்.

## 6. வறுமையால் ஒழுக்கங்கெடுதல்

உயர்ந்த மக்கள் வறுமையிலும் செம்மையாயிருத்தல் கூடுமாயினும், பொதுவாக வறுமையால் ஒழுக்கங்கெடுவதே மக்களியல்பாம். போக்கிலி என்னும் சொல் ஒரு போக்குமில்லாத ஏழையைக் குறிக்கும் சொல். அது **போக்கிரி** எனத் திரிந்து, கருதியதைச் செய்துவிடும் கயவனைக் குறிக்கும். இச் சொற்றிரிபும் பொருட்டிரிபும், உணவுக்கில்லாதவன் ஒழுக்கங்கெடுவதும் வலிந்து பொருள் வெளவுவதும் திண்ணம் என்னும் பொதுவுண்மையை உணர்த்துவனவாகும். சிறு கூரைவீட்டைக் குச்சுவீடு என்றும், குச்சில் என்றும் கூறுவது வழக்கம். குடிசையில் வசிப்பவளைக் குறிக்கும் **குச்சுக்காரி** என்னும் சொல், ஒழுக்கங் கெட்டவளை யுணர்த்துவதும், மேற்கூறிய உண்மையை வலியுறுத்தும்.

---

1. மனைவி வீட்டுவேலையைச் செய்யவேண்டுமென்று இங்குக் கூறியது பெரும்பான்மைபற்றி யென அறிக.
2. Jade என்னும் ஆங்கிலச்சொல் அடங்காக் குதிரையையும் அடங்கா மனைவியையுங் குறிப்பது ஒப்புநோக்கத்தக்கது.

## 7. அகத்தழகின் சிறப்பு

முகத்தழகு யாவராலும் விரும்பப்படுவதொன்று. ஆனால் அகத்தழகு அதினும் சிறந்தது. ஆதலால் அழகின்மையை யுணர்த்தும் **பொல்லாங்கு பொல்லாப்பு** என்னும் சொற்கட்கு, தீமை தீங்கு என்னும் பொருள்கள் ஏற்பட்டுள்ளன.

பொல் என்பது அழகையுணர்த்தும் பகாச்சொல். பொன்மை அழகு; பொல்லாமை அழகின்மை.

பொல்– பொன் = அழகான தாது. பொல் + அம் = பொலம். பொலம் = பொன். பொலங்கழல் = பொற்கழல். பொல் + பு = பொற்பு. பொல்லுதல் = அழகாயிருத்தல். பொற்ற = அழகிய, நல்ல.

''பொற்ற சுண்ணமெனப் புகழ்ந்தார்'' **(சீவக. 885)**

என்றார் திருத்தக்கதேவர்.

பொல்லாத – பொல்லா = அழகில்லாத.

''பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே''

என்று ஔவையார் பாடுதல் காண்க.

பொல்லாங்கு தீது; பொல்லாப்புத் தீங்கு.

''புகைக்கினுங் காரகில் பொல்லாங்கு கமழாது''

என்று அதிவீரராம பாண்டியரும்.

''உள்ளதைச் சொன்னால் கொள்ளைக் கண்ணிக்குப் பொல்லாப்பு''

என்று பழமொழியும் கூறுதல் காண்க.

பொல்லான் பொல்லாதவன் என்பன தீயவனைக் குறிக்கும் பெயர்கள்.

## 8. தன்னலமின்மையால் கொள்கை தளராமை

ஒருவர் தன்னலத்தினால் கொள்கை தளர்வதும் அஃதின் மையால் உறைத்து நிற்பதும், ஒழுக்கம் குலம் மதம் கட்சி முதலிய பலதுறைகளிலும் கண்கூடாகக் காண்கின்றோம். எந்தக் கொள்கை யையும் உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டுமாயின், தன்னல மிருத்தல் கூடாது. கொள்கையென்றது இங்குப் பொதுநலக் கொள்கையை.

ஆசையின்மையை யுணர்த்தும் விராகம் என்னும் வட சொல்லின் திரிபாகு பெயரான (தத்திதாந்தமான) **வைராக்கியம்** என்னும் சொல் விடாப்பிடியை யுணர்த்துதல் காண்க. ஆசை யிருப்பின் விடாப்பிடி யிராதென்பதும், அஃதில்லாவிடின் விடாப்பிடி யிருக்குமென்பதும், இச் சொல்லால் அறியக் கிடக் கின்றன.

## 9. அண்டின உயிரைக் காத்தல்

அடைக்கலங் காத்தல் உயர்ந்தோர்க்குச் சிறந்த அறமாகும். பழந்தமிழரும் ஆப்பிரிக்க **மூர்** வகுப்பினரும் இவ் வறத்தைக் கடைப்பிடித்து வந்தனர்.

> ''இடைந்தவர்க் கபயம் யாமென் றிரந்தவர்க் கெறிநீர் வேலை
> கடைந்தவர்க் காகி ஆலம் உண்டவர்க் கண்டி லீரோ
> உடைந்தவர்க் குதவா னாயின் உள்ளதொன் றீயா னாயின்
> அடைந்தவர்க் கருளா னாயின் அறமென்னாம் ஆண்மை என்னாம்''
>
> **(கம்பரா. விபீண. 4, அடை : 111)**

என்று கம்பர் கூறுவது தமிழர் அறமே.

அடைந்தவர் மக்களாயின், அவர் தம்மால் அடையப் பட்டவரிடம் அடைக்கலம் வேண்டிப் பெறுவர். ஆனால், வாயில்லா அஃறிணை யுயிரிகள் எங்ஙனம் பேசும்? எங்ஙனம் வேண்டும்? இவ் வெளிய நிலையுணர்ந்தே, இல்லங்களை யடுத்து வாழும் சிற்றுயிரிகள் கொல்லும் ஆற்றல் வாய்ந்தனவாயினும், மக்கள் அவற்றைக் கொல்வதில்லை.

நல்லபாம்பு போன்றே அரணையும் நச்சுநீர் உடையது. 'அரணை தீண்டினால் மரணம்' என்பது பழமொழி. ஆயினும், மக்கள் அதைக் கொல்வதில்லை; அதுவும் ஒன்றும் செய்வதில்லை.

வீட்டையடுத்து வாழும் நல்லபாம்பும் பேணி வளர்க்கப் படின், அல்லது பாதுகாக்கப்படின், தீங்கு செய்யாதிருத்தலும், பலவிடத்தும், சிறப்பாக மலையாள நாட்டில் காண்கிறோம்.

வீட்டு முகட்டிலும் கூரையிறப்பிலும் கூடுகட்டி வாழ்வது **அடைக்கலான் குருவி**. ''பிறப்பிறப்பிலே'' என்றார் **காளமேகரும்.** சிறுவரும் எளிதாய்ப் பிடித்துத் தீங்கிழைக்கும் வண்ணம், இக் குருவிகள் தாமாக வந்து இல்லங்களிற் கூடுகட்டி வாழும். பெரியோர் இவற்றைக் காவாவிட்டால் இவற்றிற்கு வாழ்க்கையில்லை. இதை யுணர்ந்த பெரியோர் இவற்றிற்கு அடைக்கலான் எனப்

*பெயரிட்டனர். இவை இல்வாணரை அடைக்கல மடுத்ததென்பதும், இவற்றைக் காத்தல் அவர் கடமை என்பதும், இச் சொல்லாற் குறிக்கப்படும் கருத்தாகும்.*

## 10. தலைவன் ஒழுக்கம்

*எக்கூட்டத்தையும் நடத்தும் தலைவனுக்கு ஒழுக்கம் இன்றி யமையாததாகும். இக் கடமையை இக்காலத்தார் கவனிப்பதில்லை; உணர்வதுமில்லை. தலைவன் செம்மையா யிருந்தால்தான் அவனைப் பின்பற்றுவோரும் செம்மையாயிருப்பர். பிறர் ஒன்றைச் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறவன் அல்லது விரும்புகிறவன் தானும் அதைச் செய்யவேண்டும். சொல்லுகிறவன் முந்திச் செய்தால்தான் கேட்போரும் பிந்திச் செய்வர். ''சொல்வதெளிது; செய்வது அரிது.'' சொல்வதைச் செய்து காட்டினால்தான் சொல் வலியுறும்; கேட்போரும் கைக்கொள்வர். பெரியோரைப் பின்பற்றுதலே சிறியோர் இயல்பாதலின், பெரியோரும் தலைவரும் தகாச் செயலை நீக்கித் தக்க செயலையே செய்தல் வேண்டும்.*

*தலைவனுக்குரிய பெயர்களுள்* ***செம்மல்*** *என்பது ஒன்று. இது செம்*[3] *என்னும் சொல்லினின்று திரிந்தது. செம்மையாய் ஒழுகுபவன் செம்மல். இச்சொல்லால், எத் தலைவனுக்கும் ஒழுக்கம் இன்றியமை யாதது என்பது பெறப்படும். ஒழுக்கத்தில், சிறியோர் பெரியோரைப் பின்பற்ற வேண்டுமென்னுங் கருத்துப்பற்றியே, பிறர்க்கு ஒல்லும் வகையில் செல்லும் வாயெல்லாம் நன்மை செய்தற்கு,* **ஒப்புரவு** *(அல்லது ஒப்புரவொழுகல்) என்று பெயர்.*[4] *அலங்கரித்தலை ஒப்பனை செய்தல் என்பதும் இக் கருத்துப் பற்றியே.*

## 11. சிறந்த விருந்து

*உறவினரையும் நண்பரையும் பேணுதலும் அவர்க்கு விருந்தளித்தலும் இல்வாழ்வான் கடமையெனினும், புதுமையாய் வந்தோர்க்கு விருந்தளித்தலே சிறப்பாம்.* **விருந்து** *என்னும் சொல் முதலாவது விரும்பிச் செய்யும் வேளாண்மையைக் குறிக்கும். பின்பு*

---

*3. பண்புச் சொற்களை 'மை' விகுதி கொடுத்துக் கூறுவது இலக்கணவாசிரியர் வழக்கு. அவ் விகுதியின்றிச் சொல்லை மட்டும் கூறுவது மொழிநூலாசிரியர் வழக்கு எனவறிக.*

*4. 'இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்,*
*அறவிலை வாணிகன் ஆயலன் பிறரும்,*
*சான்றோர் சென்ற நெறியென,*
*ஆங்குப் பட்டன் றவன்கை வண்மையே' (புறம். 134)*
*என்றார் உறையூர் மோசியார்.*

அது ஆகுபெயராய்ப் புதுமையாய் வரும் விருந்தாளையும் அவருக்கிடும் உணவையும் குறித்தது. விருந்துண்போரில் சிறந்தவர் புதிதாய் வந்தவர் என்பது தமிழர் கருத்து. இதனால், தமிழரின் விருந்தோம்பற் சிறப்பு அறியப்படும்.

### 12. உண்மையின் இயல்பு

உண்மை என்பது சொல்லைமட்டும் பற்றிய அறமன்று. உள்ளும் புறம்பும் ஒத்திருப்பதே உண்மை. உள்ளம் வாய் மெய் ஆகிய முக்கரணங்களும், ஒருங்கே உண்மையில் ஒத்திருத்தல் வேண்டும். இவ் வியல்பை யறிந்தே, **உண்மை வாய்மை மெய்ம்மை** என உண்மைக்கு முப்பெயரிட்டனர் முன்னோர். உள்ளத்தைப் பற்றியது உண்மை; வாயைப் பற்றியது வாய்மை; மெய்யைப் பற்றியது மெய்ம்மை.[5]

உண்மை சொல்லைமட்டும் பற்றியதென்னும் தப்புக் கொள்கையாலேயே, பொல்லாதவர் பொய்யாணையிடுவதும் பிறர் அதை நம்பி ஒப்புக்கொள்வதும் நேர்கின்றன.

உளத்தொடு பொருந்தாது சொல்லொடும் மெய்யொடும் மட்டும் பொருந்துவது ஒருபோதும் உண்மையாகாது. உளத்தொடு பொருந்திய உண்மையுரைப்பவர் திருந்திய வொழுக்க முடைய வராயிருத்தல் திண்ணம் என்னும் கருத்தே,

''பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று'' **(குறள். 297)**

என்ற குறளின் அடிப்படை என்க.

### 13. உடல் வலியால் தீமை

ஒருவர்க்கு உடல்போன்றே உள்ளமும் வலிமையடைதல் வேண்டும். உள்ள வலிமைக்கு அடிப்படை அறிவே. இதனால், அறிவை 'உரன்' என்றார் திருவள்ளுவர். உரன் வலிமை.

''உரன்என்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து'' **(குறள். 24)**

என்பது குறள்.

---

5. மெய்ம்மை என்னுஞ் சொல்லை 'மெய்' என்னும் உடம்பின் பெயரடிப் பிறந்ததாகக் கொள்ளுதலால் ''பொய்யான வுடம்பை மெய்யென்பது மங்கல வழக்கு'' என, இலக்கண உரையாசிரியர் கூறுவது பொருந்தாது.

'அறிவே ஆற்றல்' (Knowledge is power) என்பர் ஆங்கிலரும்.

உளவலிமையொடு கூடிய உடல்வலிமை கூடத் தீமை விளைக்கும் என்பது, துறவியர் கருத்து. இதனாலேயே அவர் நோன்பாலும் தவத்தாலும் தம் உடலை ஒடுக்குவர். உளவலிமை யோடு கூடாத உடல் வலிமையோ, பிறர்க்குப் பெருந்தீங்கு விளைப்பது திண்ணம்.

உடல் பருத்தவனைக் **குண்டன்** என்றும், **தடியன்** என்றும் கூறுவது உலக வழக்கு. இப் பெயர்கள் தீயவன் அல்லது கொடியவன் என்னும் பொருளைப் பெற்றுள்ளன. தேவார ஆசிரியரும் திவ்வியப் பனுவல் ஆசிரியருங்கூடச் சமணரைக் குண்டர் என்று கூறுவர்.

உடல் தடித்தவன் குறும்பு அல்லது தீங்கு செய்வான் என்பது, மேற்கூறிய கூற்றால் விளங்கும்.

### 14. அறக்கடன்

ஒருவன் கடமையாகச் செய்யவேண்டிய பல வினைகளுள், அறமும் ஒன்றாகும். உயர்திணையைச் சார்ந்த காரணத்தினாலும், உலகம் கடவுளைத் தலைமையாகக் கொண்ட ஒரு மாபெருங் குடும்பம் என்னுங் கருத்தினாலும், ஒவ்வொருவனும் பிறர்க்கு, அவருள்ளும் சிறப்பாக ஏழை எளியவர்க்குத் தன்னால் இயன்றவரை உதவியும் நன்மையும் செய்தல்வேண்டும். இங்ஙனம் செய்தற்குக் **கடப்பாடு** என்று பெயர்.

''கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு'' **(குறள். 211)**

என்றார் திருவள்ளுவர்.

கடப்பாடு என்னும் சொல்லின் முதற்பொருள் கடன் என்பதே. ஒவ்வொருவரும் அறஞ்செய்யவேண்டுவது கடன் என்னும் கருத்தினால், அச் சொல்லுக்கு ஒப்புரவொழுகல் (உபகாரஞ் செய்தல்) என்பது வழிப் பொருளாய்த் தோன்றிற்று.

### 15. படைஞன் இயல்பு

படைஞர் போரில் ஒருகால் தம் உயிரிழக்குமாறு பகைவரைக் கொல்லுந் தொழிலை அல்லது வெல்லுந் தொழிலை மேற்கொண் டிருப்பதனாலும், அவர்களின் நாட்டுத் தொண்டும் நிலையாமைச்

*சிறப்பும் நோக்கி அவர்கட்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமை அல்லது ஒழுக்கவிதித் தளர்ச்சியினாலும், அவர்கள் பிறர்பொருளை விரும்பியவிடத்து அவரைக் கேளாமலே எடுத்துக்கொள்வது வழக்கம். இதற்குத் **தாராளம்** என்று பெயர். தார் என்பது சேனை. ஆளம் என்பது ஆளின் தன்மை. தாராள், படைஞன், தாராளம் ஒருவரைக் கேளாமலே அவர் பொருளை எடுத்துக்கொள்ளும் படைஞன் இயல்பு. ஒருவர்க்குரிய இடத்தில் அவரைக் கேளாமற் புகுவதும் தாராளம் எனப்படும். பொருளை வெளவுவதும் உரிமையை வெளவுவதும் ஒன்றே.*

### 16. மங்கல வழக்கு

*ஒருவர் துன்புறும்போது, அவரை ஆற்றித் தேற்றுவதும் அவரொடு தாமும் சேர்ந்து துன்புறுவதும், உயர்ந்தோர் இயல்பு. கண்ணன்ன கேளிரை இழப்பதும், எரிபோன்ற வறுமையால் வாடுவதும் பெருந்துன்பமாம். அத் துன்பங்களை அவற்றிற்குரிய சொல்லாற் குறிப்பினும் அவற்றால் துன்புறுவோர்க்குத் துன்பம் பெருகுமென்று கருதி, இன்பமும் நன்மையும் குறிக்கும் சொற்களால் அவற்றைக் குறித்து வந்தனர் பண்டை மேலோர். இதனை மங்கல வழக்கென்பர் இலக்கண வாசிரியர்.*

*செத்தானைத் **துஞ்சினான்** என்றும், சாவைப் **பெரும்பிறிது** என்றும், சுடுகாட்டை **நன்காடு** என்றும், தாலியறுத்தலைத் **தாலி பெருகிற்று** என்றும், வறுமையை **நிரப்பு** என்றும், வறுமைப் பாட்டை **நல்கூர்தல்** என்றும் கூறுவது மங்கல வழக்காம்.*

*துஞ்சுதல் தூங்குதல், நிரப்பு நிறைவு, நல்கூர்தல் நன்மை மிகுதல்.*

*இனி, சாவுக்கேதுவான நச்சுயிரிகளையும் மங்கலச் சொல்லாற் குறிப்பது வழக்கம். **எ - டு** : நல்லபாம்பு.*

### 17. பெரியோரைச் சுட்டாமை

*பெரியோரைக் கையினாற் சுட்டுவது அவமதிப்பென்று கருதி அங்ஙனம் செய்வதில்லை. சுட்டநேர்ந்தவிடத்துக் கையாற் சுட்டாது சொல்லாற் சுட்டுவது வழக்கம். அங்ஙனம் சொல்லாற் சுட்டும் போதும் அவர்கள் இவர்கள் என்னும் படர்க்கைச் சொல்லாலன்றி, நீர் நீங்கள் என்னும் முன்னிலைச் சொல்லாற் சுட்டக் கூடாதென்று*

*கொண்டு, தாங்கள் என்னும் படர்க்கைச் சொல்லாற் சுட்டுவர். அதுவும் நாளடைவில் முன்னிலைத் தன்மையடைந்து விட்ட தென்றும், மிகப் பெரியோர்க்கு அச் சொல் போதாதென்றும் கருதி, மடத்தம்பிரானரை* ***அங்குத்தை*** *யென்னும் படர்க்கைச் சொல்லால் முன்னிலைப்படுத்திக் கூறுவது சிவமட மரபு.*

*அங்குத்தை (அங்குற்றை) யென்பது அவ்விடம் என்று பொருள்படும் சொல். தம்பிரானொடு உரையாடுபவர் நீங்கள் என்னும் பொருளில் இச் சொல்லை வழங்குவர்.*

## 10

# சொற்குடும்பமும் குலமும்

மக்களைப் போன்றே, சொற்களும் குடும்பங் குடும்பமாகவும் கூட்டங் கூட்டமாகவும் இயங்குகின்றன. குடும்பத்தினின்று குடும்பும், குடும்பினின்று குடியும், குடியினின்று குலமும், குலத்தினின்று இனமும், இனத்தினின்று வரணமும், மக்கள் மரபில் கிளைத்துப் பெருகுவதுபோலச் சொன்மரபிலும் கிளைத்துப் பெருகுகின்றன.

சொன்மரபை விளக்குதற்கு, ஈங்கொரு குடும்பமும் அதன் வழிப்பட்ட குலமுங் காட்டப்பெறும்.

**'உல்'** என்பது வளைவைக் குறிக்கும் ஒரு வேர்ச்சொல்.

உல்– உலவு. உலவுதல் = வளைதல், சுற்றுதல், திரிதல். உல்– உலா. உலா = சுற்றித் திரிதல், அரசன் நகரை வலமாகச் சுற்றுதல், அதைப் பாடிய பனுவல்.

உலவு– உலாவு, உலா = உலாத்து.

உல்– உல. உலத்தல் = வளைதல், உருளுதல், சுழல்தல்.

உல– உலம் = வளைவு, உருட்சி, திரட்சி, சுழற்சி.

உலம் + வா = உலமா. உலம்வரு– உலமரு.

உலமருதல் = சுழலுதல். உலமா– அலமா.

உலம்– உலக்கை = உருண்டு திரண்ட தடி.

உலவு– உலகு– உலகம் = உருண்டையா யிருப்பது.

உல்– உர்– உரவு = உலவு.

உர்– உருள்– உருளி, உருளை, உருண்டை.

உருள்– உருட்டு. உருண்டை– உண்டை.

உருள்– உருளை– உருடை – ரோதை (கொ.)

உல்– உழல். உழலுதல் = சுழலுதல், வருந்துதல்.

## 1. உல் – குல்

குல்– குலவு. குலவுதல் = வளைதல்.

குல்– குள்– குளம்– குளம்பு = வட்டமான பாதம். குளம்– குடம் = வளைவு; குடம்– குடந்தம் = வளைவு, வணக்கம்; குடம்– குடா = வளைவு, வளைந்த கடல். வளைகுடா விரிகுடா என்னும் வழக்குகளை நோக்குக. குடாவடி = வளைந்த பாதம், 'குடாவடி யுளியம்' என்றார் இளங்கோவடிகள் (சிலப்.).

குடம்– (குடகம்)– கடகம் = வட்டமான பெட்டி, தோள்வளையல். குடம்– குடி = வளைவு. குடி– குடில்– குடிலம் = வளைவு. குடிகை – கடிகை = வட்டமான நாழிகை வட்டில், தோள்வளையல் நான்மணிக்கடிகை என்னும் பெயரை நோக்குக.

குடம்– குடை = வளைவு. குளம்– குணம்– குணக்கு = வளைவு. குணக்கு– குணுக்கு = காதுவளையம். குல்– குர்– குரம் = குளம்பு. குரம்– குரங்கு = வளைவு, கொக்கி. குரம்– குரவை = வட்டமாக நின்று ஆடுங் கூத்து.

குணுகுதல் = சிரித்துக் குனிதல். குல்– குன்– குனி. குனிதல் = வளைதல். குன்– குனுகு. கூள்– கூளி = வளைந்த வாழைப்பழவகை. கூன் = வளைவு, வளைந்த முதுகு. கூன்– கூனி = வளைந்த சிற்றிறால். கூன்– கூனல். கூன்– கூனை = கூனுள்ள தோற்சால்.

குள்– கொள் = வளைந்த காணக்காய். கொள்– கொட்பு = சுற்று. கொள் – கோள் = கதிரவனைச் சுற்றும் கிரகம். கொள் – (கொட்கு) – கொக்கு = வளைந்த கழுத்தையுடைய நீர்ப்பறவை. கொட்கி– கொக்கி = வளைந்த மாட்டி. கொள்– (கொம்) – கொம்பு = வளைந்த கோடு. கொள் – கொடு. கொடுவாள் = வளைந்த கத்தி. கொடுமை = நேர்மையின்மை. கொடுங்கோல் = வளைந்த கோல். கொடுக்காய்ப் புளி = புளிபோல வளைந்த காயையுடைய மரம். கொடு– கொடுக்கு = வளைந்த வுறுப்பு. கொள்– கோள்– கோளம் = உருண்டை. கோள்– கோளா = உருண்டையான இனிப்புப் பலகாரம். குல்–

*கொல்— கோல்— கோலி = உருண்டையான விளையாட்டுக் கருவி.*

*கோள்— கோண்— கோணு. கோண்— கோணம் = வளைவு, வளைந்த மூக்கு, பிறைமுக அம்பு. கோண்— கோணல். கோண்— கோணை— கோணையன்.*

*கோண் — கோடு = வளைவு. கோடுதல் = வளைதல். கோடு — கோட்டம் = வளைவு, ஊர்கோள். கோடு — கோட்டை = வளைந்த மதில், மதில் சூழ்ந்த இடம், ஊர்கோள்.*

## *2. உல் - சுல்*

*சுல்— சுலவு. சுலவுதல் = வளைதல்.*

*சுல் — சுள் — சுளை — சுளையம். சுளையமாடுதல் = சுற்றித் திரிதல். சுள் — சுளி. சுளித்தல் = முகத்தோலை வளைத்தல். சுளி — சுழி = வட்டமான கோடு, அதனாற் குறிக்கப்படும் குறும்பு, நீர்ச்சுற்று. சுழி— சுழியம்— சுசியம் = உருண்டைப் பலகாரவகை. சுள்— (சுட்டு) — சுட்டி = வட்டமான கோடு அல்லது புள்ளி, வட்டமான நெற்றியணி, சுழி சுழியாற் குறிக்கப்படும் குறும்பு, குறும்பன். சுழி — சுழியன் = குறும்பன்.*

*சுல் — சுன் — சுன்னம் = வட்டம், வட்டமான கோடு. சுல் — சுற்று. சுற்றுதல் = வளைதல், திரிதல், சூழ்தல், சுழலுதல். சுழி— சுழல்.*

*சுள் — (சூள்) — சூழ். சூழ்தல் = வளைதல். சுல் — சுர் — சூரல் = சுழல்வளி. சுர் — (சுறு) — சூறை = சுழல்வளி. சூறை + வளி = சூறாவளி.*

## *3. உல் – துல்*

*துல்— துள்— துண்டு— துண்டம் = வளைந்த மூக்கு. துண்டு— துண்டி — தூண்டி = வளைந்த முள். தூண்டி — தூண்டில்.*

*துள் – (துடம்) – தடம் = வளைவு;*
*''தடஎன் கிளவி கோட்டமும் செய்யும்''* ***(உரியியல், 23)***

*என்பது தொல்காப்பியம்.*

*துல் — தில் — திரி. திரிதல் = சுற்றுதல். திரித்தல் = வளைத்தல், முறுக்குதல், உருட்டுதல். திரி = முறுக்குண்ட துணி அல்லது கயிறு. திரி — திரிகை = சுற்றும் கல் அல்லது சக்கரம். திரிகை*

– திகிரி = சக்கரம் (இலக்கணப்போலி). திர் – (திரு) – திரும் – திரும்பு. திரும்புதல் = வளைதல். திருமுதல் = வளைதல்.

திரும் – தெரும். தெரும் + வரல் = தெருமரல்.

''அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி'' **(உரியியல், 13)**

என்பது தொல்காப்பியம்.

திரு – திருகு. திருகுதல் = முறுக்குதல். திருகு – திருக்கு = முறுக்கு, வஞ்சனை.

## 4. உல் – நுல்

நுல் – நுள் – நுடம் = வளைவு, வளைந்த கால். நுல் – நுறு – நெறி. நெறித்தல் = வளைதல், வளைத்தல்.

## 5. உல் – புல்

புல் – புர் – புரள் – புரளி. புரள் – புரட்டு – புரட்டல். புரள் – பிறழ். புரண்டை – பிரண்டை – திருகியிருக்கும் கொடிவகை.

புர் – புரி. புரிதல் = வளைதல். புரி – புரிசை = வளைந்த மதில். புரி = மதில் சூழ்ந்த நகர், முறுக்குகுண்ட கயிறு அல்லது நூல். புர் – புரு – புருவம் = வளைந்த கண்பட்டை.

புரி – பரி – பரிசு – பரிசல் = வட்டமான மிதவைக் கூடை. பரி – பரிதி – பருதி = வட்டமான கதிரவன். பரி – வரி = வளைந்த கோடு, கோடு. வரிதல் = வளைத்துக் கட்டுதல்.

புல் – புள் – பள் – பண் – பண்டி – வண்டி = வளைந்த சக்கரம், சக்கரத்தையுடைய சகடம். கபிலையேற்றச் சக்கரத்தைக் கமலை வண்டி என்று உழவர் கூறுதல் காண்க.

பண்டி – பாண்டி – பாண்டில்.

பாண்டி = வட்டமான ஓடு, அதைக் கொண்டு விளையாடும் விளையாட்டு. பாண்டில் = வட்டமான கிண்ணம், அகல், தாமரை, உருண்டு திரண்ட எருது.

## 6. புள் – பள் – வள்

வள் – வள்ளம் = வட்டமான கலம், மரக்கால். வள் – வள்ளி = வளைந்த கொடி. வள் – வளார் – விளார் – மிலாறு = வளைந்த குச்சு அல்லது பிரம்பு. வள் – வளி = வளைந்தடிக்கும் காற்று.

*வள்— வளை = வளைந்த சங்கு, வளையல்.*

*வளை — வளையல், வளையம், வளைவி. வளை — வளைவு — வளவு. வளை— வளைசல் — வளசல். வளை + அகம் = வளாகம் = வளைந்த அல்லது சூழ்ந்த இடம்.*

*வள்— வண்— வணர் = யாழ்க்கோட்டின் வளைந்த பாகம். வணர்— வணரி = வளைதடி. வண் — வணம். வணங்கு — வணக்கம். வணங்குதல் = வளைதல், வழிபடுதல். வணங்கு — வாங்கு. வாங்குதல் = வளைதல். வாங்கு — வங்கு — வங்கி = வளைந்த வளையல், வளைந்த கத்தி (பிச்சுவா).*

*வண்— வண்டு = வளையல், வட்டமான வண்டுவகை. வள்— வட்டு = வட்டமான ஓடு, வட்டமான அச்சுக் கருப்புக்கட்டி.*

*வட்டு — வட்டம். வட்டு — வட்டி = வட்டமான பெட்டி. வட்டி — வட்டில் = வட்டமான கலம்.*

*வட்டி — வாட்டி = வளைப்பு, முறை, தடவை.*

*வட்டு — வட்டை = சக்கரச்சூட்டு.*

*வட்டை — வடை = வட்டமான பலகாரவகை. புல் — பல் — வல்.*

*வல் — வல. வலத்தல் = வளைதல், வளைத்தல். வல் — வலை = வளைந்த கயிற்றுக் கருவி.*

*வள்— வாள் = வளைந்த கத்தி, கத்தி.*

*வாள்— வாளி = வளையம், பிடிவளையமிட்ட கடைகால், பிறைமுக அம்பு.*

*வாள் — வாடு — வட்டம் = வளைவு, முகம் வளையும் வருத்தம், பயிர்வளையும் வறட்சி, சரிவு.*

*வாள் — (வாளம்) — வாணம் = வளையும் நெருப்பு வேடிக்கைக் கருவி, பிறைமுக அம்பு.*

## 7. உல் – முல்

*முல் — முள் — (முளம்) — முடம் = வளைவு, காலின் வளைவு.*

*முடம் — முடங்கு. முடங்குதல் = வளைதல், மடிதல், தூங்குதல்.*

*முடங்கல் = ஓலைச்சுருள், திருமுகம்.*

*முடங்கு – மடங்கு. மடங்குதல் = வளைதல், திரும்புதல், அடங்குதல். மடங்கு = மடியளவு, திரும்பிப் பார்த்துச் செல்லும் அரிமா, அதைப்போன்ற கூற்றுவன்.*

*மடங்கு – மடக்கு = மடக்கும் கத்தி, ஒரு சொல் திரும்பத் திரும்ப வந்து பொருள் வேறுபடும் சொல்லணி.*

*முடம் – முடி – மடி. மடிதல் = வளைதல், மடங்குதல்.*

*மடி = மடங்கிக் கிடக்கும் சோம்பல், சோம்பேறி, மடிக்கும் ஆடை, அரைமுன் மடித்துக் கட்டும் ஆடைப் பகுதி, மடங்கு, கட்டுக்கிடை, அதனால் உண்டாகும் நாற்றம்.*

*முல் – முர் – முருகு = பிறைபோல வளைந்த காதணி.*

*முல் – முர் = முறி. முறிதல் = வளைதல், வளைந்து ஒடிதல். முறி – மறி. மறிதல் = மடங்குதல், மறித்தல் = மடக்குதல்.*

*முறு – முறுகு. முறுகுதல் = திருகுதல். முறுகு – முறுக்கு. முறு – முறை = வளைவு, தடவை* (turn).

*முறு – முற்று. முற்றுதல் = சூழ்தல். முற்று – முற்றுகை. முற்றுகையிடுதல் = படைகொண்டு பகைவர் நகரைச் சூழ்தல்.*

*மேற்காட்டிய சொல் வரிசையில் **உல்** என்பதிலிருந்து **உழல்** என்பது வரையும் ஒரு **குடும்பமாகும்**. அதனொடு **குல் சுல் துல் நுல் புல் முல்** என்னும் வழிவேர்கள் மட்டும் சேர்ந்து ஒரு குடும்பமாகும். இவ் வழிவேர் ஒவ்வொன்றினின்றும் திரிந்த சொற்றொகுதி ஒவ்வொரு **குடியாகும்**. முதலிலிருந்து முடிவு வரை எல்லாஞ் சேர்ந்து ஒரு **குலமாகும்** என அறிக.*

***உல்** என்னும் வேரிலிருந்து முற்றுகை என்னும் சொல்வரையும் எல்லாச் சொற்களும் தொடர்புற்றிருப்பதையும், வளைவு என்னும் ஒரே கருத்தையடிப்படையாகக் கொண்டு அவை தத்தம் பொருளை யுணர்த்துவதையும், உயிரொடு கூடி மொழிமுதல் வரும் எல்லா மெய்களும் அடிவேருடன் சேர்ந்து வழிவேர்களைப் பிறப்பித்தலை யும், பகர முதற் சொல்லின் திரிபாக வகர முதற் சொற்கள் தோன்றுதலையும், மொழிமுதல் உகரத்தின் திரிபாக அகரமும் எகரமும் வருதலையும், எல்லாச் சொற்கும் காட்டப்படும் பொருள்*

*இன்றும் இருவகை வழக்கிலும் வழங்குவதையும், இவற்றுள் எதுவேனும் எவையேனும் வடமொழிச் சென்று வழங்கினால் அவை தமிழினின்று அங்குச் சென்றன என்று கொள்வதல்லது வடமொழியி னின்று தென்மொழிக்கு வந்தன என்று கொள்வது ஒருசிறிதும் உத்திக்கும் பகுத்தறிவிற்கும் பொருந்தா தென்பதையும், தெற்றெனக் கண்டுகொள்க.*

# குறுக்க விளக்கம்

| | |
|---|---|
| எ - டு. | எடுத்துக்காட்டு |
| கலித். | கலித்தொகை |
| குறுந். | குறுந்தொகை |
| சிலப். | சிலப்பதிகாரம் |
| செய். | செய்யுளியல் |
| புறம். | புறநானூறு |

# குறிப்புகள்

சீர்த்தபுகழ்ப் பாவாணர் சேர்த்தளித்த செல்வத்தை
ஆர்த்தசொல் லாராய்ச்சி யாரமுதைக் – கூர்த்தாய்ந்து
வற்றா வளமென்ன வாரி வழங்கிடுவம்
கற்றோர் உவப்பக் கனிந்து.

பேராசிரியர் இரா.மதிவாணன்

'பெரியார் குடில்'
பி.11. குல்மொகர் குடியிருப்பு,
35, செவாலியே சிவாசி கணேசன் சாலை,
தியாகராயர்நகர், சென்னை – 17.